
www.tamilarangam.net

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ்-123 யூன்.05- யூன்.18, 1997 விலை ரூபா. 10.00



"யாழ் மக்கள் சுதந்திரத்தையும் உரிமையையும் இப்போது தான் அனுபவிக்கிறார்கள்!"

–அமைச்சர் இந்திக–



## வவுனியா: கொத்தடிமை வாழ்க்கை

## மட்டக்களப்பு: இரையாகும் பெண்கள்

## முஸ்லீம் ஊர்காவற் படை: முஸ்லீம்களின் காவலர்கள்?

## யுத்தம்: ஒரு சூழலியல் பிரச்சினை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு - 03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 300
வெளிநாடு - U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04, ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புக்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.


# தரமுயர்த்தப்பட்ட செயலகத்தின் தரங்கெட்ட சேவை!

மக்களுக்கு சேவையாற்றவென் 1993ம் ஆண்டு தரமுயர்த்தப்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் தற்போது ஊழல்கள் மலிந்து காணப்படுகின்றன.

இப்பிரதேச செயலகத்தில் கணக்கு கிளைக்கு பொறுப்பாகவிருந்த கணக்காளர், நிதி உதவியாளர், விடய எழுதுநர் ஆகியோரின் கூட்டில் பல மோசடிகள் நடந்துள்ளன. கடந்த ஒகஸ்ட் மாதம் 1996ம் ஆண்டு 10.000ரூபா மோசடி ஒன்று மட்டக்களப்பு கணக்காய்வு அத்தியட்சகர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு பொறுப்பான வர்கள் விடயஎழுதுநர் நேரடி மேற்பார்வையாளர், நிதிஉதவியாளர், கணக்காளர் என்பவர்களாவர். இப்பணத்தை இவர்கள் தமக்கிடையே பிரித்துக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

இதே போன்று இன்னும் பல மோசடிகளை 1993இலிருந்து இம் மூவரும் செய்து வந்துள்ளனர். ஒழுக்காற்று நடவடிக்கையின் பிரகாரம் கணக்காளர், மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். நிதிஉதவியாளர் கல்வித்திணைக்களத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆனாலும் இவர்கள் செய்த மோசடிகள் மேலிட செல்வாக்கினால் மறைக்கப்பட்டுள்ளது. விடய எழுதுநர் பிரதேச செயலாளரின் உதவியுடன் இன்னமும் இப்பிரதேச செயலகத்திலேயே உள்ளார்.

இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பத்தாயிரம் ரூபா மோசடி விடயம் கச்சேரியில் நடவடிக்கையில்லாமல் தேங்கிக்கிடக்கின்றது. சம்பவம் நடந்து ஆறு மாதங்களுக்கு மேலாகின்றது. குற்றவாளிகளை தண்டிக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதைவிட கடந்த காலங்களில் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடி நடவடிக்கைகள்.

✱ பிரதேச செயலக விழா சம்பந்தமாக நிதிஉதவியாளரால் இரண்டு முற்பணங்கள் ரூபா இருபதாயிரம் மற்றும் ரூபா இருபதாயிரம் எடுக்கப்பட்டுள்ளது. இவை முறையாக திணைக்களத் தலைவரால் அங்கீகரிக்கப்பட வில்லை. முற்பண பதிவேட்டில் பதியப்படவுமில்லை. இவர் இப்பணத்தில் குறிப்பிட்டளவை செலவு செய்து விட்டு மீதியை கையாடிவிட்டார். இதற்கு உடந்தையாக கணக்காளர் செயற்பட்டுள்ளார்.

✱ 1993 இலிருந்து நடைபெற்ற புனர்வாழ்வு கொடுப்பனவுகளான மீளக்குடியமர்வு கொடுப்பனவு, தொழில் பாதிப்பு கொடுப்பனவு போன்றவற்றில் சில கிராம சேவையாளர்களுடன் இணைந்து வேடர்குடியிருப்பு, மன்முனை, மாவிலங்கத்துறை போன்ற இடங்களில் கிராமத்தில் இல்லாத மக்களின் பெயர் எழுதப்பட்டு அவற்றை நிதிஉதவியாளரும் கணக்காளரும் சுருட்டியுள்ளனர்.

✱ மோட்டார்வாகன சாரதி உத்தரவுப்பத்திரம் வழங்கலில் நிதி உதவியாளர் எழுதுநருடன் சேர்ந்து சித்திபெறாத 100 சாரதி விண்ணப்பதாரர்களுக்கு தற்காலிக உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், விடயஎழுதுநருக்கு மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✱ கணக்காளர் நிதி முகாமையாளர் கணக்குகள் குப்பைபோன்று காணப்படுகின்றது. அவர்கள் இது வரை செய்து முடிக்காத விடயங்கள் பின்வருமாறு.

1. வங்கிக் கணக்கு கூற்று 1993இலிருந்து இற்றை வரை.
2. வைப்புக்கணக்கு கூற்று 1993இலிருந்து இற்றை வரை
3. கூட்டுநிதிக்கணக்கு பிழையாக செய்யப்பட்டுள்ளது. இதில் மோசடிகளும் இடம் பெற்றுள்ளன.
4. ஓட்டப் பதிவேடு (Office Vehicle) 1993இலிருந்து இற்றை வரை பேணப்படவில்லை.

இதையெல்லாம் விட மன்முனைப் பற்று பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் பல ஆண்டுகளாக அரசாங்க காணிகளில் அத்துமீறி மணல் ஏற்றுதல் பாரியளவில் இடம் பெற்று வருகின்றது. இதனால் இயற்கை சூழ்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றது. இவற்றை தடுக்கவேண்டியவர்களின் பொக்கற் நிரம்புவதால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

ஆரையம்பதி பிரதேச எல்லைக்குள் சாராயத்தவறணை ஒன்று உண்டு. எதுவிதமான சட்டமும் இச்சாராய தவறணைக்கு அமைவாக இல்லை. இவ் விடயத்திலும் அதிகாரிகள் பொக்கற் நிரம்பினால் போதுமென்ற நிலையேயுள்ளது. மோட்டார் வாகன சாரதிப்பத்திரம் வழங்குவதிலும் பாரிய தில்லுமுல்லுகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவை எல்லாம் தெரிந்தும் அரசாங்க அதிபர் ஏ.கே.பத்மநாதன் அவர்கள் மட்டும் இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தான் வியப்பாக உள்ளது? ○

# 'லொட்ஜ்' நிர்வாகியின் அட்டகாசம்!

கொழும்பு -05 டிக்மன்ஸ் ரோட் இலக்கம் 49இல் அமைந்துள்ள "பூரணி இன்ஸ்" லொட்ஜில் தனியாகவும் குடும்பங்களாகவும் பலர் தங்கியுள்ளார்கள். இந்த லொட்ஜ் கனகநாயகம் என்பவருக்கு சொந்தமானது.

ஆனால் இவ் (பூரணி இன்ஸ்) லொட்ஜினை நிர்வகிப்பவர் "சிவா" என்றழைக்கப்படும் உரும்பிராயைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவயோகேஸ்வரநாதன் என்பவனே. இவன் லொட்ஜில் தங்கியிருப்பவர்களை வெருட்டி தினமும் அடாவடித்தனம் புரிவதாக தெரிய வருகிறது.

குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வித்தியாசமின்றி இவனால் இவ்லொட்ஜில் தாக்கப்படாதவர்கள் அரிது. ஒரு ஆமிக்காரனைப்போலவே இவன் நடந்து கொள்வதாகவும் தெரியவருகிறது.

இதையெல்லாம் விட தினமும் மதுபோதையில் உலாவியபடி திடீரென அறை கதவுகளை திறந்து கொண்டு கணவன் குழந்தைகளுக்கு முன்பே பெண்களிடம் சேட்டை விடுவதும், தகாதவார்த்தைகளால் பேசுவதும், பகிரங்கமாகவே பெண்களை பாலியல் சேட்டைக்குட்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறான்.

சிறுவர்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் கையாலும், காலாலும், தடிகளாலும் தாக்குவதுடன் ஒன்றரை வயதுக்குழந்தையான தம்பிராஜா தனஞ்செயனுக்கு கன்னத்தில் அடித்து பெருங்காயம் ஏற்பட்டது. பயத்தினால் அங்குள்ள எவரும் இவனைத்தடுப்பதுமில்லை. இங்குள்ள சிறுவர்களை தனியாக விசாரித்துப்பார்த்தால் இவனின் கொடூரம் விளங்கும்.

இதைவிட வயோதிபர்களை அடித்து வீழ்த்துவது, இளைஞர்களைப் பிடித்து நீ புலியா என தனியாகக் கொண்டு போய் அடித்து விசாரிப்பது, இளம் பெண்கள் உள்ள அறை கதவுகளை இரவில் தள்ளி விசாரித்து சேட்டை விடுவது என்பன இப்பவும் இரவில் தொடர்கின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இங்கு தங்க வைக்கப்பட்ட கே. கலைவேந்தன் என்பவர் தினமும் இவனால் தாக்கப்பட்டுள்ளார். 26.04.1997 அன்று பம்பலப்பிட்டி நியூலங்கா வைத்தியசாலையில் வேலைபெற்று லொட்ஜை விட்டு வெளியேறியதற்காக அன்றிரவு அவ்விளைஞனை அறைக்குள் பூட்டி வைத்து தாக்கியுள்ளான். இளைஞனின் தாயும் சகோதரியும் அழுது கெஞ்சி மன்றாடிய போதும் விடாமல் தொடர்ந்து அன்றிரவு முழுதும் தாக்கப்பட்டுள்ளார்.

யாழ் பெரியாஸ்பத்திரியிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கொண்டு வரப்பட்ட நரம்பு சம்பந்தப்பட்ட அறுவைச்சிகிச்சைக் குரிய நோயாளி எம். ராசையா 24.04.97 அன்று இரவு 10மணியளவில் மதுபோதையில் வந்த இவனால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் ராசையாவின் மனைவியின் கைகளைப் பிடித்திழுத்து தாக்க முற்பட்டபோதும் யாரும் இதனை பயத்தினால் தடுக்க முற்படவில்லை. நோயாளியான ராசையா இரவு முழுவதும் வேதனையில் துடித்தபடி இருந்துள்ளார். அடுத்த நாள் (28.4.97) காலையில் தான் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இது சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் முறையிடப் பட்டுள்ளது.

இவ் லொட்ஜிலிருந்து வேறு இடத்துக்கு யாராவது வெளியேற முயற்சித்தால் பொலிஸ் ரிப்போர்ட் தரமுடியாது. புலியென உள்ளுக்கு தள்ளி விடுவேன் எனக்கூறி ஒரு ஆமிக்காரனைப்போல் இவனது அட்டகாசங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இவன் நிர்வகிக்கும் "பூரணி இன்ஸ்" லொட்ஜ் உரிமையாளரான கனகநாயகத்துடன் நாம் தொலைபேசியில் தொடர்புகொண்டு இவன் பற்றிய அடாவடித்தனங்களைக் கேட்ட போது தமக்கும் இதுபற்றி புகார்கள் கிடைத்தது. அவனை எச்சரித்துள்ளதாக மட்டும் கூறினார். ○

## 'தகர'சபை!

முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்களைக்கொண்ட மட்டக்களப்பில், மட்டக்களப்பு மாநகர சபை உபயோகிக்கும் நீண்ட கடித உறையில் தமிழில் மாநகரசபை என்பதற்கு பதிலாக "மாதகரசபை" என்று குறிக்கப்பட்டுள்ளது.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் தமிழுக்கு வித்திட்ட விபுலானந்த அடிகளாரும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் இன்றிருந்தால் கண்ணீர் விட்டே அழுதிருப்பார்கள்.

## நின்றபடி வேலை!

திருகோணமலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் புதிதாக பல பட்டதாரிகளுக்கு நியமனம் கிடைத்தது. முதன் முதலில் வேலைக்கு போன இவர்களுக்கு கதிரைகள் இல்லாமல் கால் கடுக்க நிற்கும் அவல நிலை ஏற்பட்டது.

கண்ணாடிக்கூட்டுக்குள் கால்மேல் கால்போட்டுக்கொண்டிருக்கும் காரியாலய உயர் அதிகாரிகள் இதுபற்றி கவனமெடுத்ததாக தெரியவில்லை.

பிக்குமாரையும், ஆமிக்காரரையும் வாகனக்கதவைத் திறந்து வரவேற்றுக்கொண்டு வந்து கதிரையில் உட்கார வைத்து கதை பேசும் உயர் அதிகாரிகள் இந்த சக ஊழியர்களின் நிலைமையை இனிமேலாவது கவனத்திலெடுத்தாலென்ன? ●

## நலன்புரி முகாமில் மாணவர்கள்!

வடக்கு மாவட்டங்களிலிருந்து தென்பகுதி பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகி கல்வி கற்கின்ற மாணவர்கள் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக பல்கலைக் கழகங்களிற்கு செல்ல அனுமதிக் கப்படாமல் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் அகதிகள் என்ற அந்தஸ்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழகங்களில் நடக்கும் வேலை நிறுத்தத்தை சாட்டாக வைத்து மேலும் இம்மாணவர்களைத் தடுத்து வைத்துள்ளார்கள். வடபகுதியில் உள்ள பெற்றோருடன் எவ்வித தொடர்புமற்று கையில் பணமும் இன்றி என்ன செய்வதென்று தெரியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் இம்மாணவர்களின் நிலைப்பற்றி எம் தமிழ்ப் பாராளுமன்ற பெருந்தகைகள் இனிமேலாவது குரல் கொடுப்பார்களா? ○

## இந்தியாவுக்கு பிடிக்கவில்லையாம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பதவிக்காக அக்கட்சிக்குள் கடும் போட்டி நிலவுவதாக முன்பு செய்திகள் அடிபட்டன. இச்செய்தி தொடர்பாக சரிநிகருக்கு கருத்து தெரிவித்த தவிகூ. பா.உ தங்கத்துரை அச்செய்தியில் எதுவித உண்மையும் இல்லையென தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. கூட்டணிக்குள் மதவாதத்தைத் தூண்டி பிழைப்பு நடாத்தும் அல்லது பிளவை உண்டுபண்ணும் நோக்குடன் புனையப்பட்ட கட்டுக்கதையே அது என்று சிங்கள பத்திரிகையொன்றுக்கும் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் உண்மை நிலவரம் அதுவல்ல என்றும்: கூட்டணி தலைவராக சிவசிதம்பரம் அவர்கள் இருப்பதை இந்தியா விரும்பவில்லை என்றும்: கொழும்பில் அண்மையில் நடந்த இரு நிகழ்வுகளில் அவர் பேசியும் நடந்தும்கொண்ட விடயங்கள் இந்தியாவை அரசியல் ரீதியிலும் வேறுபல ரீதியிலும் பாதித்துள்ளதாலும் அவர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதாக இந்தியாவால் அடையாளம் காணப்பட்டுள்ளதாலும்; அவரை நீக்கிவிட்டு ஒரு நெகிழும் தன்மை கொண்ட தலைவர் ஒருவரை நியமிக்குமாறு கூட்டணியிடு இந்திய அழுத்தம் கொடுத்து வருவதாகவும் நம்பகமான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

www.tamilarangam.net





# "இலங்கை பாதுகாப்பற்ற நாடு!"

-சார்ள்ஸ் அபேசேகர-

"இலங்கையில் இன்றுள்ள நிலை தமிழர்களுக்கு பாதுகாப்பான ஒனறல்ல! இந்த சந்தர்ப்பத்தில் இங்குள்ள தமிழ் மக்களை அங்கு அனுப்புமாறு சிபாரிசு செய்வது ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு செய்யும் சேவையாக இருக்க முடியாது. இலங்கை அரசுக்கு அந்நிய நிதியும் நிதி ஒதுக்கீடும் கிடைக்கும் வரை அது யுத்தத்தை நடத்திக் கொண்டே யிருக்கும்."

இவ்வாறு மேர்ஜ் இயக்கத்தின் தலைவரும்; இன்போர்ம் நிறுவனத்தின் தலைவருமான சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் நோர்வேயில் வைத்து தெரிவித்துள்ளார்.

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பான விடயம் குறித்து நோர்வேயில் உள்ள கிழக்கு பேர்ணன் நகரத்தில் நடைபெற்ற உண்மையைக் கண்டறியும் ஒரு நாள் செயலமர் வின் போதே சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் இவ்வாறு தெரிவித்துள் ளார். இச்செயலமர்வின் போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; வெளி நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் புலிகளுக்கு நிதி உதவி செய்யும் வரை அவர்களுக்கும் ஆயுதங்களை வாங்க முடியுமென்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் புலிகளோ இலங்கைப் படையினரோ அக்கறை காட்டுவதில்லை என்றும் தெரிவித்தார்.

நோர்வேயிலுள்ள தமிழ் அகதிகள் 300 பேரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நோர்வே அரசு எடுத்த முடிவை அடுத்து இப் பிரச்சினை தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இவ் ஒரு நாள் செயலமர்வில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி ஹிறொம்ட்சுமோறி தமிழ்ப் புலிக் கெரில்லாக்கள் எவ்வளவு அதிக கோபமுண்டாக்கினாலும் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடியளவு சுமூகமானதும் பாதுகாப்பானதுமான நிலைமை இப்போது இலங்கையில் நிலவுவதாக உறுதியாக கூறினார்.

இலங்கையில் மனித உரிமைக் கான கௌரவமும் பாதுகாப்பும் கடந்த இரு வருடங்களுள் பெருமள்வில் வளர்ச்சி அடைந்துள்ளன என்றும் இலங்கை அரச படைகள் இப்போது மிகுந்த தொழிற் தேர்ச்சியுடன்; வேறு பிரித்து பார்த்து புலி கெரில்லாக்களின் இலக்குகளை நோக்கி மட்டுமே தாக்குதல்களை நடத்துவதாகவும் சாதாரண குடிமக்களுக்கு எதிராக தாக்குதல்கள் எவையும் நடத்தப்படடதாக தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை எனவும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்க ளையே மிஞ்சும் அளவுக்கு உறுதியாக ஐ.நா பிரதிநிதி ஹிறொம்ட்சுமோறி மேலும் தெரிவித்திருந்தார்.

'யாழ்ப்பாணத்தில் இப்போது தோன்றியுள்ள புதிய நிலைமை காரணமாக பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு சிவில் நிர்வாகம் நிறுவப்பட வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஓரளவு குழப்பகரமானதாயினும் நிலமைகள் அங்கு மிகச் சாதாரணமாகி விட்டன என்றும் அனேக தமிழ் மக்கள் இப்போது இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

இவரது பேச்சுக்கு பதிலளித்துப் பேசுகையிலேயே மேர்ஜ் தலைவர் சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தனது பேச்சின் போது இலங்கையின் இப்போதைய சிக்கலுக்கு வழி சமைத்த சமூகவியல் காரணிகளை பகுத்தாய்வு செய்ததுடன் ஐ.நா. சபையின் இம் முடிவுடன் தான் உடன்படவில்லையென்றும் தெரிவித்தார்.

# கொலைப் பயமுறுத்தல்கள்!

ஆளுங் கட்சியையும் எதிர்க் கட்சியையும் சோந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்மருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலைப்பயமுறுத்தல் விடப்பட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ல.ச.ச.க.வைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார; ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிசைச் சேர்ந்த ஐ.எம்.இலியாஸ்; ஈபிடிபி.யைச் சேர்ந்த தங்கவேல் ஆவர்.

இவற்றில்; லசசக; பொ.ஐ.மு. வின் உறுப்புக் கட்சியாகும் முகாவோ அதன் பங்காளிக் கட்சியாகும். ஈ.பி.டி.பி அதற்கு ஆதரவு வழங்கும் கட்சியாகும்.

இம்மூவரைத் தவிர ஐதேக.வைச் சேர்ந்த ராஜித சேனாரத்ன; சரத் கொங்காகே; இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்; லக்ஷ்மன் யாபா அபேவர்தன; எம்.எச்.எம்.மஹ்ரூப் ஆகியோர் மீதும் கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**இரு தரப்பு பா.உ.க்கள் எண்மருக்கும் கடந்த இரண்டு வாரங்களுள் பல தடவை** தொலைபேசி **மூலமாக அச்சுறுத்தல்கள்** விடுக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.


ஐதேக. பாஉ ராஜித சேனாரத்ன மீதான கொலைப் பயமுறுத்தலுக்கு காரணம் பாபுவா நியுகினியாவைச் சேர்ந்த ஜொயெல் பெரா படுகொலைச் சம்பவம் தொடர்பான ரகசிய பொலிஸார் விசாரணை நடவடிக்கை பற்றி எதிர்க்கட்சி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் அறிக்கையொன்று சமர்ப்பித்ததாகும். இக்கொலைச் சம்பவத்துடன் பாதுகாப்பு அமைச்சரின் மகன் லொகான் ரத்வத்தைக்கும் தொடர்பிருப்பதாக பேசப்படுவது தெரிந்ததே.

வாசுதேவ நாணயக்கார மீதான கொலைப்பயமுறுத்தலுக்கு காரணம்; ஜனாதிபதி சந்திரிகா மீரிகம இளைஞர் நிகேதனத்தில் இந்நாட்டுக்கு சர்வாதிகார ஆட்சியே தேவை என்று பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து பத்திரிகைகளுக்கு கருத்து கூறியதும்; இவ்விடயத்தை ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் எழுப்பியதுமாகும்.

ஐதேக. பா.உ. கொங்காகேயை கொலை செய்ய இதற்கு முன்பும் ஆயுதக் கோஷ்டியொன்று கொள்ளுப் பிட்டியிலுள்ள அவருக்குச் சொந்தமான கன்டன் ஹோட்டலுக்குள் பலவந்தமாக உட்புகுந்து துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். அச்சம்பவத்தில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இம்முறை இவருட்பட ஐ.தேக. பா.உக்கள் ஐவர் மீதும்; மு.கா. உறுப்பினர் இலியாஸ் மீதும்; கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டதற்கு காரணம் இவர்கள்; நுரைச்சோலையில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையம் தொடர்பான பிரச்சினை யின் போது துப்பாக்கிப் பிரயோகத்துக்குள்ளான அப்பகுதி மக்களை சந்தித்து தகவல் அறிந்தமையாகும்.

இவ் ஐதேக. உறுப்பினர் ஐவரும் கட்சியின் முடிவின்படியே மின்சார நிலையம் அமைப்பது தொடர்பாக அப்பகுதி மக்கள் எதிர்ப்பு காட்டுவதற்கான காரணத்தை அறியச் சென்றிருந்த னர். இவர்களது இம்முயற்சிக்கு பாதுகாப்பு படையினர்; இடையூறு விளைவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து ஐதேக. பா.உ. ஏ.எச்.எம் அஸ்வர்; கடந்த மாதம் 28ம் திகதி கடிதம் ஒன்றை சமர்ப்பித்ததும் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுவதை சபாநாயகர் கண்டித்ததும் பொலிஸ் மா அதிபரிடம் இது தொடர்பாக விசாரிக்குமாறு குறிப்பிட்டதும் தெரிந்ததே.

ஈபிடிபி. பாஉ தங்கவேல் அவர்கள் மீதான கொலைப்பயமுறுத்லுக்கான காரணம் என்னவென்று அறியமுயன்ற போதும் அவரைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை.



சிவராத்திரி வந்தாலும் வந்தது 'அந்தக்' காவடிகளுக்கும் வேலை வந்தது. அப்படி எடுக்கப்பட்ட ஒரு காவடிக்கும் விளக்கம் கூற வேண்டிய நிலைமையும் எனக்கு வந்தது.

சிவராத்திரி அன்று, இரவு நேரம் பத்தரை மணி. சுயாதீன தொலைக் காட்சியில் சுழலும் சொற்போர் நடக்கிறது. ''சிவதொண்டர்களில் செயற்கரிய செய்தவர் யார்?'' என்ற தலைப்பில் அ.இ. கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் அவர்களின் தலைமையில் நாவன்மை நடக்கிறது. அதில் சிவசங்கரின் வாதத் திறமையில் நான் லயித்துப் போய் இருக்கிறேன்.

எனக்கொரு தொலைபேசி அழைப்பு வருகிறது. எடுத்தவர் முக்கியமான ஒரு பெரும்பான்மை அன்பர். அரைகுறையாகவேனும் தமிழ் பேசத்தெரிந்தவர்.

உடையாடல் வருமாறு:

அவர்:- ஐ.ரீ.என் இல் என்ன போகிறது?

நான்:- விவாத அரங்கு.

அவர்:- எதைப்பற்றி போகிறது?

நான்:- இன்று சிவராத்திரி அல்லவா! அதுதான் எமது சிவதொண்டர் மூவரைப்பற்றி விவாதிக்கின்றார்கள்.

அவர்:- ஓஹோ! அப்படியா! இன்று சிவராத்திரியா? அப்படியானால் பங்குபற்றுபவர்கள் யார் யார்?, யாழ்ப்பாணத்தவர்களா?

(நான் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி அவரவர் தொழிலையும் கூறி கொழும்பில்தான் இப்போது வசிக்கிறார்கள் என்றும் கூறினேன்.)

அவர்:- அப்படியானால் சரி! ஆனால் இன்று சிவராத்திரி என்று எனக்குத் தெரியாது. அவர்கள் 'கொமியூனல்' பேசுவது போல் எனக்குப்பட்டது அதுதான் கேட்டேன்.

நான்:- அப்படியல்ல, அவர்கள் சமயம் பேசுகிறார்கள். முன்னைய நாட்களில் என்றால் சிவராத்திரி பொது விடுமுறையாக இருக்கும். இம்முறை வேலைநாள் ஆக்கப்பட்டு விட்டது. அது தான் உங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது.

அவர்:- ஆமாம். அதுதான் காரணம். நன்றி. தொந்தரவுக்கு மன்னிக்க, இரவு வணக்கம். (அவர் தொலைபேசியை வைத்து விட்டார்.)

காவடி எடுப்பதே முயற்கொம்பு. எடுத்தாலும் வேண்டுதல் பிச்சையாய்த்தான் கிடைக்கும். கிடைத்தாலும் உரத்துப்பேசக்கூடாது. பேசினால், சைவமும் இனவாதம் ஆகிவிடும்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவையில் அறிவிப்பாளர்கள் பற்றாக்குறை ஏற்படும்போது பகுதிநேர அறிவிப்பாளர்கள் வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு.

சென்ற 1996ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் பகுதிநேர அறிவிப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு குரல்தேர்வும் நடைபெற்றது. இதில் ஆயிரக் கணக்கானவர்கள் விண்ணப்பித்து குரற்தேர்வுக்கும் தோற்றினர்.

இந்த விண்ணப்பதாரிகளில் 50க்கும் குறைவான கலைஞர்கள் மட்டுமே பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர் இதில் திறமையுள்ள கலைஞர்கள் பலரும் தெரிவுக்குள் அகப்படாது போனமை வேறாக ஆராயப்படவேண்டிய விடயமாகும். ஆயினும் இறுதித்தேர்வின் போது தெரிவு செய்யப்படும் கலைஞர்களுக்கு கல்வித்தராதரத்தின் அடிப்படையிலேயே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இருந்தும் குறிப்பிடத்தக்க ஒரு கலைஞர்(?) இந்த விதிகள் எதற்கும் கட்டுப்படாது பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வகுப்புகளிலும் பங்குபற்றி வருகின்றார்.


கல்வித் தகுதி வலுவானதாக இல்லாதபோதும் ஒரு பிரபல பெண் அறிவிப்பாளரின் மகன் என்பதால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதைவிட அவர் இலங்கை வானொலிக்கு போட்டியாக எழுந்த தனியார் வானொலி நிலையத்திலும் சக்லை போடு போட்ட ஒரு அறிவிப்பாளர். திறமை, தராதரம் இருந்தும் வாய்ப்பகளை இழந்தவர்களின் சார்பில் இந்த விடயம் சம்பந்தப்பட்டவர்களின் மேலான கவனத்திற்கு!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் பயணம் செய்வதானால் அதற்கென்று பிரத்தியேகமான நடைமுறைகளும் பண விரயம், நேர விரயங்களும் உண்டு. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் விலக்களித்து விமானம் மூலம் யாழ் செல்ல வழி ஒன்று இருக்கிறது. ஆனால் அந்த வாய்ப்பு ஒரிருவரைத்தவிர வேறு யாருக்கும் கிட்டமாட்டாது.

அதாவது இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சைகளுக்கு யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுவது உண்டு. அது சம்பந்தமான சகல பயண ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களமே செய்து கொடுப்பதுண்டு. அந்த அரச பணிக்கு பரீட்சைத் திணைக்களத்தைச்சார்ந்த அலுவலர்களே செல்ல முடியும். ஆனால் நிலை வேறு.

போதியளவு தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் பரீட்சைத் திணைக்களத்தில் கடமையில் இருந்தும் யாழ்ப்பாணம் - கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தரே இவ்விதமான பயணங்களில் முன்னணியில் நிற்கின்றார். அதாவது தனது தனிப்பட்ட நோக்குடனான யாழ் - கொழும்பு போக்குவரத்தினை மிகவும் இலகுவாகவும், விவேகமாகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பெயரோடு செய்து கொள்கிறார்.

இதனால் பரீட்சைத் திணைக்களத்தைச் சார்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக்கொண்டவர்கள் எனின் அவர்கள் ஊர் செல்ல வேண்டும் எனின் வழமையான பொதுமக்களுக்குரிய பாஸ் நடைமுறைகளினூடுதான் தமது யாழ் பயணத்தை மேற்கொள்ள முடியும். இலஞ்சம் ஊழல் ஒழிப்பு என்ற கோசத்துடன் முன்செல்லும் இந்த அரசாங்கத்திலும் அரச ஊழியர்களே இலஞ்ச ஊழலின் மற்றொரு வடிவத்தினால் பலியாக்கப்படுகின்றனர். இவ்விதமான ஒர வஞ்சனைகளுக்கு சம்ப்ந்தப்பட்டவர்கள் பரிகாரம் காண முற்படுவார்களா???



www.tamilarangam.net





தொடரும் விவாதம்

# 'பணிந்து போதலே அழகோ...'

## ராதிகாவுக்கு மலையகத்திலிருந்து ஒரு மடல்

சரிநிகர் இதழ் 112, 113 என்பவற்றில் தொடராக வெளிவந்த ''பெண் புலிகளும் பெண் விடுதலைப் பிரச்சினையும்'' என்ற தலைப்பிலான கட்டுரையின் பல தவறுகளைச் சுட்டிக்காட்டி எதிர்வினைகள் வெளியாகின. அவற்றின் மூலம் கட்டுரையாளருக்கு சில பிரச்சினைகள் மிகத்தெளிவாக உணர்த்தப்பட்டிருந்தும் மீண்டும் தான் சொன்னது எவ்விதத்திலும் தவறல்ல என்று இதழ் 118இல் அவர் வாதிடுவது வெறுப்புக்குள்ளாக்குகிறது.

பெண்கள் அன்றும் இன்றும் அடிமையாக்கப்பட்டே நடத்தப்படுகின்றார்கள். இன்று பெண்கள் சங்கங்களில் பெண்களுக்கான சம உரிமை என்ற எண்ணம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனாலும் முன்பு போல் இப்போது இல்லாவிட்டாலும் இன்றும் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படவில்லை. இன்றும் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பது நாம் சொல்லி கட்டுரையாளர் அறிய வேண்டியதில்லை. அவருக்குத் தெரிந்திருக்கும் அதிலும் தமிழ் ஈழத்தில் மிக மோசமாக பெண்கள் பாழ்ப்படுத்தப்படுகிறார்கள் என்பது. வேலியே பயிரையும் மேயும் கதையாக பல அப்பாவிப் பெண்கள் படையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். 10வயதுச் சிறுமி ஒருத்தியும் இவர்களது அநியாயத்தில் பலிகடா ஆக்கப்பட்டிருப்பது வேதனைப் படத்தக்கதும் வெட்கப்படத்தக்கது மாகும்.

இவையெல்லாவற்றையும் அவரது விருப்பத்துக்குரிய புத்தகங்கள் செய்தித் தாள்கள் மூலமாக அவர் அறிந்திருக்கலாம். அறிந்திருந்தும் ''என்னைப் பொறுத்தளவில் பெண்கள் அறவே யுத்தத்திற்கு செல்லாதிருந்தால் நன்றாக இருக்கும்'' என்று கூறுகிறார். இது எவ்வகையில் நியாயப்படுத்தக்க வாக்கியம் என்பது விளங்காததாக உள்ளது.

உரிமைக்காக யாரும் போராடலாம். போராடியும் நீதி கிடைக்காத பட்சத்தில், சட்டத்தில் இவர்களுக்குத் தீர்வு கிடைக்காத நிலையில் பலாத்கார முறையை கையாள்வது என்றும் தவறாகாதே. அதுவே தவறு என்று கூறும் ராதிகா இவர்களுக்கு தீர்வாக எதைக் கூற முற்படுகிறார். இவர்களுக்கு யோசனையாக ''காலம் வரும் காத்திரு மகளே'' என்று கூறிவிடுவாரோ அல்லது நீங்கள் தமிழ் பண்பாட்டு விழுமியங்களை காக்கவேண்டியவர்கள். அதனால் ஊமையாக இருந்து விடுங்கள் என்கிறாரோ. இதற்கான தீர்வாக அவர் இவ்வாறு கூறுவது வெறுப்பிற்கும் நகைப்பிற்கும் உரியது. பெண்புலி வன்முறையாளர்களாக பிறக்கவில்லை. அவ்வாறு மாற்றப்படுகிறார்கள் என்பதை ராதிகா உணர்வதற்கு இன்னும் காலங்கள் தேவையோ?

மனிதம் கொல்லப்படும் போது மனிதாபிமானம் தோன்றுமா? மனிதாபிமானம் என்பதுதான் என்ன? நம் முன்னிலையில் பலர் காலற்றும், கையற்றும், உடல்கள் சிதறுபட்டும் கிடக்கும் போது... இவையெல்லாம் சகஜம் எனறு ஒதுங்கி போவது மனிதாபிமானமா?. வன்முறையை வன்முறையால் தான் வெல்ல முடியும்.

''புனிதம்'' என்பது இவரது அகராதியில் எவ்வாறு பொறிக்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. மற்றவர்களுடன் பேசும் போதோ வாதிடும்போதோ, நமது உரிமைக்காக நம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் போதோ ''புனிதம்'' வீணாக்கப்படுகின்றதா?

ஆண்பாதி, பெண்பாதி என்ற தத்துவத்தை விளக்கும் அர்த்த நாரீஸ்வரர் உருவத்தை பெண்கள் சங்கத்தினர் எதிர்க்கின்றார்கள். என்று கூறுகின்றாரே, ஏன்? முழுமையாக உரிமை வேண்டும் என்பதற்காகவே இதை எதிர்க்கின்றனர் என்று கூறும் இவர், பெண்கள் தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும், காக்க வேண்டும் என்கிறார். முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை தனது கட்டுரையில் இவர் வெளிப்படுத்துவது ஏன்?

தமிழர் தமது உரிமைக்காக போராகின்றார்கள். இதற்கு பல காரணங்கள். அதில் பெண்களும் ஈடுபட்டு நாட்டைக்காக்க தமது உயிர்களை தியாகம் செய்கின்றனர். இது ஒரு புறம் கண்ணீர் வடிக்கத்தக்க செயல் என்றாலும் ஒரு பெண் இவ்வளவு தைரியமாக யுத்தத்திற்கு சென்று போராடுவது பெருமைப் படவேண்டியது. எத்தனையோ பெண்கள் அடிமையாக, கைதியாக நடத்தப்பட்டும் மௌனமாக கண்ணீர் வடிக்கும் போது, ஒரு பெண் தனது உயிரைத் தியாகம் செய்கிறாள் என்றால், அதை பெருமைப்படுத்த வேண்டும். பெருமைப்படுத்தா விட்டாலும் இழிவு படுத்தாமலாவது இருப்பது சிறந்ததாகும்.

''கீறல் விழுந்த இசைத்தட்டு போல்'' என்னும் உவமையை கூறி தன்னைத்தானே ஆறுதல் படுத்திக் கொண்டாலும் இக்கட்டுரை மூலம் அவர் பலரின் கண்டனத்திற்கு உள்ளாகி விட்டார் என்பதை மட்டும் மறுக்க முடியாது.

இனி தெளிவற்ற புரியாத சிந்தனையுடன் இவ்வாறு கட்டுரை எழுதுவதை தவிர்த்துக் கொண்டால் அது சிறந்ததாக அமையும்.

O

அலிஷா
வட்டவளை

# இவையெல்லாம் வெறும் அறிகுறிகளே!

-ஆன்

'பறையனாலங்குளம்' என்ற பெயர் கொண்ட தமிழ்க்கிராமத்தை 'சப்புமல்புர' என்று பெயர் மாற்றம் செய்த செய்தி எல்லோருக்கும் நினைவிருக்கும். சரிநிகர் பாதுகாப்பு அமைச்சரின் பெரிய கட்டவுட்டருகாக நிர்மாணிக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையின் படமொன்றை அட்டைப்படமாகவும் பிரசுரித்திருந்தது. தமிழ் அரசியல் கட்சிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. முற்போக்கு சிங்கள புத்திஜீவிகளும் இவற்றை எதிர்த்து எழுதினர். பாராளுமன்றத்திலும் இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று கைகழுவி விட வேண்டிய நிலை பாதுகாப்பு அமைச்சருக்கு ஏற்பட்டு விட்டது.

இன்று அந்தப்பெயர்பலகை நீக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. ஆனால் அதேவேளை இந்தச் செயலைச் செய்வதறகு அடிப்படையாக இருந்த அதே 'சிங்கள மயமாக்கும்' மனோபாவம் கொஞ்மும் மாற்றமடைந்ததாகத் தெரியவில்லை. தமிழ்ப் பகுதிகளை சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாக்குவதற்கான நோக்குடன் திட்டமிட்ட நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்ட பல குடியேற்றத்திட்டங்கள் இன்று அந்த நோக்கத்தினை நிறைவேற்றியுள்ளன. தமிழ்ப் பகுதிகளாக இருந்த பல பகுதிகள் இன்று சிங்களப்பகுதிகளாக இனங்காணப்படும் நிலை உருவாகிவிட்டது. கிழக்கு மாகாணத்தில் இருபெரும் தொகுதிகளே இவ்வாறு உருவாகி விட்டன.

இப்போது வடக்கில் 'வெலிஓயா' என்று சிங்களப் பெயரால் அழைக்கப்பட்டு வரும் மணல் ஆற்றை அனுராதபுர மாவட்ட நிர்வாகத்துடன் இணைக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் நோக்குடன் உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டத் தொடரில் ஒன்றான மணலாறு, சிறைக்கைதிகள், காடையர்களைக்கொண்டு அரச ஆதரவுடன் ஆயுதங்களும், நிதியும் வழங்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு குடியேற்றமாகும். இன்று இங்குள்ள 'மக்களுக்கு' நிர்வாக வசதிகளை வவுனியா அரசாங்க அதிபருடாக செய்ய முடியாது இருப்பதனால், அதனை அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கலாம் என்று அதிகாரிகள் மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு ஒரு தற்காலிகமான இணைப்பே என்றும் இதன் மூலமாக அங்குள்ள மக்களுக்கு வேண்டிய நிர்வாகத் தேவைகள் சரிசெய்யப்பட முடியும் என்றும், நிலைமை சுமுகம் அடைந்த பின் இந் நிலைமை மாற்றப்படும் என்றும் அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

ஆனால் நடைமுறையில் இத்தகைய அதிகாரிகள் மட்ட நடவடிக்கைகள் ஒரு போதும் தற்காலிகமானவையாக இருந்ததில்லை., மாறாக, அவை மேலும் மேலும் இறுக்கமான நிரந்தரமான முடிவுகளாகவே மாறிப்போயிருக்கின்றன. உண்மையில் அங்குள்ள மக்களின் தேவைகளைக் கவனிப்பது மட்டும் தான் இந்த அதிகாரிகள் மட்ட யோசனைக்கு காரணம் என்றால், அதை மிகவும் இலகுவாக, வவுனியாவினூடாகவே இராணுவ உதவியுடன் செய்ய முடியும். வவுனியாவுக்கும், மணலாறுக்கு மிடையிலான இராணுவப் போக்குவரத்துக்கள் மூலமாக நிர்வாகத்தைத் தொடர்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு. ஏற்கெனவே பல பகுதிகட்கு இவ்வாறான தொடர்புகள் நடைமுறையில் இருக்கின்றன. இவை கூட தற்காலிகமானவைதான். ஆனால், மணலாறு விடயத்தில் மட்டும் ஏன் வேறொரு 'தற்காலிக' முடிவை மேற்கொள்ள வேண்டும்?

இதற்கு நிச்சயமாக, வெறும் சிவில் நிர்வாகத்தேவை அல்ல. காரணம், அதற்கும் மேலாக இச்சந்தர்ப்த்தைப் பயன்படுத்தி தமது 'சிங்கள மயமாக்கல்' திட்டத்தை நடைமுறையில் ஆரம்பித்து விடுவது தான் என்பது வெளிப்படை.

இந்தத்திட்டத்தினை சகல தமிழ்க் கட்சிகளும் வலுவாக எதிர்த்துள்ளன.

'ஐ.தே.க. ஆட்சியாளர்களால், மணலாற்றில் இருந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்களக் காடையர்களும் சிறைக்கைதிகளும் கொண்டு சென்று குடியேற்றப் பட்டனர். இந்த மணலாற்று குடியேற்ற காலத்திலிருந்தே இதனை நாம் எதிர்த்து வருகிறோம். இந்த நடவடிக்கை ஒரு நீதியற்ற நடவடிக்கையாகும்' என்று த.வி.கூ. தலைவர் சிவ சிதம்பரம் பத்திரிகைகட்கு தெரிவித்துள்ளார். உண்மையில் இந்த நடவடிக்கை, குடியேற்ற திட்டமிடலாளர்களின் திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்றே கருத வேண்டியிருக்கிறது.

முதலில் பாரம்பரிய பிரதேசதங்களிலிருந்து பூர்வீக தமிழர்களை விரட்டுதல்; பின்னர் அங்கு சிங்களவர்களை குடியேற்றுதல் - சிங்கள மக்கள் முன்வராதுவிட்டால் இருக்கவே இருக்கிறார்கள் சிறைக் கைதிகளும், சிங்களக் காடையர்களும். - பின்னர் அப்பகுதியை சிங்களப்பகுதியாக பெயர் மாற்றம் செய்தல், அதற்கடுத்த படி அதை சிங்கள நிர்வாகப் பிரதேசமாக அறிவித்தல்.

ஆக, கறையான் அரித்த கட்டில் காலாக கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் மக்களின் இருப்புக்கு எதிராக இந்த அரிப்பு வேலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கட்டில் உடைந்து நொருங்கிவிழும் போது, கத்துவதற்கே ஆள் இருக்காது என்ற கணிப்பில்.

இவையெல்லாம் பல ஆண்டுகட்கு முன்பே திட்டமிடப்பட்ட படி தொடரும் நடவடிக்கைகள். அவ்வப்போது வெளிப்படும் லிங்கநகர், பறையனாலங்குளம், மணலாறு சம்பவங்கள் அவற்றின் வெளிப்பாடுகள் மட்டுமே. நாட்டின் அரசியலில் சிங்கள பௌத்த மேலாதிக்கம் அடிநாதமாக இருக்கும் வரை அதற்குரிய மருத்துவம் செய்யப்படாதவரை இத்தகைய அறிகுறிகள் அடிக்கடி வெளிப்பட்டே தீரும். அறிகுறிகளைக்கண்டு பரபரப்படைவதும், அவற்றுக்கு மட்டுமே ஒரு தற்காலிக மருத்துவத்தை செய்து சுகப்படுத்துவதும் அடிப்படை கோட்டைவிடுவதற்கு சமமாகும்.

எமது தமிழ் அரசியல் கட்சிகள் இவ்வாறான அடிக்கடி வரும் அறிகுறிகட்கு எதிரான கண்டனங்கள் எழுப்புவதில் கைதேர்ந்தவர்கள்.


ஆனால், அவர்கள் அடிப்படையான நோய் தீர்க்கப்படாதவரை அது வெவ்வேறு வழிகளில் வெளிப்பட்டே தீரும் என்பதையும், ஏதோ ஒரு நாள் எதுவுமே செய்ய முடியாது அளவுக்கு நிலைமையை மோசமாக்கி விடும் என்பதையும் கவனிப்பதாக தெரியவில்லை.

கண்கெட்ட பிறகுதான் சூரிய நமஸ்காரம். புத்தி வருமோ என்னவோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*இந்திக குணவர்தன அவர்கள் தற்போதைய அரசாங்கத்தில் மீன்பிடி நீரியல்துறை அமைச்சராக இருக்கிறார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்பிரிவு உறுப்பினருமான இவர் முன்னாள் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்தனாவின் மகனாவார்.*

*இவரது தாய் குசுமா குணவர்தனவும் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவராவார். ஜேர்மனியிலுள்ள கார்ல் மார்க்ஸ் பல்கலைக்கழகத்தில் கைத்தொழிற்துறையில் பட்டம் பெற்றவராவார். இனவாத அமைப்பு என பேர்பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர்களான தினேஸ் குணவர்தன, பந்துல குணவர்தன ஆகியோர் இவரது சகோதரர்களாவர்.*

*இலங்கையின் வரலாற்றில், சிங்கள பௌத்த அரசாங்கத்துடன் கூட்டு சேர்ந்து அவ்வப்போது ஆட்சியமைத்து வந்த இடதுசாரி இயக்கங்கள் சிங்கள பௌத்த அரசாங்கங்களின் வேலைத்திட்டத்தை தாமே கொண்டு நடாத்திய அனுபவங்கள் ஒன்றும் புதியன அல்ல. இந்த பேட்டி கூட அந்த போக்குக்கு சான்று சொல்லும்.*

**கடந்த 17 வருட ஐ.தே.க. ஆட்சிக்கெதிராக கூட்டாக உருவான பொ.ஐ.மு. வானது, இன்றைய நிலையில் ஐ.தே.கவுடன் வேறுபடுத்தி பார்க்கமுடியாத நிலை தோன்றியுள்ளது. தொடர்ந்தும் பொ.ஐ.முவுடன் தங்கள் கூட்டு நீடிப்பதன் காரணம்தான் என்ன?**

எங்களுக்கும் ஐ.தே.க.வினருக்குமிடையில் வேறுபாடில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். குறிப்பாக இன்றைய உலகில் பொருளாதார ரீதியாக ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். திறந்த பொருளாதாரக் கொள்கைக்குள் இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஐ.தே.க. இதுவிடயத்தில் செயற்பட்டது போலல்லாமல் திறந்த பொருளாதாரத்துக்கு மனிதாபிமான முகம் கொடுத்து செயற்படுத்த வேண்டும். இதைத் தவிர எமக்கும் ஐ.தே.கவுக்குமிடையிலுள்ள பிரதான வேறுபாடு இனப்பிரச்சினை குறித்த ஜனநாயக அணுகுமுறையாகும்.

**திறந்த பொருளாதாரக் கொள்கை நன்மை பயக்கும் என தாங்கள் கருதுகிறீர்கள். ஆனால் ஆட்சியிலமர்ந்த சில வருடங்களிலேயே தொழிலாளர்களின் போராட்டங்கள் பல, மிக மோசகரமாக அடக்கப்பட்ட சம்பவங்களும் பல அரச சொத்துக்கள் தனியார்மயமாக்கப் பட்ட சம்பவங்களும் தொடர்கின்றனவே. ஒரு இடதுசாரி என்ற ரீதியில் இதனை எவ்வாறு அனுமதிக்கிறீர்கள்?**

முதலாவதாக பொ.ஐ.மு., தொழிலாளர்களை அடக்குகிறது என்பதை கண்டிப்பாக மறுக்கிறேன். கடந்த வருடம் மாத்திரம் 500க்கும் மேற்பட்ட வேலைநிறுத்தங்கள் நடந்துள்ளன. அடக்குமுறை உள்ளதென்றால் அத்தனை வேலைநிறுத்தங்களும் எவ்வாறு சாத்தியமானது. பொ.ஐ.மு. தான் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களை பாதுகாத்து வருகின்றது. அன்று வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டவர்களை கடத்தினார்கள். கொளுத்தினார்கள். இன்று அப்படி இல்லையே.

தவிரவும், தனியார் மயமாக்கல் அவசியமான ஒன்றாகும். திறந்த பொருளாதாரத்துக்குள் இதனை செய்யாமல் விட முடியாது. சோஷலிச நாடுகளில் அரச விவசாயத்துறைகளை கட்டுப்படுத்தி இருந்ததன் காரணமாக அங்கு சின்னாபின்னமாகின. அங்கெல்லாம் உற்பத்தி, சந்தைப்படுத்தல் எல்லாமே மனித உரிமைகளை மட்டுப்படுத்தியே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நான் தயங்காமல் கூறுவேன்.

அன்றெல்லாம் அரசுக்குள் எல்லா உற்பத்தித் துறைகளும் இருந்ததால்தான் சோஷலிசம், என்ற மாயை எம்மிடம் இருந்தது. ஆனால் கைத்தொழில் நுட்பங்கள் வளங்கள் என்பன அரசிடம் இல்லாவிட்டால் என்ன செய்வது? இதனால்தான் சோவியத் யூனியனும் உடைந்தது. எனவேதான் இன்று சீனா, கம்போடியா, லாவோஸ் போன்ற நாடுகள் கூட திறந்த பொருளாதாரத்தை நோக்கிச் செல்லுகின்றன.

**நீங்கள் கடந்த காலங்களில் இனங்களின் உரிமைகள் பற்றிப் பேசிவந்த ஒரு அமைப்பைச் சேர்ந்தவர் என்கிற வகையில் இந்த யுத்தம் தமிழ் மக்களுக்குத் தரப்போகும் தீர்வு என்ன என்று கூறுவீர்களா?**

பொ.ஐ.மு.வுக்கு யுத்தத்தை நடத்த வேண்டிய தேவை எதுவுமில்லை. அரசாங்கம் என்கிற ரீதியில் ஆட்சிக்கமர்ந்தவுடன் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைக்குப் போனது. நியாயமான தீர்வை வழங்க முன்வந்தது. ஆனால் புலிகள் யுத்த வழிமுறையை தேர்ந்தெடுத்தது. மிலேச்சத்தனமாக, குரூரமாக, பயங்கரவாத ரீதியில் நடந்துகொண்டதுடன் கொழும்பிலும் குண்டுகளை வைத்தது. இவற்றுக்கு எதிர் நடவடிக்கை மேற்கொள்ளாமல் எந்த அரசாங்கத்துக்கும் இருக்க முடியாது. அரசாங்கத்தை நடத்துவதற்கும் நாட்டின் எதிர்காலத்துக்காகவும், ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காகவும் புலிப் பயங்கரவாதிகளை படுகொலை செய்து அழித்தொழிக்கும் வேலையையே பொ.ஐ.மு. செய்து வருகிறது.

அப்படியிருந்தும் ஓகஸ்ட்டுக்குள் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரும் முயற்சிகளை செய்து வருகிறோம். தமிழ் மக்களுக்கு முதல் தடவையாக தெளிவான தீர்வை வழங்கியுள்ளோம். தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் இதுவரை புலிகள் ஏமாற்றிவந்தபோதும் இனிமேலும் அப்படி ஏமாற்றிவிட முடியாது. எமது யுத்தமானது புலிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை தமிழ் சமூகமும், சர்வதேச சமூகமும் தற்போது விளங்கிக் கொண்டுள்ளன.

**புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசு நேர்மையாக நடந்து கொண்டது என்று கூறுகிறீர்களா?**

இதுவரை காலம் பதவிக்கு வந்தவர்களில் மிகவும் நேர்மையான வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான முயற்சித்தவர் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் மட்டுமே. நேர்மை இல்லையென்றால் சிங்கள மக்கள் மத்தியில் சென்று இங்கு இனப்பிரச்சினை உள்ளது என்பதை, தான் ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறுவாரா? மக்கள் அதற்காகத்தானே தனது தீர்ப்பையும் தேர்தலில் வழங்கினார்கள்.

இன்று சந்திரிகா, ஜீ.எல்.பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் பிரச்சினையைத் தீர்க்க மேற்கொள்ளும் முயற்சிகளே எமது நேர்மைக்குச் சான்று. ஆனால் இவ்வாறு பிரச்சினையைத் தீர்க்க முயல்கின்ற சந்திரிகா, ஜீஎல்பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோரைத் தான் பயங்கரவாத, மிலேச்சத்தனமான, இனவெறிபிடித்த புலிகள் கொல்வதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு தீர்வில் கிஞ்சித்தும் அக்கறை கிடையாது. இன்று கேள்வி எழுப்ப வேண்டியது எமது நேர்மையை நோக்கி அல்ல. பயங்கரவாதிகளின் நேர்மையை நோக்கியே.

**தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனை இனப்பிரச்சினையைத் தீர்க்க போதுமானது என கருதுகிறீர்களா?**

சில தமிழ்க் கட்சிகள் 13வது திருத்தச் சட்டத்தை சரியாக நடைமுறைப் படுபடுத்தினாலே போதுமானது என கூறியுள்ளனரே. இந்த தீர்வுத்திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் வகையில் பிரதான கோரிக்கைகளை-ஐக்கிய இலங்கைக்குள்-கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொலிஸ், காணி, கல்வி போன்ற துறைகளில். அதிகாரங்கள் உட்பட ஏனைய அரசியல் அதிகாரங்கள் நீதித்துறை, ஆளுனர் நியமனம் என்பன குறித்தும் பல விடயங்கள் உள்ளன. அவற்றில் சில இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை. அவையும் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

**காணி அதிகாரங்கள், எல்லைகள், வடக்கு கிழக்கு இணைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தெளிவான முடிவுகள் இன்னமும் இல்லையே?**

காணி அதிகாரம், பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு. ஆனால், அரசாங்கம் இது குறித்து, இன்னமும் முடிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. எல்லைகளை மீள நிர்ணயம் செய்யும் போது தமிழ் முஸ்லிம் மக்கள் ஏற்கக்கூடிய வகையில் தான் அவை செய்யப்படும். இது குறித்த ஒருமித்த முடிவை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் தீர்வை நடைமுறைக்கு கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

**தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவே ஆட்சிக்காலத்தில் பாதியை இழந்து விட்ட நிலையில் ஆட்சிக்காலம் முடிவதற்குள் இதனை அமுல்படுத்திவிடலாம் என்று நம்பலாமா?**

இந்த வருடத்துக்குள் நாம் முடித்துவிடலாம் என நம்புகிறோம். முதற் தடவையாக தமிழ் விரோத இனவாத சக்திகளை மட்டந்தட்ட பொ.ஐ.மு.வாலேயே முடிந்துள்ளது. இன்று சிங்கள மக்களிடம் சிங்கள இனவாதம் பேசி வாக்கு வாங்க முடியாது என்பது நிருபனமாகிவிட்டது. பொ.ஐ.மு. அரசாங்கத்தை சர்வதேச சமூகம் விளங்கிக்கொண்டதாலேயே புலிகளுடன் சேர்ந்து ஐ.தே.க. நடத்திய பிரச்சாரங்களும் எடுபடாமல் போனது. சர்வதேச ரீதியில் ஐ.தே.க.வை இனப்பிரச்சினை தீர்வை நோக்கி தள்ளவும் எம்மால் முடிந்துள்ளது.


அடுத்தது, யுத்த மார்க்கத்தின மூலம் தமிழ் மக்களை புலிகளிடமிருந்து மீட்டு - யாழ்ப்பாணத்தை கைப்பற்றி அரசியல் தீர்வில் நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளோம்.

**ஒருவேளை தீர்வுத்திட்டத்தினை ஐ.தே.க. எதிர்க்குமானால் தீர்வை அமுல்படுத்தும் வேறு மார்க்கங்கள் உங்களிடம் உண்டா?**

ஐ.தே.க. இதனை எதிர்க்குமென நாங்கள் நம்பவில்லை. அப்படி ஐ.தே.க. எதிர்க்குமானால் தீர்வு குறித்த அங்கீகாரத்தை மக்கள் மத்தியிலிருந்து பெற்றுக்கொள்வோம். அரசாங்கம் எப்படிப்பட்ட வழிமுறையை மேற்கொள்ளும் என எனக்கு சொல்ல முடியாது. ஆனால் பல வழிகள் உண்டு. எமக்கு தற்போது ஒரு பொதுத்தேர்தலையும் நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெற்றுவிட முடியும் மக்கள் தீர்ப்பை பெறும் வேறு வழிகளும் உண்டு.

**ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இவ்விடயத்தில் பாவிக்கலாம் என நம்புகிறீர்களா?**

அப்படிப்பாவிக்க முடியுமோவென்று எனக்கு தெரியாது. ஆனால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றாமல் மக்கள் தீர்ப்புக்கு விட முடியாது என ஐ.தே.க கூறி வருகிறது. ஆயினும் அரசியலமைப்பில் அதற்கு இடமுண்டு என்று நாங்கள் நம்புகிறோம்.



சந்திப்பு: பௌசர், என்.சரவணன்

> **"யாழ் மக்கள் சுதந்திரத்தையும் உரிமையையும் இப்போது தான் அனுபவிக்கிறார்கள்!"**
>
> *–அமைச்சர் இந்திக–*

**ஜே.வி.பி.யின் சிறுபான்மை இனங்கள் குறித்த நிலைப்பாடு, விமர்சனம், கட்சி வழிநடத்தல் என்பன போன்ற நிலைப்பாடுகள் காரணமாக நீங்கள் முரண்பட்டு ஜே.வி.பி.யிலிருந்து விலகியதாக கூறப்படுகிறது. இன்றைய ஜே.வி.பி.யின் போக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

முதலாவதாக, நான் ஜே.வி.பி.யின் உறுப்பினராக எப்போதும் இருந்ததில்லை. முன்னைய தலைமை அணியினருடன் எனக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. லயனல் போபகே போன்றவர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். சுயநிர்ணய உரிமை தேசிய இன உரிமை என்பன தொடர்பான அவரது போக்குகளுடன் எனக்கு உடன்பாடிருந்தது. ஆனால் இன்றைய ஜே.வி.பி. அரசுக்கு எதிரான பிரதான பிரச்சாரமாகவே தீர்வுத்திட்டத்தை பயன்படுத்தி வருகிறது. கடந்த காலங்களில் மாகாண சபைக்கும் கூட இப்படித்தான் ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்தது. ஜே.வி.பி மத்தியப்படுத்தப்பட்ட ஒரு அரசையே வலியுறுத்தி வருகின்றது. ஆனால் உலக அனுபவங்களின்படி அது சாத்தியமாகவில்லையே. ஜே.வி.பி. இன்னமும் வரலாற்றுப் பாடங்களை சரியாக படிக்கவில்லை.

**ஜே.வி.பி.யின் புதிய மீள்வருகை குறித்த உங்கள் கருத்தென்ன?**

ஜே.வி.பி.க்கு புதிய பிரவேசம் என்று ஒன்றும் இல்லை. அது பழைய அதே பண்புகளையே கொண்டிருக்கிறது. அண்மையில் களனி பல்கலைக்கழக சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு. அங்கு மாற்றுக் கருத்துக்களையுடைய தரப்பினரை தமது பழைய பாணியிலான வன்முறையை பயன்படுத்தி அவர்களை கண்மூடித்தனமாக தாக்கி படுகாயப்படுத்தியதும் அதிலிருந்துதான் வருகிறது.

**அரசாங்கத்தின் தீர்வு அமுலுக்கு வரவே நீண்டகாலமெடுக்குமெனவும் மாகாண சபையையே மீள அமுல் படுத்துமாறும் அண்மையில் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா உட்பட இன்னும் சிலர் கோருவது பற்றி....**

நான் முன்னரே கூறியபடி தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பு இன்றி எதனையும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட முடியாது. ஆனால் தமிழ் கட்சிகளுக்கிடையிலேயே இன்னமும் கருத்தொருமிப்பு ஏற்படவில்லை. தமிழ் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டுமென நானும் கோரிவந்துள்ளேன். ஆனால் இப்படி இதுவரை ஏற்படவில்லை. தமிழ் கட்சிகளுக்கிடையில் ஒருமித்த முடிவு ஏற்பட வேண்டியது அவசியம். ஈ.பி.டி.பி. தலைவரால் இடைக்கால நிர்வாக அலகு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஏனைய தமிழ் கட்சிகள் அதற்கு உடன்பட வேண்டுமே. எனவே எதிர்க்கட்சி, முஸ்லிம் கட்சி, இடதுசாரி கட்சிகள் என்பவற்றுடன் தமிழ் கட்சிகள் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும்.

**இலங்கையின் இடதுசாரிக்கட்சிகள் பல சந்தர்ப்பங்களில் மாறி நின்று சிறுபான்மை மக்களுக்கு எதிரான கருத்துக்களையும் தெரிவித்து வந்துள்ளார்களே இது எப்படி சாத்தியமானது?**

இனங்கள் சமத்துவமாக நடத்தப்பட வேண்டுமெனும் நிலைப்பாட்டில் ஆரம்பம் தொட்டு இடதுசாரிக்கட்சிகள் செயற்பட்டு வந்துள்ளன. ஆரம்பத்தில் பாட்டாளி வர்க்கம் என்கிற ரீதியில் மக்கள் இணைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது சாத்தியமாகவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவில் 50களில் தமிழரசுக்கட்சி சுயாட்சி குறித்து பேசி வந்த காலப்பகுதியிலேயே கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்தி வந்தது. சமசமாஜக்கட்சி கூட அண்மையில் தான் அவை குறித்து பேசி வருகிறது.

இடதுசாரிக் கட்சிகளுக்கிடையில் இனப்பிரச்சினையில் பல விடயங்கள் குறித்து சரியான நிலைப்பாடு இல்லை. உதாரணத்துக்கு வடக்கு கிழக்கு இணைப்பு குறித்து நான் உட்பட சிலர் இணைப்பு அவசியமென கூறிவருகிற போதும் இது குறித்து உத்தியோகபூர்வமாக இடதுசாரிக்கட்சிகளிடம் இறுதியான முடிவு இல்லை.

**அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற அவசரகால சட்டத்துக்கு பாராளுமன்றத்தில் சில இடதுசாரிகள் ஆதரித்தும் சிலர் எதிர்த்தும் வாக்களித்து வருகிறார்களே! உங்கள் நிலைப்பாடு என்ன?**

ல.ச.ச.க.வினில் சிலர் இன்னமும் அவசரகால சட்டத்துக்கு ஆதரவளித்து வருகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவில் இதுவரை ஆதரித்து வாக்களித்து வந்துள்ளது. அவசரகால சட்டம் அமுலிலிருந்த போதும் மக்களின் அடிப்படை உரிமைகள் எதுவும் பறிக்கப்படவில்லை. கூட்டம் கூடுவது, ஊர்வலம் நடத்துவது, வேலைநிறுத்தம் செய்வது, தொடர்புசாதன சுதந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. யுத்த நிலைமைகளில் சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்யும். அது கூட பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்கத்துக்காகவே. பயங்கர யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு லட்சம் படை வீரர்கள், பல தளபாடங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பல படைவீரர்கள் தினமும் உயிர்த் தியாகம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜூன் 5ம் திகதி சர்வதேச சூழலியல் தினமாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# யுத்தங்களினால் ஏற்படும் நிலச் சீரழிவுகள்: சூழலுக்கான ஓர் அச்சுறுத்தல்!

அடுத்த 30 வருடங்களில் பூகோள சனத்தொகை 8.5பில்லியனாக வளர்ச்சியடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 7.1 பில்லியன் மக்கள் வளர்முக நாடுகளில் காணப்படுவார்கள். கைத்தொழில்மய நாடுகளில் இன்று காணப்படும் 1.2 மக்கள் 2025ம் ஆண்டில் 1.4 பில்லியனாக வளர்ச்சியடைவார்கள்.

உலகில் இரட்டிப்பாகும் சனத்தொகை பூகோளச்சூழலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? அதிகரித்து வரும் உணவுத்தேவையின் அமுக்கங்களினால் காட்டு வளங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருமா. மக்கள் இரண்டு மடங்கு அதிகரிப்பார்கள் என்பதன் கருத்து மாசுபடலும், சக்திநுகர்வும் இரு மடங்காகும் என்று அர்த்தமாகுமா? வளர்முக நாடுகளில் எழுச்சி பெற்றுவரும் விருப்புக்களும், வாழக்கைத் தரமும் சூழலியல் தாக்கங்களை மேலும் தூண்டி விடுமா? சூழலியல் சேதங்களை ஏற்படுத்தாமல் 2050இல் உலக மானது 10 பில்லியன் மக்களுக்கு ஒரு வசதியான வாழ்க்கைத்தரத்தை அளிக்குமா? பயிர்ச் செய்கைக்கு உட்பட்ட தரமான வளம் நிறைந்த நிலங்களின் சீரழிவுகள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்? என்பது போன்ற விவாதங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்மைக்காலங்களில் பூகோள ரீதியான விவசாய விரிவாக்கமானது மண் வளத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மண்ணின் உற்பத்தித்திறன் அதன் சேதனப் பொருளிலும், மண் உக்கலிலுமே தங்கியுள்ளது. ஆனால் வருடாந்தம் ஏற்பட்டுவரும் காபன் இழப்பு இவ்வுற்பத்தித் திறனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து 1.2பில்லியன் ஹெக்டர்கள் மண் நிலம் அல்லது உலக தாவர நிலப் பகுதியில் 10.5 சதவீதம் மனித நடவடிக்கைகளினால் தரமிழந்தது. ஆசியாவில் 450 மி. ஹெக்டர்களும், ஆபிரிக்காவில் 320மி. ஹெக்டர் நிலப்பரப்புக்களில் மண் அழிவுகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் உலகப்போரிலிருந்து உலகம் முழுவதும் இடம்பெற்று வருகின்ற இத்தகைய மண் சீரழிவுகளுக்கு அளவுக்கதிகமான மேய்ச்சலும், காடழிப்பும், விவசாய நடவடிக்கைகளும் காரணமாக இருந்தாலும் யுத்த நடவடிக்கைகளே பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

உள்நாட்டிலும் சர்வதேசரீதியாவும், இடம்பெற்று வரும் போர் நடவடிக்கைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மண் தரமிழப்புக்குக் காரணமாக இருக்கின்றன. வளமான விவசாய நிலங்களில் பாரிய பள்ளங்களை ஏற்படுத்தல், நெருப்பினால் அழிவு, விலங்குகளின் அழிவு, மண்ணின் படைகளின் மாற்றம், உயிரினங்கள் அழிவடைதல் போன்ற பாரிய தாக்கங்களை யுத்தங்கள் ஏற்படுத்தி வருகின்றன. யுத்தம் முடிவுற்ற பின்னரும் அதன் தாக்கங்கள் நீண்ட காலத்துக்கு இருக்கும். நிலத்தில் பயன்பாடு பாதிக்கப்பட்டு உற்பத்தித்திறன் பெரிதும் வீழ்ச்சியடையும். அது மட்டுமின்றி இவ் யுத்தங்கள் பொருளாதார, சமூக நடவடிக்கைகளையும், இடைநிறுத்தி விடுகின்ற தினால் மனித சக்தி பணம், கருவிகளைச் சூழல்முகாமைத்துவ முயற்சிகளிலிருந்து திசை திருப்பி வருகின்றன. போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் உற்பத்தித் திறன் கொண்ட விவசாயத்தில் மிகக் கவனமாக தமது நடைமுறைகளை மேற்கொள்வது அரிதாக்க காணப்படுவதுடன் கால்நடைகள், விதைகள் மற்றும் கருவிகளையும் இழந்தவர்களாகி விடுகின்றனர்.

மக்கள் அகதிகளாக மாற்றப்படுகின்றனர். புதிய நிலங்களை பெறும் சந்தர்ப்பங்களை அவர்கள் இழக்கின்றனர். பலவருடங்களுக்கு சாதாரண வாழ்க்கை நிலைக்குத் திரும்புவதை தடை செய்கின்ற புதிய சூழலுக்கு தம்மை மாற்றிக்கொள்வதிலும் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

கடந்த காலத்தின் உணவுப்பழக்





கமும் பண்டப் பயிர்களின் உற்பத்தியும் யுத்தகாலங்களைப் பிரதிபலிப்பவையாகவே இருந்தன. 1914இன் பின் இறப்பருக்கான கேள்வி யுத்த தளபாடங்களுக்கான கேள்வியினால் அதிகரித்தது. பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை விரிவடைந்தது. தானிய விலைகள் அதிகரித்தன. எல்லை நிலங்களை நோக்கி விரிவு ஏற்பட்டது. இவை யெல்லாம் யுத்த நிலைமைகளின் தாக்கத்தையே பிரதிபலித்தன.

20ம் நூற்றாண்டின் இரண்டாவது அரைப்பகுதியில், 1945 - 81 காலத்தில் பெரும்பாலும் வளர்முக நாடுகளில் சார்பளவில் 133யுத்தங்கள் அல்லது ஆயுத முரண்பாடுகள் தோன்றின. வியட்னாம் போர், 1967, 1973 எகிப்து இஸ்ரேல் யுத்தங்கள் பெரியனவாக இடம் பெற்றன. ஆபிரிக்காவில் அடிக்கடி இடம்பெற்ற முரண்பாடுகளினால் குறிப்பாக, உள்நாட்டு யுத்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. உலக மொத்த நிலப்பகுதியில் 10 சதவீதத்துக்கும் குறைவாகக் கொண்டிருக்கும் ஆபிரிக்கா 1987இல் உலக மொத்த அகதிகளில் 50 சதவீதத்துக்கு மேல் கொண்டிருந்தது.

தென் ஆசியா, தூரகிழக்கு நாடுகள், லத்தீன் அமெரிக்காவின் சில பகுதிகள், ஆபிரிக்க நாடுகள் என்பன மொத்த தேசிய உற்பத்தியில் அதிகளவு வீதாசாரத்தை இராணுவப் படைகளுக்குச் செலவிட்டன. ஆபிரிக்க நாடுகள் சராசரியாக மொத்த தேசிய உற்பத்தியில் 3.2 வீதத்தை 1980களின் பிற்பகுதியில் இராணுவப் படைகளுக்குச் செலவிட்டன. இப்பணத்தினை சூழல் முகாமைத்துவம், விவசாய விருத்தி போன்றவற்றில் செலவு செய்திருந்தால், பெருமளவு நன்மைகள் கிடைத்திருக்கும்.

1900ல் இருந்து இராணுவ செலவீடானது பூகோள ரீதியாக 30மடங்கு அதிகரித்ததுடன், பெருமளவான இயற்கை வளங்களையும் உறிஞ்சி விட்டது. உலகின் பல பகுதிகளில் வெடிக்காத குண்டுகளினால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. வட ஆபிரிக்காவின் சில பகுதிகளில் இரண்டாம் உலகயுத்த காலத்துக்குரிய 5-19 மில்லியன் கண்ணி வெடிகள் விசேடமாக லிபியாவில் இன்னும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றன. எகிப்து - இஸ்ரேல் - பாலஸ்தீனியப் பகுதிகளில் 1967, 1973 காலத்துக்குரிய கண்ணிவெடிகள், வெடிக்காத எறிகணைகள் இன்னும் காணப்படுகின்றன. 1982இல் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக போக்லந்து தீவில் பரந்த அளவில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

ஆப்கானிஸ்தான், ஈரான் - ஈராக், மொசாம்பிக், அங்கோலா ஆகிய நாடுகளில் கண்ணிவெடிகளும், ஏனைய வெடிமருந்துப்பொருட்களும் விவசாயத்தில் ஈடுபடுத்தப் படுகின்ற அல்லது புல்மேயும் கால்நடைகளுக்கு உயிர் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இந்தோசீனாயாவில் நாடு பூராவும் ஏறக்குறைய 23மில்லியன் வெடிக்காத எறிகணைகளும், 2 மில்லியன் வெடிக்காத குண்டுகளும் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1914 - 18இலும், 1939 - 45 காலத்திலும் விட்டுச்சென்ற பொருட்களைக் கையாள்வதற்கு ஐரோப்பிய நாடுகள் இப்பொழுதும் வெடிமருந்துகளை அழித்து விடும் குழுக்களை நிர்வகித்து வருகின்றது. 1930, 1940 காலங்களுடன் ஒப்பிடும் பொழுது நவீன கண்ணி வெடிகள் அதிக பிரச்சினைகளைக் கொண்டதாக இருப்பதுடன் அவை பிளாஸ்டிக் கொண்டு அமைக்கப் பட்டிருப்பதினால் அவற்றினைக் கண்டு பிடிப்பதும் இலகுவான தன்று.

பெரும்பாலான உலக விவசாயிகள் எதிர்வரும் தசாப்தங்களில் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குவர். யுத்த நடவடிக்கைகளின் பாதிப்புக்களினால் விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. போர் நடவடிக்கைகளினால் பற்றைக்காடுகள் தீப்பிடித்து எரிகின்றன. இதனால் எவ்வளவு நிலங்கள் இழக்கப்படுகின்றன என்பதை மதிப்பிடுவது கடினம். ஆனால், குண்டுத்தாக்குதல்களினால், எறிகணைகளினால் ஏற்படும் பள்ளங்களை அடையாளம் செய்வது இலகுவானது. வியட்னாமில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 25 மில்லியனுக்கு மேற்பட்ட இத்தகைய பள்ளங்கள் காணப்படுவதுடன் 3 மில்லியன் கனமீற்றர் மண்ணும் இடம்பெயர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரான்போர்ட் உயிரியல் ஆய்வுப்பிரிவின் (1971) அவதானிப்பின்படி 500 இறாத்தல் நிறையுள்ள உயர் வெடிப்புச் சக்திகொண்ட குண்டானது 14 மீற்றர் அகலமும், 9 மீற்றர் ஆழமுமான பள்ளத்தை உருவாக்கக்கூடியது என மதிப்பிடப்பட்டுள்ளது. 1968 - 69 காலத்தில் இத்தகைய 35இலட்சம் குண்டுகள் வியட்னாம் மீது போடப்பட்டன. குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட 25 வருடம்பழமைவாய்ந்த பள்ளங்கள் நியூகினியாவில் இன்னும் காணப் படுகின்றன.

1960களில் குண்டு போடப்பட்ட வியட்னாமின் சில பகுதிகள் 1988வரைக்கும் தாவரப்போர்வையின்றி வெறும் நிலமாகவே காணப்பட்டது. தாக்குதல்கள் இடம்பெறும் பொழுது செடிகள், பற்றைகள், தீப்பற்றி எரிவதும், ஆயுதங்களைப் பயன்படுத்தும் போது உலோகத் தகடுகளினால் மரங்கள் பாதிக்கப்படுவதும் முக்கியமான பிரச்சினையாக உள்ளன.

முதலாம் உலக யுத்த காலத்தில் நச்சுவாயுக்கள், உதாரணமாக குளோரின், மஸ்ராட் வாயு, பொஸ்கேன் என்பன ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்டன. 1925 ஜெனிவா மகாநாட்டு உடன்படிக்கையின் கீழ் இவை தடை செய்யப்பட்டிருந்தாலும் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா போன்ற பிரச்சினைகள் காணப்படும் இடங்களில் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய வாயுக்கள் வனஜீவராசிகளைப் பாதிக்கக்கூடியன. ஐக்கிய அமெரிக்கா ஏறக்குறைய 9 மில்லியன் கிலோகிராம் நிறையுள்ள சி. எஸ். வாயுவை வியட்னாம் யுத்தத்தின் போது பயன்படுத்தியதினால் விலங்கினங்களுக்குப் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன.

எதிரிகளின் ஒதுக்கிடங்களையும் உணவுப் பயிர்களையும் அழிப்பதற்கு தாவரங்களை, இலைகளை யுதிர்க்கச் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட இரசாயனங்களினால் பாரிய சேதங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. இத்தகைய இரசாயனக் கூட்டுக்களை 1950களில் மலாயாவில் ஐக்கிய அமெரிக்காவினால் பரீட்சிக்கப்பட்டது. ஆனால் வியட்னாம் போரிலேயே பெருமளவு பயன்படுத்தப்பட்டது. இவை போன்ற பல வாயுக்கள் உணவுச் சங்கிலியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன.

வியட்னாம், லாவோஸ், இந்தோனேசியா, இலங்கை போன்ற நாடுகளில் யுத்தங்களினால் காட்டு வளங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நேபாம் குண்டுகள், காடுகளைப் பாரிய இயந்திரங்களின் மூலம் அழித்துத் தரை மட்டமாக்குதல் போன்றவற்றினால் 22மி. ஹெக்டர் காட்டு நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தங்களின் இத்தகைய அழிவுகளினால் நிலவளங்கள் பாதிக்கப்பட்டு வரும் அதேவேளை மிகவேகமாக அதிகரித்துவரும் சனத்தொகையில் நிலவளங்கள் மக்களிடையே பகிரப்பட்டு வருவதையும் அவதானிக்கலாம். மறுபக்கத்தில் இத்தகைய வளங்கள் சில நாடுகளில் ஒரு சிலரின் கைகளில் குவிந்து காணப்படுவதையும் காணலாம். பிரேசிலில் 70சதவீத மானவர்களும் யாவாவில் 80 சதவீதமானவர்களும் நிலமற்றவர்கள். ஹொண்டூரேஸில் மூன்றிலிரண்டு பங்கு வளமான நிலங்கள் 1980களில் 5 வீதமான நிலச்சொந்தக்காரரிடம் இருந்தது. பங்களாதேசத்தில் 2025ம் ஆண்டு ஆண்டு தலா ஒருவருக்கான பயிர்ச்செய்கை நிலம் 0.04 ஹெக்டர்களாக குறைவடைந்து செல்லும். எனவே அதிகரித்து வரும் சனத்தொகைக்கு உணவளிப்பது எதிர்காலத்தில் பெரும் பிரச்சினையாக மாற்றமடையலாம்.

கடந்த 30 வருடங்களில் 2.0 சதவீதமாக இருந்த உணவு உற்பத்தியின் வளர்ச்சி இனிமேல் 1.6 வீதமாகவே இருக்கப் போகின்றது. காடழிப்பு தொடர்கின்றது. மண்ணின் வளம் தரமிழந்து வருகின்றது. வளர்முக நாடுகளின் சனத்தொகை மிக விரைவாக அதிகரிக்கின்றது. சர்வதேசரீதியாகவும், நாடுகளுக்கிடையிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் நிலவளத்தைச் சீரழிக்கின்றன. குறிப்பாக வளர்முக நாடுகளில் யுத்தங்களினால் பாரிய சேதங்கள் விவசாய வளங்களில் இடம்பெறுகின்றன. இது சூழலில் கடும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் மனித வாழ்வினையும் பாதிக்கக் கூடியது. புதுப்பிக்கக் கூடிய வளங்களின் தரத்தினை முற்றாகச் சீரழித்து விடும்.

இத்தகைய சூழல் சீரழிவுகள் இன்று மாற்ற முடியாத அளவுக்குச் சென்று விட்டன. இத்தகைய சூழ்நிலைகளில் தரமிழத்தலுக்கான உண்மையான அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் காரணங்களை அகற்றுகின்ற ''சமூகமாற்றம்'' அறிவுறுத்தப்பட்டாலும் இந் நிலைமை தொடர்ந்து நீடித்து வருகின்றதையே காணமுடிகின்றது. அதுமட்டுமன்றி புதுப்பிக்கக்கூடிய வளப்பற்றாக்குறை ஒரு சில விடயமாக இருந்தாலும் சில வேளைகளில் அது அரசியல், பொருளாதாரக் காரணிகளை ஒன்றிணைத்து விடுவதன் மூலம் சமூக முரண்பாட்டுக்கும் வழி வகுத்து விடுகின்றதை இன்றும் பல நாடுகளிலும் காண முடிகின்றது. எனவே சூழலை பாதுகாப்பதை மனிதஇனம் கவனத்திற்கொள்ளாது விடின் ஒட்டு மொத்தமான சீரழிவுக்கு மனித இனம் உட்படலாம். தற்போதைய போக்குகள் இதனையே எடுத்துக்காட்டுகின்றன

எஸ். அன்ரனி நோபர்ட்

www.tamilarangam.net



**இக்கதை லண்டனிலிருந்து மாதந்தோரும் வெளிவரும் Palestine Times எனும் பத்திரிகையில் வெளிவந்தது. பலஸ்தீன போராட்ட இலக்கியத்தில் கவிதை ஏற்படுத்திய தாக்கம், அல்லது கவிதை இலக்கியத்தின் தனித்துவமிக்க பதிவுகள் போன்று ஏனைய பிற துறைகள் பங்களிப்புச் செய்யவில்லை என்றே தோன்றுகிறது. எமது கிடைப்பு நிலைக்கேற்பவாறான தேடலில் இக்கதையை தமிழுக்குத் தருகிறோம். இதன் முதல் பகுதி கடந்த இதழில் பிரசுரமாகியிருந்தது.**

**°Palestine Times பத்திரிகை மாதந்தோறும் கொழும்பில் இல.78, தெமட்டகொட வீதி, கொழும்பு-9இல் ரூபா 10க்கு கிடைக்கிறது.**

அவர்கள் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார்கள். வெறிபிடித்தவனாய் நின்ற அவர்களில் பெரியவன் கத்தினான். ''பையன் எங்கே...? கெதியாய்ச் சொல்லு. அவன் இங்குதான் வந்தான் என்று எங்களுக்குத் தெரியும். அதற்கான சாட்சியும் இருக்கு. உடனே சொல்லு.. சொல்லாவிட்டால் வீணாய்ச் சாவாய்...''

அவள் மறுத்தாள். எந்தப்பையனும் இங்கு வரவில்லையென்றாள். அவர்கள் இதை நம்பவில்லை. ''வீட்டுக்குள் தேடுங்கள்..'' என்றான் பெரியவன். மூலைமுடுக்கெல்லாம் தேடினார்கள். தேடும் அவசரத்திலும் கோபத்திலும் அவளின் பொருட்களில் சிலதை நொறுக்கினார்கள். இவள் கெஞ்சினாள். ''தயவு செய்து.. என்னைத் தனியே விட்டு விடுங்கள்.. எனக்கு எந்தப் பையனைப் பற்றியும் தெரியாது...' என்றாள்.

''பொய்... நீங்களெல்லாம் பொய்யர்கள்...'' அவன் கத்தினான். கத்திக்கொண்டிருக்கையில் இன்னொருவன் சிறுவன் ஒளிந்திருந்த பக்கம் சென்றான். சந்தேகத்தில் அந்தச் சிறு இருட்டறையை உன்னிப்பாய் நோக்கினான்.

முதலில் யாரும் ஒளிந்திருப்பதாகப் படவில்லை. பின்புதான் குறுகிப் போய் குந்திக்கொண்டிருந்த சிறுவனைக் கண்டு கொண்டான்.

''இந்தா இருக்கிறான்...'' என்று கத்திக்கொண்டே கையில் பிடித்து இழுத்தான். சிறுவன் பேச்சுமூச்சற்று நடுங்கிக்கொண்டே நின்றான்.


''எமக்கு கல்லெறிந்தவர்களில் ஒரு ஆளோ..'' என்றான் இவனைப் பிடித்த பொலிஸ்காரன் நக்கலாக.

மாட்டுப்பட்டவன் விழித்துக் கொண்டு நின்றான். அவர்கள் அவனை, ஒவ்வொருவராய் இழுத்தும் தள்ளியும் விளையாடினார்கள். அவர்களின் தடிகளும் அவனைப் பதம்பார்த்தன. சிறுவன் பயத்தால் விறைத்து அழுதான். அடிக் காயங்களின் வேதனை அவனைப் பயமுறுத்தியது. தலையிலும் உடம்பிலுமிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

சாராவுக்கு ஆத்திரம் தாளவில்லை. கோபத்தில் கத்தினாள். ஒரு சின்னஞ் சிறுவனை கொடுமையிலிருந்து காப்பாற்ற வக்கில்லாத ஊரும் உலகமும்.. கோபம் தலைக்கேறியது.

''அரக்கர்களே... இந்தச் சின்னஞ் சிறுவனை விட்டுவிடுங்கள். ஆயுதங்களோடு இருக்கிற இத்தனைபேர் இவனைக்கொடுமைப் படுத்துகிறீர்களா.... சீ... மிருகங்களே. உங்களுக்கு வெட்கமில்லை...''

இவளின் கோபக் கூக்குரல் அவர்களுக்கு இன்னும் ஆத்திர மூட்டியது. ஹைதமின் தலையிலிருந்து வடிந்த ரத்தம் அவன் உடையையும் நனைத்தது. இவள் அவர்களைத்திட்டித்தீர்த்தாள். பொறுக்கமாட்டாத அவர்களில் ஒருவன் இவளின் தலையில் ஓங்கி அடித்தான். ஓவென்ற அலறலுடன் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு தரையில் சாய்ந்தாள். ரத்தம் பீரிட்டுக் கொண்டிருந்தது. கவனிப்பாரற்று விழுந்து கிடந்த அந்த வயதானவளின் மூச்சு சற்றைக்கெல்லாம் அகன்றது. இரத்த வெள்ளத்தில் கிடந்தாள்.



# இறுதி ஊஞ்சல் பறவை

ஓர் அநாதையாய் மரணித்துப்போனாள்.

மரணித்துப்போன அவளை அப்படியே விட்டு விட்டு பொலிஸார் அவனை வெளியே இழுத்துச் சென்றனர்.

ஒரு பொலிஸ் வேன் நின்று கொண்டிருந்தது. அதற்குள்ளும் இவனையொத்ததும், வயதானதுமான சிறுவர்கள் அடைபட்டுக் கிடந்தனர். இவனையும் இழுத்துத் தூக்கி உள்ளே போட்டனர். இவன் சாராவை நினைத்து அழுதான். எனக்காகத்தானே அவள் வீணே செத்தாள். கண்ணீரும் இரத்தமும் ஓடிக்கொண்டேயிருந்தன. பயம், வேதனை, தனிமை எல்லாம் இவனை மிகுந்த அச்சப்படுத்தியது.

வேனுக்குள் இருந்தவர்களும் இவனைப்போல் கல்லெறிந்தவர்கள் தான். அதில் ஒருவன் இவன் முகத்தில் வழிந்த ரத்தத்தை துடைத்து விட்டான். எனினும் இவனுக்கு சாராவின் மரணமே கண்ணுக்குள் வந்து நின்றது. தனது மரணமும் கிட்டத்தில்தான் இருக்கிறது போலவும் தோன்றியது இவனுக்கு.

எல்லோரையும் கொண்டு போய் ஓர் நிலவறைச் சுரங்கத்தில் அடைத்தார்கள். இங்கு பிடிபட்டவர்களுக்கு கொடூரங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இதுபோன்ற பல சித்திரவதைக் கூடங்கள் இங்கு நிறையவே இருக்கின்றன. இவனையும் அங்குள்ள ஓர் தனித்த சிறையில் தள்ளினான் ஒரு பொலிஸ்காரன்.

'இவனை வைத்து நல்லதொரு பாடம் கற்பிக்க வேண்டும்'' என்றான் தன்னுடன் கூடவந்திருந்த பொலிஸ்காரனைப் பார்த்து.

''சாமத்தில் வந்து இவனைக் கொண்டு போய் தூக்கிலிடுவோம். இவன் கல்லெறிகிற எல்லோருக்கும் ஒரு பாடமாயிருக்க வேணும். சுதந்திரமாம்.. சமத்துவமாம்... ஹா.. இவர்களை எல்லாம் கொல்ல வேண்டும்.... கொன்றால்தான் இவர்களின் தொல்லை நீங்கும்... இந்த நாட்டையும் கஷ்டமில்லாமல் எடுத்துக்கொள்ளலாம்...'' என்றான்.

பசியும் குளிரும் இவனைக் கொடூரப்படுத்தியது. முடங்கிப் போனான். இவனுக்கு முன்னாள் இருந்த வயதான சிறுவனை வெறித்துப் பார்த்தான். அவனின் முகமும் அடிபட்டு வீங்கியிருந்தது. ஒரு கையிலும் முறிவேற்பட்டிருந்தது.

அவன் இவனை அழைத்தான். ''எல்லா சரியாய்ப் போய்விடும்.. நீயொரு வீரன்.. எல்லாம் நல்லதாய் நிகழட்டும் உனக்கு... இந்த ஆக்கிரமிப்பும் அழியட்டும்.... இந்த உலகமே எம்மைவிட்டு செவிடாய்த்தானே இருக்கிறது. இந்த மலைகளுக்கும், ஆறுகளுக்கும் எங்கள் வேதனைகளுக்கு சாட்சி சொல்லும் திறனிருந்தால்.. வாழ்க எம் தேசம்.. வாழ்க சுதந்திரம்.... வாழ்க ஜனநாயகம்... எங்களில் எத்தனை பேர் எந்த உதவியுமில்லாமல் சண்டையிட்டிருக்கிறோம். பெண்களும், சிறுவர்களும் சண்டை பிடிக்கிறார்கள்தானே.. நீ அமைதியாய் இரு.. எங்களுடன்தானே இருக்கிறாய்....''

இவனை ஆறுதல்படுத்தவென்றே அவன் நிறையக் கதைத்தான்.

நள்ளிரவு. முன்னர்வந்த இரு பொலிஸாரும் சிறையருகே வந்தார்கள். ஹைதமை தேடி இழுத்து பலவந்தப்படுத்தினார்கள். ஏனையவர்கள் அவனை விட்டு விடுமாறு கத்தினார்கள். அவன் சின்னப் பையன். அவனை வீட்டுக்கு போகவிடு' என்றார்கள். அவர்களுக்கு ஏறவில்லை. எல்லாரையும் தள்ளிவிட்டு துப்பாக்கியைத் தூக்கி ஒருவன் எச்சரித்தான். மற்றவன் ஹைதமை இழுத்துப் போனான்.

அந்தச் சின்னப் பையனை அவர்கள் ஒரு காரில் ஏற்றி அந்தக் கிராமத்துக்கு வெளியே எங்கோ அழைத்துச் சென்றபொழுது இந்த உலகமே தூங்கிக்கொண்டிருந்தது.

கார் விரைந்து ஓர் பழைய 'ஒலிவ்' மரத்தடியருகே நின்றது. ஒருவன் பின் 'சீட்'டிலிருந்த ஒரு தடித்த கயிறொன்றை எடுத்து வந்தான்.

இவன் அதிர்ந்து போனான். வார்த்தைகள் நாக்குழறி வந்தன. 'என்னை என்ன செய்யப் போகிறீர்கள்..... என்னை விடுங்கள்.. என்னை வீட்டுக்குப் போக விடுங்கள்...'' ஹைதம் அழுதான். அவன் அழுகை அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

வயதான அந்தப் பெண்ணை அடித்துக்கொன்றவன் தான் கைகளில் கயிறு வைத்திருந்தான். ''இங்கே பார் பொடியா.. உன் மூலம் நாங்கள் கல்லெறிபவர்களுக்கும், புரட்சியாளர்களுக்கும் பாடம் புகட்டப்போகிறோம். உன் மூலம் அவர்கள் என்ன நடக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும். புரட்சியாம் புரட்சி.. நீங்களெல்லாம் அழிந்து நாசமாய்ப் போங்கள்..'' என்று பொருமினான்.

அந்த விஷச் சொற்கள் இவனை உசுப்பியது. இவனின் சின்ன உடம்பினுள் ஒரு தங்கக் கழுகு உள் நுழைந்து விரிந்தது போன்று இவனுள் ஓர் தைரியம் தோன்றியது. ஒரு பெரிய மனிதனாய் சத்தமிட்டு சொன்னான். ''இல்லை.. இல்லை.. நீங்கள் தான் நாசமாய்ப் போவீர்கள். நீங்கள் செய்கிற அநீதிக்கும், கொலைக்கும் நீங்கள் தான் அழிந்து போவீர்கள்.. ஒரு சின்னப் பையனை சின்னப் பையனாக இருக்க விடுகிறீர்களா நீங்கள்... எங்களிடம் இருக்கிற ஒரே ஆயுதமே கல்தான். நீங்கள் என்னைக்கொன்றால் நான் ஒரு தியாகியாய்த்தான் மரணிப்பேன். நீங்கள் அப்படியில்லை. நரகத்துக்குத்தான் போவீர்கள். என் ரத்தம் உங்கள் கைகளில் ஒட்டிக் கொண்டேயிருக்கும். உங்களால் அதைக் கழுவித்துடைத்துவிட முடியாது. வாழ்க பலஸ்தீன்.. ஒழிக ஆக்கிரமிப்பு..''

இறுதியாக அவன் கதைத்தவை இவைதான். இந்தக் கதையுடன் அவன் கழுத்தில் சுருக்கிட்டு மரத்தில் கட்டித் தொங்கவிட்டார்கள். சிறுவனின் கால்கள், கைகள் உதறித்துடித்தன. சற்றைக்கெல்லாம் மூச்சு அடங்கியது. கழுத்து ஒரு பக்கம் தொங்கிக்கொண்டிருந்தது.

கொல்லப்பட்ட இவனைப் போலான பிறதேசத்துச் சிறுவர்கள் தம் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருப்பார்கள். விடுதலைக் காய்ச் சண்டையிட இவனைப்போல் அவர்களுக்குத் தேவையிருக்காது.

இந்த மகா காரியத்தை முடித்த அந்த குற்றவாளிகள் இருவரும் தங்கள் வீடுகளையும், தங்கள் பிள்ளைகளையும் நோக்கி வீட்டுக்குத் திரும்பினார்கள். இங்கே ஓர் இளம் கழுகு அநியாயமாய்க் கொல்லப்பட்டுக் கிடந்தது. உலகம் தன் சோம்பல்தனமான உறக்கத்தில் மூழ்கிப் போயிருந்தது.

வழமைபோல் காலையானது. ஹைதமின் சின்ன உடம்பை சிலர் வீட்டுக்கு காவிக்கொண்டு வந்தார்கள். அவனின் சின்னத்தம்பிகள் இவனின் அநியாயச் சாவின் துக்க மேலீட்டால் ஓவென்று அழுதார்கள். அவனின் தாய் பித்துப்பிடித்தவள் போல் ஓயாது பார்த்து விட்டு மயங்கிப்போய் விட்டாள். அயலவர்கள் உறவினர்கள் என கூட்டம் கூடி ஆறுதல்படுத்தியது.

எத்தனையோ சின்ன உடம்புகள். ஒரு சிறு மெழுகாய் மிகப் பிரகாசித்துவிட்டு அணைந்து விடுகின்றன. இவனும் அப்படித்தான். ஓர் உயிர் முடிவுறா உலகுக்குள் நுழைகிறது. நம்பிக்கையற்றதைப்போல் சிலவேளைகளில் தோற்றுகிற விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவுமென தொடர்ந்து கொண்டிருக்கும் உயிர்களின் முடிவில்லா பயணம் தொடர்கிறது தானே.

இங்கே எல்லாம் இப்படி நடந்து கொண்டிருக்கையில் உலகின் பிற பகுதிகளில் ஒரு கப் காப்பியை உறுஞ்சிக்கொள்கிற, இளம் தென்றலை சுவாசிக்கிற, அல்லது எதுவுமற்று இருக்கிற, அல்லது மிக 'பிஸி'யாக இருக்கிற மனிதர்களின் புதிய காலை உதயமாகும். அவர்கள் அவர்களாக இல்லாமல் மாற்றப்பட்டிருக்கிற ஒரு துரதிருஷ்ட சமூகத்தின் வேதனைகள், அழுகைகள் ஒன்றும் அவர்களை எட்டவே எட்டாது...!

○

*ஆங்கில மூலம்: யாகி*

தமிழில்: *எம்.கே.எம்.ஷகீப்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகள்: ஆட்பல வீழ்ச்சிக்கான காரணங்கள் என்ன? – 3

# "அரசியற் கட்டுக்கோப்பு இன்றி ஆட்சேர்ப்பில் கவனம் செலுத்துவதில் அர்த்தமில்லை!"

– டி.சிவராம்

இலங்கைத் தமிழர் மத்தியிலான போர்ப் பங்கேற்பு விகிதத்தின் வீழ்ச்சி தமிழீழ விடுதலை இயக்கத்தின் போரிடு திறனை எவ்வகையிற் பாதித்தது என்பதை நாம் ஆராய வேண்டுமெனில் முதலில் நாம் உச்சபயன்பாட்டுப் படை மட்டம் (optimum force level) என்ற கருத்தினை கவனிக்க வேண்டும். புலிகளினுடைய ஆட்சேர்ப்புக் கொள்கையினை நாம் இக்கருத்தின் அடிப்படையிலேயே நோக்க வேண்டும்.

ஒரு போராட்ட இயக்கத்தினுடைய நிதி வளங்கள் நிர்வாகத் திறன், அரசியற் கட்டுக்கோப்பு, வழங்கற் சக்தி (logistical capability) மற்றும் படைகளை இரகசியமாக முகாமிட்டு வைத்திருப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் தேவையான பாதுகாப்பான நிலப்பரப்பின் அளவு என்பவற்றோடு பொருந்தக்கூடிய வகையில் அவ்வியக்கம் ஒரு அரசின் இராணுவத்திற்கெதிராக மிகச் சிறந்த முறையில் பிரயோகிக்கக் கூடிய ஆட்பலத்தினையே இங்கு நாம் உச்சப்பயன்பாட்டுப்படை மட்டம் என்கிறோம். இப்படை மட்டத்தின் உச்சப் பயன்பாட்டிற்கு மேற்குறித்த காணிகள் அவசியமாயினும் அதை நீண்ட காலத்திற் பேணுவதானால், வருடா வருடம் இப்படை மட்டத்தில் ஏற்படக்கூடிய ஆட்பல வீழ்ச்சியை ஈடு செய்யக்கூடிய குறைந்தபட்ச ஆனால் நீண்ட காலப் போர்ப் பங்கேற்பு விகிதம் ஓர் இயக்கத்தினை ஆதரிக்கும் மக்கள் மத்தியில் இன்றியமையாததாகும். அவ்வியக்கம் தன் அடிப்படைக் குறிக்கோளினை அடையும் வரையில் அது இயங்கும் சமூகத்தின் மத்தியில் போர்ப் பங்கேற்பு விகிதமானது அதன் உச்சப் பயன்பாட்டுப்படை மட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சிகளைக் காலத்திற்குக் காலம் இட்டு நிரப்பக் கூடியதாக இருக்க வேண்டும்.


இவ்விடத்தில் 1995இற்கும் பின்னர் புலிகள் தமது உச்சப் பயன்பாட்டுப் படை மட்டத்தின் மூலம் இலங்கை அரசின் படை வளங்கள் மீது ஏற்படுத்திய அழிவின் அளவை கணக்கிற் கொள்ள வேண்டும்.

1995 இற்குப் பின் புலகளின் படை மட்டத்தில் தெரியக்கூடிய அளவிற்கு குறிப்பிடும்படியான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இது வட கிழக்குக்குத் தமிழர் மத்தியில் காணப்படும் 1.1 போர்ப்பங்கேபற்பு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆயினும் இக்கால கட்டத்தில் புலிகள் அரச படைவளங்கள் மீது ஏற்படுத்திய அழிவு கண்சமாக அதிகரித்துள்ளது. உதாரணமாக 1996 ஜூலைக்கும் 1997 மார்ச்சிற்கும் இடைப்பட்ட எட்டு மாதகாலத்தில் புலிகள் 2600க்கு மேற்பட்ட படையினரை கொன்றுள்ளனர். அத்துடன் பல சண்டைப் படகுகள், விமானங்கள் தாங்கிகள், பீரங்கிகள் என்பனவற்றை அழித்துள்ளனர். இவற்றின் பெறுமதி பல நூறு கோடிகளாகும்.

ஆனால் இலங்கைத் தமிழர் மத்தியில் போர்ப்பங்கேற்பு விகிதம் 2.8 ஆக உச்சநிலையில் இருந்த காலகட்டத்தில் (84-85) தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஐம்பதிற்கும் குறைவான படையினரையும், பொலிஸாரையுமே கொள்ள் கூடியதாக இருந்தது.

அரசின் படை வளங்களுக்கு அக்காலகட்டத்தில் 10-15 இலட்சத்திற்கு மேல் அழிவு ஏற்படவில்லை. இத்தனைக்கும் 1984-85இல் இலங்கைப் படைகள் அவற்றின் தற்போதைய அளவில் 12 சதவீதமாகவே இருந்தன. அவை நவீன பயிற்சி பெற்றிருக்கவில்லை. இந்தியாவின் ஆதரவு இருக்கவில்லை. இன்றிருக்கும் போர்த்தளபாடங்களிற் பெரும்பாலானவை அன்று இலங்கைப் படைகளிடம் இருக்கவில்லை.

பின்னோக்கிப் பார்க்கையில் புலிகள் பலம் பொருந்திய ஒரு இராணுவ அமைப்பாக வளர்ச்சியடைந்தமைக்கு அவர்களுடைய



ஆட்சேர்ப்புக் கொள்கையில் காணப்பட்ட உச்சப்பயன்பாட்டுப்படை மட்டம் ஒரு முக்கிய காரணயாகத் தென்படுகிறது.

தமிழீழப் பிரிவினை இயக்கத்திற்கான ஆட்சேர்ப்பு உச்சநிலையில் இருந்தபோது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமே (PLOTE) மிகப் பிரம்மாண்டமானதாகக் காணப்பட்டது. 1985இல் இருபத்திரண்டாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்த இவ்வியக்கம் 1986-87இல் திடீரென்று உடைந்து சிதறி சுக்குநூறாகப் போனது. இவ்வியக்கம் அக்காலத்தில் கொண்டிருந்த நிர்வாகத்திறன் வழங்கற்திறன், அரசியற் கட்டுக்கோப்பு போன்றவை உள்வாங்கப்பட்ட உறுப்பினர் தொகைக்கு ஈடுகொடுக்க முடியாதவையாகக் காணப்பட்டமையே இச்சிதறலுக்கு அடிப்படைக் காரணம் எனலாம். டெலோவினுடைய வீழ்ச்சிக்கும் இதுவே காரணி எனக் கருத இடமுண்டு. 1995இற்கு பின்னர் புலிகளின் உச்சப்பயன்பாட்டுப் படைமட்டத்தின் அழிக்கும் சக்தி வெகுவாக உயர்ந்துள்ளது. இது படை மட்டம் உயரரத நிலையில் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். ஒரு படையின் போரிடுதிறனை அதிகரித்தல் என்பது வழமையாக அதன் ஆட்பலத்தை அதிகரிப்பதோடு சம்பந்தப்பட்ட விடயமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் முல்லைத்தீவு படைத்தளம் நிர்மூலமாக்கப்பட்டமை புலிகள் தமது ஆட்பலத்தை அதிகரிக்காத நிலையில் தமது தாக்குதற் திறனை கூட்டியுள்ளனர் என்பதனையே காட்டுகின்றது. இத்துடன் தமிழீழப் போராட்டத்துக்கான ஆட்சேர்ப்பு உச்சநிலையில் இருந்த காலத்தில் இயக்கங்களிடம் இருந்த மொத்த ஆயுதங்கள் இருநூறுக்கும் குறைவான ஏ.கே. அல்லது எஸ்.எல்.ஆர் ரக ரைபிள்களே. ஒரு சில எல்.எம்.ஜி.களும் இருந்தன. கனரக ஆயுதங்கள் எவையுமே இருக்கவில்லை. அதிலும் இந்திய உளவுத்துறையான 'றோ" தமிழீழ இயக்கங்களுக்கு வழங்கிய பல ஆயுதங்கள் குறைபாடுகள் கொண்டவையாகக் காணப்பட்டன. சமூகத்தின் இவற்றின் அடிப்படையில் நாம் ஒரு சமூகத்தின் போர்ப்பங்கேற்பு விகிதத்திற்கும், அச்சமூகத்திலிருந்து உருவாகும் ஓர் இயக்கத்தின் போரிடு திறனுக்கும் உள்ள தொடர்பை ஆராயும் போது கீழ்க்காணும் முடிபுகளை நாம் பெறலாம்.

அ) ஒரு இராணுவ அமைப்பின் போரிடுதிறனானது அதிகபட்ச ஆட்பலத்தில் தங்கியிருக்கும் சந்தர்ப்பத்திலேயே ஆட்சேர்ப்பில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியானது அவ்வமைப்பின் போரிடுதிறனைப் பாதிக்கும்.

ஆ) தமிழர் மத்தியிலான போர்ப்பங்கேற்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பல ஆட்சேர்ப்பு மையங்கள் மூடுண்டு போனமை ஒரு காரணமாகும். இது இயக்க மோதல்களால் நேர்ந்த ஒன்று. ஆனால் இவ்விடங்களில் இன்று வாழும் மக்களுக்கும் அரசிற்குமிடையிலான முரண்பாடுகள் அதிகரிக்கையில் இவை மீண்டும் புலிகளுக்கு ஆள்வழங்கும் இடங்களாக மாறிட இடமுண்டு. முன்னர் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். கோட்டைகளாக இருந்த பல இடங்கள் இன்று புலிக் கோட்டைகளாக மாறியுள்ளமை கண்கூடு. ●


# வீ.ரி: மலையகத்துக்கோர் பேரிழப்பு!

மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவரும் மலைய சமூக போராளியுமான திரு.வீ.ரி.தர்மலிங்கம் அவர்களின் திடீர் மறைவு மலையகமெங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது.

தோட்ட தொழிலாளர்களின் பின்னணியில் பிறந்து வளர்ந்த திரு.தர்மலிங்கம் அவர்கள் தனது இளம் பிராயம் முதல் மலையக மக்களின் பிரச்சினைகளோடு தீவிரமான ஈடுபாடுகளை கொண்டிருந்தவர். தனது கல்லூரி படிப்பை முடித்து வர்த்தக நிறுவனமொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது மலையக இளைஞர் முன்னணியில் அங்கத்தவராகவும் அதன் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். 1960களின் பிற்பகுதியில் கவரக்கூடிய ஒரு கவர்ச்சிகர அமைப்பாக மலையக இளைஞர் முன்னணி விளங்கியது, அக்கால கட்டத்தில் மலையக இளைஞர்களை மலையக இளைஞர் முன்னணியின் கீழ் அணி திரட்டுவதிலும் அம்முன்னணியை மலையகத்தின் பல பாகங்களுக்கு வியாபிப்பதிலும் முன்னின்று செயற்பட்டவர் திரு.தர்மலிங்கம் ஆவர். நாளடைவில் மலையக இளைஞர் முன்னணிக்கு தலைமை வகித்த திரு.இரா.சிவலிங்கம் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியில் பதவிகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டு இந்த இளைஞர் உணர்வுகளை தனது வயிற்றுப்பிழைப்புக்காக தாரை வார்த்துக் கொடுத்து நிலைமாறிய பொழுது பல இளைஞர் விரக்தி நிலைக்குள்ளாகினாலும் திரு.தர்மலிங்கம் அவர்கள் தனது சமூக பணியிலிருந்து விலகாமல் செயற்பட்டு வந்தார்.

ஆசிரியராகவும், அதிபராகவும் பதவிகள் பெற்று உயர்ச்சியை கண்டாலும் மலையக மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை தொடர்ந்தும் தன்னகத்தே முன்னெடுத்து சென்ற பெருமை இவரைச் சாரும். மலையகத்தின் பொது எதிரிக்கு எதிராக செயற்படுவதை விட மலையக சமூகத்துக்குள்ளிருக்கின்ற சமூகத்துரோக கும்பல்களுக்கெதிராக துணிவுடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டவர் இவர்.

அரசாங்கம் வழங்கிய பதவிகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்தி மலையக மக்களை அடக்கி ஒடுக்கி ஆள முற்பட்ட மலையக தலைமைக்கெதிராக அரசியல் ரீதியாக செயற்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்த திரு.தர்மலிங்கம் அவர்கள் மலையக மக்கள் முன்னணியை அரசியற் கட்சியாக உருவாக்கும் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார்.



ஐ.தே.கட்சி ஆட்சியின் இனவாத அடக்கு முறையாளர்கள் இவரை சிறையில் அடைத்து வைத்தனர். இச்சம்பவமானது இவரின் சமூகப் பணியை திட்டமிடவும்போராட்டத் தன்மையை கூர்மைப்படுத்தவும் இவருக்கு உதவியது என்பதை விடுதலையடைந்து வந்ததன் பின் மிக தெளிவாக நிரூபித்து காட்டினார்.

அரையடிமை வாழ்வியலைக் கொண்ட மலையக தொழிலாளர்களின் சமூக நடையுடை பாணியின் பிரதிபிம்பமாக திகழ்ந்த திரு.தர்மலிங்கம் அவர்கள் தானொரு மலையகத்தவன் என்பதை எல்லையற்ற பெருமையுடன் பிரகடனப் படுத்தி வந்தார். அடிமைத்துவத்திற்கெதிராக தமது சுதந்திரத்தை நிலை நாட்டிக் கொள்ள மலையகம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற இக்கால கட்டத்தில் அம்முயற்சியின் ஒரு நேர்மையான போராளியாக திகழ்ந்த திரு.தர்மலிங்கம் அவர்களின் திடீர் மறைவு மலையகத்திற்கு ஒரு மாபெரும் பேரிழப்பாகும்.

திரு.தர்மலிங்கம் அவர்கள் சரிநிகர் தொடங்கப்பட்ட காலமுதல் அதன் தொடர்ச்சியான வாசகராக இருந்து வந்ததுடன், அவர் சிறையில்இருந்த காலத்தில் எழுதிய ''மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்'' என்ற தலைப்பிலான கட்டுரைத் தொடர் ஒன்றையும் தொடர்ந்து எழுதிவந்தார்.

அன்னாரின் மறைவுக்காக சிரம் தாழ்த்தி அஞ்சலியை செலுத்தும் சரிநிகர் ஆசிரியர் குழு அதன் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறிந்த பனையிலிருந்து...



# "நாங்கள் செத்துக்கொண்டிருக்கிறோம்! உனக்கு பென்சனோ?"

சகஜநிலைக்குத் திரும்புவது பற்றி இந்திய அதிகாரிகள் வெளிப்படையாகத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தபோதிலும்பொதுத்துறை பணியாளர்களும், ஆஸ்பத்திரி ஊழியர்களும், பல்கலைக்கழக ஊழியர்களும் வேலைக்குப் போகும் வழியில் மானிப்பாய், சண்டிலிப்பாய், தாவடி, உடுவில் மற்றும் மருதானமடம் ஆகிய இடங்களில்இந்தியப்படையினரால் அடித்து உதைக்கப்பட்டனர்.

டிசெம்பர் 7ம்திகதி இரவு சுமார் முப்பது விடுதலைப்புலிகள் கோண்டாவில் உள்ள ஒரு சிறு கோயிலுக்கு வந்தார்கள். அந்தப்பகுதியில் இருந்த மக்கள் அவர்களது வருகையினால் தங்கள் உயிருக்கு ஆபத்து விளையக்கூடும் என்று நினைத்து அவர்களை அந்த இடத்தை விட்டுச் சென்றுவிடுமாறு வேண்டிக்கொண்டனர். விடுதலைப் புலிகள் அந்த இடத்தை விட்டு நகர மறுத்தனர். அப்படியானால் தாங்கள் இதைப் பற்றி இந்தியப் படையினரிடம் சொல்லி விடப்போவதாக மக்கள் கூறினார்கள். ''நீங்கள்மெனக்கெட வேண்டியதில்லை. அதை நாங்களே செய்து கொள்வோம்'' என்று விடுதலைப்புலிகள் கூறியவாறு வானத்தை நோக்கிச் சுட்டனர். சனங்கள் அவசர அவசரமாக அந்தப் பகுதியை விட்டு வெளியேறிகோவிலுக்குள் புகுந்து கொண்டனர். மறு நாள் காலையில் புதிதாக வந்திறங்கியபடைகள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டன. அங்கே பின்தங்கி நின்று கொண்டிருந்த சில விடுதலைப்புலிகள்படைவீரர்களை நோக்கிச் சுட்டு விட்டு ஓடிவிட்டனர். இதில் இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். சகஜ நிலைக்குத் திரும்பு முகமாக இந்திய அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையையொட்டி அன்று காலை இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் சிலர் வேலைக்குப் போவதற்காக ஒரு பஸ்ஸில் கோண்டாவில் டிப்போவை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். கோண்டாவில் சந்தியில் இந்தியப்படையினரால் பஸ் தடுத்து நிறுத்தப்பட்டு, பஸ் சாரதியும் கண்டக்டரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். காயமுற்ற நபர் வலியால் முனகிய ஒவ்வொரு தடவையும், சினமுற்றிருந்த இராணுவ வீரர்கள் பஸ்ஸை தாக்கி ஜன்னல்களை உடைத்து நொறுக்கினர். பஸ் சாரதியும் கண்டக்டரும் தங்களுடைய உயிர் அன்றோடு முடிந்தது என்று தான் நினைத்துக் கொண்டனர். அப்பொழுது அதிர்ஷ்டவசமாக அங்கு வந்து சேர்ந்த அதிகாரி ஒருவர் தாக்குதலை நிறுத்துமாறு பணித்தார். இந்த கொடுஞ்சோதனையான நேரத்தில் மிகுதி இ.போ.ச. ஊழியர்கள்பஸ்ஸிற்குள் படுத்தவாறு கிடந்து கடவுளைப் பிரார்த்தித்த வண்ணம் இருந்தனர். அன்றிரவு கோண்டாவிலில் இருந்த தங்கள் வீட்டை யாரும் கொள்ளையடித்துவிடாமல் பார்த்துக்கொள்ளுமுகமாக யாழ் பல்கலைக்கழக உபவேந்தரின் அலுவலக உதவியாளராக இருந்த துரைசிங்கம் அவர்களின் சகோதரர் பாலசிங்கமும் அவரது மாமனார் கோபாலசிங்கமும் வீட்டிலேயே நிற்க, மற்றவர்கள்கோயிலில்போய்இருந்தார்கள். வீடுகளுக்குள் நுழைந்த இராணுவத்தினர் வீட்டிலிருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்தனர். வெளியில் வந்த பாலசிங்கம் அவர்கள் கத்தியால் குத்திக்கொல்லப்பட்டார். கோபாலசிங்கம் அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பாலசிங்கம் அவர்கள் ஒரு வருஷத்திற்கு முன்புதான் திருமணம் முடித்திருந்தார். கோயிலின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் வெளியே அழைக்கப்பட்டுக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர். அன்றிரவு மட்டும்இப்படி ஆறு பொதுமக்கள் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர். அன்றைய தினம் (டிச.8ம்திகதி) காலை 11மணிக்கு இணுவிலில் இருந்து கோப்பாய் வரையிலான பரந்த பகுதியில் திடீரென்று ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வேலைக்குச் சென்றிருந்த பலரும் டவுனுக்கு அத்தியாவசியப்பொருட்களை வாங்கச் சென்றிருந்தவர்களும் இடையில் என்ன செய்வதென்றறியாது ஸ்தம்பித்துப் போயினர். வீடு திரும்பாவிட்டால் வீட்டில் எல்லோரும் தங்களுக்கு என்ன ஆயிற்றோ என்று நித்திரையின்றித் தவித்துக் கொண்டிருப்பார்கள் என்று பலர் தங்களைப் பணயம் வைத்துக் கொண்டு பிரதான வீதிகளைத் தவிர்த்துக்கொண்டு கிராமத்து ஒழுங்கைகள் வழியே சுற்றிச்சுற்றி வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். ஏழாலையிலுள்ள தனது வீட்டுக்குப் போய்ச்சேர பல்கலைக்கழக நூலகரான முருகவேள் அவர்கள் பட்டபாடு ஒரு சரியான உதாரணம். ''நாங்கள் ராஜபாதை வழியாக மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். ஆனால் தெற்கு நோக்கி செல்லும் சிலர் எம்மை அவசரமாகக் கடந்து சென்று கொண்டிருந்தனர். என்ன விஷயம் என்று கேட்டறிய அவர்களை நிறுத்தினோம். அவர்களோ நிறுத்தாமல் எம்மைக் கடந்து சென்றனர். திடீரென்று துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் உஸ்ஸென்று எங்களைக் கடந்து பறந்து செல்ல ஆரம்பித்தன. நாங்கள் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு கிழக்கு நோக்கிச் செலுத்தினோம். பருத்தித்துறை வீதியைக் கடந்து, இருபாலையிலும் கோப்பாயிலும் நின்றிருந்த இராணுவ சென்றிகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக வடக்கு நோக்கிய ஒழுங்கைகளுக்கூடாக சென்றோம். கோப்பாய் சென்றி நின்றிருந்த இடத்திற்கு கிழக்கே 300யார் தள்ளி ஒரு முனையில் கோப்பாய் - கைதடி வீதியைக் கடந்து இன்னொரு ஒழுங்கைக்குள் புகுந்தோம். மேற்கொண்டு பருத்தித்துறை வீதியைக் கடந்து மேற்கு வழியாக ஒரு ஒழுங்கைக்கூடாக புத்தூர் நோக்கிச் சென்றோம். பிறகு புத்தூர் - சுன்னாகம் வீதி வழியாக வந்து ஏழாலை போய்ச்சேர்ந்தோம்'' இந்த மாதிரியான ''சகஜமான'' சூழ்நிலையில் தான் ஆயிரக்கணக்கானோர் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தனர்!

நவம்பர் 27ம்திகதியன்று கணநாதன் அவர்கள் சண்டிலிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கட்டுடை மதகடியில் இருந்த சென்றியால் தடுத்து நிறுத்தப்பட்டார். அங்கே இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்த வேறு ஒன்பது பேருடன் சேர்ந்து கொள்ளுமாறு இவரும் பணிக்கப்பட்டார். அவர்களில் மூன்று பெண்களும் இந்திய அமைதிப்படை வழி கோலியிருந்த 'சகஜ நிலைமை'யையொட்டி யாழ்ப்பாணம் போய் பென்ஷன் பணத்தை எடுத்து வரப்போயிருந்த ஒரு பென்ஷன்காரரும் இருந்தனர். அந்த வீரர்களிடம் தன் நிலை எடுத்துச் சொல்லிக் கெஞ்சினார். ''நாங்கள் செத்துக்கொண்டிருக்கிறோம். இந்த அழகில் உனக்கு பென்ஷன் வேண்டிக் கிடக்கிறது'' என்று அவர்கள் கூறினார்கள். முப்பது படைவீரர்களைக் கொண்ட தங்கள் கோஷ்டி ஒன்று விடுதலைப் புலிகளைத் தேடச் சென்றிருப்பதாகவும் அவர்களில் ஒருவருக்கு ஆபத்து என்றாலும் அங்கு நிற்கும் அனைவரும் கொல்லப்படுவார்கள் என்றும் படைவீரர்கள் தெரிவித்துள்ளனர். தண்ணீருக்கு மேலேயும் அவர்களைச் சுற்றிலும் அவ்வப்பொழுது துப்பாக்கிச் சூடு நடந்த வண்ணம் இருந்தது. சண்டிலிப்பாய் சென்றியில் நின்ற ஒரு சீக்கியப் படைவீரரிடம் ஏற்கெனவே பரிச்சயம் கொண்டிருந்த கணநாதன், ''நீங்கள் என் நண்பரல்லவா?'' என்று சொல்லிப் பார்த்தார். ''இன்று நீங்கள் என் நண்பரல்ல'' என்று பதில் வந்தது. இந்திய அமைதிப் படையிலிருந்து யாரோ ஒருவர் என்ன நடக்கிறது என்று வயர்லஸ் மூலம் விசாரித்திருக்கிறார். போர் வீரர்களில் ஒருவர் ''அரிசிக்காக இங்கு ஒரு கியூ நின்று கொண்டிருக்கிறது'' என்று பதிலளித்தார். அந்தச் சிறு நகைச்சுவையை அனைவரும் ரசித்தததாகத் தோன்றியது. நாற்பத்தைந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அந்த நேரத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் சகல தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருந்தனர். மறுநாள் விடுதலைப்புலிகளின் ஒரு குழுவைச் சுற்றி வளைத்தபோது இந்திய அமைதிப்படையைச்சேர்ந்த பதினொரு வீரர்கள் கொல்லப்பட்டனர்.

வரும்...

# குடிமகனாகும் கவிஞனும் தானே சபிக்கும் வாசகனும்

நான் அசல் கவிஞன்...; நீ ஒரு வாசகன்...;
ஏனைய எல்லோரும் வெறும் மனிதர்கள்...
நான் கவிஞனெனக் கொள்வதும்
நீ வாசகனாகிக் கொள்வதும்
ஒரு அடையாளம் தான்...
அடையாளமே அற்றுப் போய்விடும்
எனும் பயத்தின் அடையாளம்...
கவிஞர்கள்-
எப்போதும் வித்தியாசமாகிக் கொள்வதும்
இந்த -
அடையாளம் தேடும் போராட்டத்தின்
அடையாளமே...

கவிஞர்களின் பிரச்சினைகள் அகங்காரம் முளைத்தவை...
நான் ஒரு கவிஞன் மட்டுமல்ல
அதனால்தான் எனது கவிதைகளுக்கு
அகங்காரங்கள் ஏராளம்..
இவற்றையெல்லாம் புரிந்து விட்டால்
எனதும் உனதும் பாதைகள்
வேறாகிக்கொண்டிராது...

என் தகிப்பு நான் எழுதுகிறேன்
உன் அரிப்பு நீ வாசிக்கிறாய்....
யாரும் யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை
கவிஞர்களின் விருப்பமெல்லாம் இதுதான் -
உலகில் -
எல்லாமே இப்படித்தான் இருக்க வேண்டும்...
நிர்ப்பந்தமே இல்லாமல்...

அந்த வகையில் -
நானும் நீயும் ஒன்றேதான்....
ஒருத்தரையொருத்தர் பார்த்ததேயில்லை...
எனினும் -
10 நிமிடங்கள் எனது கவிதைகள் பேசினால்
பூர்வமனைத்தும் தெரிந்துவிடும் உறவு எமக்குள்....

நான் பேசி நீர் கேட்டாலும்
நீ எழுதி நான் படித்தாலும்
வித்தியாசம் எதுமில்லை....
தன் மகரந்தச் சேர்க்கை போல...
தனக்குத் தானே பேசிக்கொள்வதைப்போல...

தனக்குத்தானே பேசிக்கொள்வது
கலைஞர்களின் அறிகுறி...
அதுதான் -
மனோவியாதியின் ஆரம்ப அறிகுறியும் கூட...
கோடானு கோடிப்பேர் பிறரோடு பேசுகையில்
நான் மட்டும் என் தனக்குள்ளே பேசவேண்டும்...?

அப்படியெனில் -
என் பெற்றோர்களுக்குப்
பிள்ளை என்பதற்கு அடுத்தபடியாக
உண்மையில் நான் யார்...?
ஓர் கவிஞனா...?
கவிஞனென்றால் அதனை என்னைத்தவிர
வேறு யாரும் ஜீரணிப்பதற்கு இல்லை...!
ஸ்ரீலங்காவின் ஊழியனா...?
அல்லதோர் குடிமகனா...?
ஊழியன் என்றால் குடிமகன் தானே...
ஊழியன் என்பது - 1.7 மில்லியன் பேருக்கும் பொருத்தமாகிறதே...
குடிமகன் தான் ரொம்பப் பொருத்தம்
ஆமாம்
மேற்கொண்டு கேள்விகள் எதுவும் கேட்காமல்
ஒப்புக்கொள்கின்ற குடிமகனே தான் நான்...!

நற்பிட்டிமுனை பளீல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டக்களப்பு: வல்லுறவுக்கு இரையாகும் பெண்கள்!

மதன்

கடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் 17 வருட காலத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளும், பாலியல் வன்முறைகளையும் புதைகுழிதோண்டி அம்பலப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் இன்று வரைக்கும் ஐ.தே.க. அரசினால் நடாத்தப்பட்ட கொடுமைகளைவிட மிகவும் கொடூரமான முறையிலும், கச்சிதமான முறையிலும் மர்மக் கொலைகளிலும், பாலியல் வன்முறைகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் நடவடிக்கைகள் யாவும் கண்ணை மூடிப்பால்குடிக்கும் பூனையின் நிலையைப் போலிருந்தாலும் ஓரளவுக்காயினும் சம்பவங்கள் வெளிவரத்தான் செய்கின்றது.

இங்குள்ள நிலைமைகளைப் பொறுத்தவரையில் மூன்றாவது கட்டப்போர் ஆரம்பிக்கப்பட்டது முதல் கிழக்கில் இவ்வாறான வன்முறைகள் தளைத்துள்ளதும், இதனைப் புடம்போட்டுக்காட்ட முடியாத நிலையுமே வேரூன்றி உள்ளது. இன்று வரைக்கும் கிழக்கில் பதினைந்துக்கும் மேற்பட்ட பாலியல் வன்முறைகள் இராணுவத்தினரால் புரியப்பட்டிருக்கின்றது. ஆனால் அனைத்தும் இவர்களால் கொடுக்கப்படுகின்ற அச்சுறுத்தலினால் மூடிமறைக்கப்படுகின்றன. பாலியல் வன்முறைக்குட்பட்டவர்கள் அல்லது சம்பவத்தைப்பார்த்தவர்கள் கூட வெளியில் சொல்ல முடியாத நிலையே இருக்கின்றது. இன்றைய நிலையில் இராணுவத்தினால் உயிருக்கு கொடுக்கும் அச்சுறுத்தலினால் உயிரை மட்டுமாவது பாது காத்துக்கொண்டால் போதும் என்ற நிலையிலே பாதிக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இச்செயல் மூடிமறைக்கப்படுவதனால் சமூகத்தில் தங்களைப்போல் இன்னும் எத்தனை பெண்கள் இந்த நிலைக்கு ஆளாகப்போகின்றார்கள் என்பதை உணராதவர்களாகவே இருக்கின்றார்கள். இந்தச் சம்பவம் அம்பலமாக்குகின்ற வேளையில் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாக்கி விடுவோர் என்ற நிலையிலும் இவ்வாறான சம்பவங்கள் மூடிமறைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

இதற்கு ஒரு சம்பவம் உதாரணமாகும். மைலம்பாவெளி தண்டவாளப் பகுதியில் உள்ள வீட்டுத் திட்டப் பகுதியில் புஷ்பராஜா வனிதா என்ற பெண் மைலம்பாவெளி இராணுவத்தினரால் கடந்த வருடம் கடைசிப்பகுதியில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார். சம்பவ தினம்இரவு 11 மணியளவில் வீட்டினுள் புகுந்த இராணுவத்தினர் புஷ்பராஜாவையும், மனைவியையும் எழுப்பி ஆயுத முனையில் பக்கத்துக் குடிசைக்கு கொண்டு சென்று படுக்குமாறு பணித்துவிட்டு ஒருவர் காவல் நின்றுள்ளார். வனிதாவை ஏனையவர்கள் அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கு பலாத்காரமாக இழுத்துச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். இவள் உடல் சோர்ந்து மயங்கிய நிலையில் விட்டுச் சென்றுள்ளனர். ஆனால் இச்சம்பவத்தை இன்றுவரைக்கும் இந்த சமூகத்திற்கும், இராணுவத்திற்கும் பயந்து புஷ்பராஜாவோ அல்லது வனிதாவோ வெளியில் சொல்ல விரும்பவில்லை.

இது போன்ற இன்னுமொரு சம்பவம் தன்னாமுனை என்னும் இடத்தில் 17.3.97 அன்று நடைபெற்றது. வேலன் ராசம்மா (39), வேலன் வசந்தா (28) ஆகிய சகோதரிகள் இருவரும் 17ம்திகதி இரவு 11.30மணியளவில் மைலம்பாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த ஐந்து இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த அன்று இரவு இராணுவத்தினர் இவர்களுடைய வீட்டுக்கு வந்து கதவைத்திறக்குமாறு கொச்சைத் தமிழில் கூறிய பொழுது தாங்கள் கதவைத் திறக்கவில்லை. அவர்களாகவேதான் கதவைத் தள்ளி உடைத்து இரு பெண்களுடைய தாயை, ஒரு இராணுவத்தினர் ஆயுதத்தைக்காட்டி வேறு இடத்திற்கு கூட்டிச்சென்று காவல் இருந்ததாகவும், ஏனைய நான்குபேரும் தங்களைப் பலாத்காரமாக காட்டுப்பகுதிக்கு கொண்டுச்சென்று மாறி மாறிப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

வேலன் வசந்தா இச்சம்பவத்தால் மனமுடைந்து நஞ்சு அருந்தி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவம் பொலிசாரினால் கையாளப்பட்டு சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட போது சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்களில் ஒருவரை ராசம்மா அடையாளம் காட்டியுள்ளார். இவைகளெல்லாம் முடிந்தபின் இந்தப்பெண்கள் இராணுவத்தினரால் பயமுறுத்தப்பட்டிருக்கின்றனர். இதை யார் பொலிசுக்குச் சொன்னது என்றெல்லாம் மிரட்டியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் வெளிவந்த பின்னரும் மிரட்டப்படும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

கடந்த வருடம்மார்ச்மாதம்கல்குடா பட்டியடியைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை சொர்ணம்மா (35) என்ற பெண், ஏழு இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர்கள் சம்பவ தினம் சொர்ணம்மாவின் கடைக்குச் சென்று மதுபோதையில்பீடி கேட்டுள்ளனர். இவர் கொடுக்க மறுத்ததால் இவர்கள் ஏழு பேரும் மாறி மாறிப் பலாத்காரம் புரிந்துள்ளனர்.

வாழைச்சேனை, தியாவெட்டுவானைச் சேர்ந்த சதாசிவம் தவமணி, பொன்னம்பலம் ஜெயந்திமாலா ஆகிய இருபெண்களும் வாழைச்சேனை பொலிசாரினால், பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த 8.1.97 அதிகாலை 2.30 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த 4 பொலிசார் வீட்டினுள் வெளிச்சம் இருப்பதைக் கண்டு கதவைத்தட்டி எங்களைப் புலிகள் துரத்துகிறார்கள். எங்களில் ஒருவரைச் சுட்டுவிட்டார்கள். அடைக்கலம் தாருங்கள் என்று கூறி வீட்டுக்குள் வந்தவர்கள் உடனே விளக்கை அணைத்துவிட்டார்கள். இந்த நாலு பேரில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

இது போன்று ஒரு பிள்ளைக்குத் தாயான ஏறாவூரைச்சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண்ணும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

மண்டூரைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளுக்கு தாயான ஒரு குடும்பப் பெண் 31.12.1996 அன்று மண்டூர் விசேட அதிரடிப்படையினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த அன்று அந்தப் பெண் வயலுக்குச்சென்ற தனது கணவனுக்கு மதிய உணவு எடுத்துச் சென்ற போது இடையில் வழிமறித்த அதிரடிப்படையினர் காட்டுக்குள் இழுத்துச் சென்று பலாத்காரம் புரிந்து மயங்கிய நிலையில் விட்டுச்சென்றுள்ளனர். இறுதியில்




இந்தப்பெண்ணின் கணவனும் இவளுடன் சேர்ந்து வாழ மறுத்து விட்டான்.

இவைகளெல்லாவற்றையும் விட கடந்த 17.05.1997அன்று நடந்த சம்பவமே மிக மிகக் கொடூரமானது. அன்பையும் கருணையையும் போதித்த புத்த பெருமான் பரி நிர்வாணமடைந்த வெசாக் வாரத்தில் அம்பாறை 11ம் கொலணியைச்சேர்ந்த கோணேஸ்வரி செல்வகுமார் (35) என்ற பெண் நிர்வாணமாக்கப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு அப்பெண்ணின் பிறப்புறுப்பில் கிரனைட்டை வெடிக்கவைத்துக் குரூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

சம்பவம் நடந்த அன்று இரவு 10மணியளவில் எட்டுத்தொடக்கம் பத்து பேர் வரையான பொலிசார் இவர்களின் வீட்டுக் கதவைத்தள்ளி விட்டு குடிசைக்குள் வந்தனர். வீட்டுக்குள் புகுந்தவர்கள் இறந்த பெண்ணின் கணவரான செல்வகுமாரையும், மூன்று பிள்ளைகளையும் கைகளைக் கட்டி ஒரு மூலையில் இருத்தி அவர்களை நோக்கித் துப்பாக்கியை நீட்டியபடி ஒருவன் காவல் நின்றிருக்கிறான்.

கோணேஸ்வரி தனது மூன்றாவது கைக்குழந்தையுடன் ஏதோ விபரீதம் நடக்கப்போகின்றது என்பதை உணர்ந்து கதறி அழுதாள். அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி வந்தவன் கைக்குழந்தையைப் பறித்து ஒரு பக்கத்தில் எறிந்து விட்டு, இரண்டு பேர் அவளுடைய கைகளைப் பிடிக்க பாலியல் பலாத்காரம் புரிந்தான்.

இதேபோல் வந்த அனைவரும் தங்கள் காம இச்சையைத் தணித்து விடுகின்ற வேளையில் கோணேஸ்வரி மயங்கிய நிலையில் குறை உயிருடன் இருந்தாள்.

தாயின் அவலத்தைக்கண்டு கதறியழுத மகன், கணவன் செல்வகுமார் ஆகியோர் துப்பாக்கியால் தாக்கப்பட்டு சுயநினைவை இழந்து விட்டனர்.

தங்கள் காம இச்சை
துக்கொண்டவர்கள்
வரியின் பெண் கு
குண்டை வைத்து வெ
சந்தோஷப்பட்டனர்
இந்தச் சத்தத்தில் எ
குமாரையும், மகனை
கப்பட்ட உடலை
வளவினுள் புதைக்
துள்ளனர். இச்சம்ப
மாவது போய்ச்
உன்னையும் உன் பி
குடும்பத்தோடு அழி
என்று கூறிச்சென்று
இந்தச்சம்பவத்தில்
களில் மூன்று பொலி
வர். இவர்கள் என
போக்குவரத்துச் செ
அறிமுகமானவர்கள்
குமார் கூறினார்.
இச்சம்பவத்தை நே
கொண்டிருந்த செ
மகன் மனோ ரீதிய
பட்டுள்ளார்.
ஒட்டுமொத்தமாக
போனால், கிழக்கை
மட்டில் ஆயுதம்
பவர்களே இராஜா
வைத்திருந்தால், ந
செய்யலாம், எப்படி
என்ற நிலையே இங்
எத்தனையோ பெ
புகள் இருந்தும்
நிலையை எடுத்துக்
அமைப்ப...ாவே
கள். இவ்வாறான வ
எதிராக ஆர்ப்பாட்
ப்போ தெரிவிக்
பிரிகேடியரின் அ
காத்து நிற்கின்ற அ
இவர்களும் இருக்கி
உண்மையில் எங்க
பாட்டம் இராணு
எதிரானதே. இத
பிரிகேடியர் தரு
தைக்கூட இவர்கள்
களாகவே இருக்கின்
இந்த நிலையில் பெ
புகள் மட்டும்தான் இ
செய்யவேண்டும்
அரசு சார்பற்ற நி
தமிழ்ப் பாராளும
னர்கள் அனைவரும்
எடுத்து...ய்ய
முக்கிய விடயமாகு

## இவ்வருடத்துக்குள் பதிவுசெய்யப்பட்ட ஆயுதந்தாங்கிய படையினரால் நடாத்தப்பட்ட சில பாலியல் வல்லுறவுச்

| நாள் | பெண்ணின் பெயர் | இடம் | வல்லுறவு புரிந்தவர்/கள் | பெண்ணின் நிலை | வ |
|---|---|---|---|---|---|
| டிசம்பர்.31 (1996) | 30 வயது பெண் (பெயர் தெரியவில்லை) | மண்டூர் | 3 விசேட அதிரடிப்படையினர் | வைத்தியசாலையில் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியுள்ளனர். | மூவரும் காட்ட விசார வருகிற |
| மார்ச் 17 | 1.வேலன் இராசம்மா (39)<br>2. வேலன் கோணேஸ்வரி | மயிலம்பாவெளி | 4 படையினர் | 3 நாட்களுக்குப் பின் வைத்திய பரிசோதனை செய்யப்பட்டதால் டீ.எம்.ஓ பாலியல் வல்லுறவுக் கான ஆதாரமில்லை என அறிக்கை. (6 மணித்தியாலங்க ளுக்குள் பரிசோதனை செய்யப் பட்டிருக்க வேண்டுமாம்) ஒருவர் தற்கொலைக்கு முயற்சி | மே 12 செய்ய போது நடக்க |
| ஜனவரி.9 | 1. சதாசிவம் தவமணி (தாய்)<br>2. பொன்னம்பலம் ஜெயந்தி (மகள்)<br>3.பக்கத்துவீட்டுப்பெண் | தியாவட்டுவான் – வாழைச்சேனை | 3 படையினர் | வைத்தியசாலையில் சிகிச்சைக்குப்பின் வீடு திரும்பியுள்ளனர். | இரு ப ளம் காட வரை விளக் கப்பட் செய்ய |
| மே.17 | முருகேசுப்பிள்ளை கோணேஸ்வரி (35) | மட்டு 102ம் காலணி | 10 பொலிஸார் | பாலியல் வல்லுறவுக்குப் பின் பெண்ணுறுப்பில் கைக் குண்டை வெடிக்கச் செய்து கொல்லப்பட்டுள்ளார். | பரிசோ விடா செய்த |
| மார்ச் நடுப்பகுதி | கல்வியங்காடு ஆடைத் தொழிற்சாலையில் பணி புரியும் பெண் (பெயர் தெரியவரவில்லை) | நாவற்குடா | புளொட் இயக்கத்தைச் சேர்ந்த குயிலன் | கடத்திச் சென்று இரு நாட்கள் மறைத்து வைத்து பாலியல் வல்லுறவு புரியப்பட்டுள்ளார். | பயத்தி கருதி இதுவ வில்லை |

அட்டவணைத் தொகுப்பு:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சைகளைத் தணித்
கள் கோணேஸ்
குறிக்குள் கைக்
வெடிக்க வைத்து
னர்.
எழும்பிய செல்வ
னையும், துண்டாக்
ல பக்கத்து பாழ்
தக்குமாறு பணித்
ம்பவத்தை யாரிட
ய்ச்சொன்னால்,
பிள்ளைகளையும்
அழித்துவிடுவோம்
றுள்ளனர்.
தில் ஈடுபட்டவர்
ாலிசாரும் அடங்கு
னக்கு நாளாந்தம்
செய்யும் பொழுது
ர்கள் என்று செல்வ

நேரில் பார்த்துக்
செல்வகுமாரின்
தியாகப் பாதிக்கப்

ாகப் பார்க்கப்
க்கைப் பொறுத்த
தம் வைத்திருப்
ஜாக்கள். ஆயுதம்
, நாம் எதையும்
படியும் நடக்கலாம்
இங்குள்ளது.
பெண்கள் அமைப்
ம் இவ்வாறான
ந்துக்கூற முடியாத
வே இரு ன்றார்
வன்முறைகளுக்கு
பாட்டமோ, எதிர்
விக்கும் போது
அனுமதிக்காகக்
அமைப்புகளாகவே
க்கின்றனர்.
ங்களுடைய ஆர்ப்
ணுவத்தினருக்கு
இதற்கு அனுமதி
தருவாரா என்ப
கள் உணராதவர்
கின்றார்கள்.
பெண்கள் அமைப்
ன் இந்தச்செயலை
ம் என்பதில்லை.
நிறுவனங்கள்,
ளுமன்ற உறுப்பி
ரும் கூடியுதவனம்
வேண் ஓர்
ாகும்.

வுச் சம்பவங்கள்

விசாரணை

வரும் அடையாளம்
ாட்டப்பட்டுள்ளனர்.
விசாரணை நீடித்து
ருகிறது.

12ம் திகதி விசாரணை
சய்யப்படும் என கூறப்பட்ட
பாதும் அப்படி ஒன்றும்
டக்கவில்லை.

ரு படையினர் அடையா
ம் காட்டப்பட்டு ஜனவரி 27
ரை (18 நாட்கள்)
ளக்கமறியலில் வைக்
ப்பட்டு விடுதலையும்
சய்யப்பட்டு விட்டனர்.

ரிசோதனை கூட செய்ய
ிடாது உடலை தகனம்
சய்தனர் பொலிஸார்.

யத்தினாலும், பாதுகாப்பு
கருதியும் முறைப்பாடு கூட
இதுவரை செய்யப்பட
வில்லை

ப்பு: என்.எஸ்.குமரன்



Constantine

## * கோணேஸ்வரிகள்...........!

*நேற்றைய அவளுடைய சாவு - எனக்கு*
*வேதனையைத் தரவில்லை.*
*மரத்துப்போய்விட்ட உணர்வுகளுள்*
*அதிர்ந்து போதல் எப்படி நிகழும்!?*

*அன்பான என் தமிழச்சிகளே,*
*இத்தீவின் சமாதானத்திற்காய்*
*நீங்கள் என்ன செய்தீர்கள்!?*
*ஆகவே; வாருங்கள்*
*உடைகளைக் கழற்றி*
*உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்*
*என் அம்மாவே உன்னையும் தான்.*

*சமாதானத்திற்காய் போரிடும்*
*புத்தரின் வழிவந்தவர்களுக்காய்*
*உங்கள் யோனிகளை திறவுங்கள்.*
*பாவம்,*
*அவர்களின் வக்கிரங்களை*
*எங்கு கொட்டுதல் இயலும்.*

*வீரர்களே! வாருங்கள்*
*உங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்.*
*என் பின்னால்*
*எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்.*
*தீர்ந்ததா எல்லாம்*
*அவ்வளவோடு நின்று விடாதீர்!*
*எங்கள் யோனிகளின் ஊடே*
*நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.*
*ஆகவே;*
*வெடிவைத்தே சிதறடியுங்கள்*
*ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி*
*புதையுங்கள்*
*இனிமேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி.*

*சிங்கள சகோதரிகளே!*
*உங்கள் யோனிகளுக்கு*
*இப்போது வேலையில்லை.*

-கலா

* 17.05.1997 அன்று பத்து பொலிசாரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு, பெண்குறியில் கிரனைட் வைத்து கொல்லப்பட்ட மட்டக்களப்பு 11ம் கொலனியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய்.



# வவுனியா: கொத்தடிமைச் சீவியம்!

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற ஆயிரக் கணக்கான மக்கள் சொல்லொண்ணாத்துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வவுனியாவிலுள்ள 14 நலன்புரி நிலையங்களிலும் சுமார் 15 ஆயிரம் பேர் கடந்த பத்து மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த பத்துமாதங்களுக்கு முன்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி பெருநிலப்பரப்பில் யாழ் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்து வசித்த மக்கள், கிளிநொச்சியில் இடம்பெற்ற 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அங்கிருந்து இடம் பெயர்ந்து, இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுனியாவை வந்தடைந்தனர். இடம்பெயர்ந்த மக்களின் வருகையைத் தொடர்ந்து வவுனியாவிலுள்ள பாடசாலைகள் யாவும் முகாம்களாக மாற்றப்பட்டன. இந்தப் பாடசாலைகளில் (நலன்புரி நிலையங்களில்) வயது வித்தியாசமின்றி வயோதிபர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், குழந்தைகள் என பலதரப்பட்டவர்களும் தடுத்து வைக்கப்பட்டனர். வவுனியாவிலும் தென்பகுதியிலும் தமது பிள்ளைகளுடன் வசிக்க வந்த பெற்றோர்கள், உறவினர்களுடன் வசிக்க வந்த உறவினர்கள், அரசாங்க அலுவலர்கள் என பல தரப்பட்டவர்களும் ஆடு, மாடுகளைப்போல் முகாம்களில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதற்காக நெலுக்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும் மண்டப நிலைகள் அமைக்கப்பட்டு அங்கு மக்கள் மாற்றப்பட்டனர். சில பாடசாலைகளில் குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டன.

நெலுக்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட மண்டபங்களில் ஐந்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட குடும்பமொன்றுக்கு 100 சதுர அடி இடத்தை ஒதுக்கிக்கொடுத்தனர். இந்த 100சதுர அடிக்குள்தான் இந்தக் குடும்பத்தினர் சமைக்க வேண்டும், தமது மூட்டை முடிச்சுக்களை வைக்க வேண்டும், நித்திரை கொள்ள வேண்டும். போதிய மலசல கூடங்கள் கிடையாது. முகாம்களில் அமைக்கப்பட்ட தொட்டிகளில் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டும் தண்ணீர் இருக்கும். இதனால் மலசல கூடங்களுக்கு கூட தண்ணீர் இன்றி மக்கள் அலைந்து திரிய வேண்டியுள்ளது. ஆடைகளை உலர்த்தவோ, நீராடவோ பெருஞ் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

தொட்டிகளில் தண்ணீர் இல்லாவிட்டால் முகாம்களுக்கு அண்மையில் உள்ள வீடுகளில் உள்ள கிணறுகளுக்கு நீராட செல்லும் மக்கள் அனுமதி இன்றி வெளியே சென்றனர் என்றபடியால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர். பூந்தோட்டத்தில் இயங்கும் வெளிக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலய நலன்புரி நிலையங்களில் மண்டபங்களுக்கிடையே தண்ணீருக்காக குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் நீர் ஓடுவதற்கு வடிகால்கள் (வாய்க்கால்கள்) அமைக்கப்படவில்லை. இதனால் நீர் தேங்கி நிற்கின்றது. நீர் தேங்கி நிற்பதனால் நுளம்பின் தொல்லை தாங்க முடியாமல் மக்கள் இரவு முழுவதும் கண்விழித்திருக்கின்றனர்.

சகல முகாம்களிலும் சுகாதார சீர் கேட்டினால் கண்நோய், அம்மை, வயிற்றோட்டம், வயிற்றுழைவு, மலேரியா போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவிவருகின்றன.

இந்நோய்களை கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் ஏதும் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. முகாம்களில் இருந்து வெளியே செல்வதற்கு நான்கு மணித்தியாலங்கள் மட்டும் அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு சகல முகாம்களிலும் மக்கள் நீண்ட கியூ வரிசையில் அதிகாலையில் இருந்தே கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது. ஒரு சிலர் முகாம்களிலுள்ள பொலிசாருக்கு அன்பளிப்புக்களைக் கொடுத்து சுலபமாக அனுமதி பெற்று வெளியே செல்கின்றனர்.

முகாம்களில் இருந்து நிரந்தரமாக ஒருவர் வெளியே செல்ல வேண்டுமென்றால், அது இலகுவில் நடக்கக்கூடிய காரியமல்ல. ஒவ்வொரு முகாம் பொறுப்பதிகாரியும் ஒவ்வொரு விதமாக நடந்து கொள்கின்றனர். இவர்களுக்கென உயர் அதிகாரிகளினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எதையும் இந்த முகாம்பொறுப்பதிகாரிகள் கவனத்தில் எடுப்பதில்லை. தாங்கள் நினைத்ததையே செய்கின்றனர். உயர் அதிகாரிகளினால் வழங்கப்பட்ட சுற்று நிருபங்கள், அறிவுறுத்தல்கள் எதனையும் இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. ஒவ்வொரு முகாம் பொறுப்பதிகாரிகளும் தங்களுக்கென தனியானதொரு நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். இன்று ஒன்றைச் சொல்லுவர். நாளை அது அப்படி இல்லை, இப்படித்தான் செய்யலாம் என்று கூறுவர். தங்களின் சேட் பொக்கற்றுகளை நிரப்புவதற்கு ஏஜண்டுகளை ஒவ்வொரு வரும் அமர்த்தியுள்ளனர்.

இன்று மக்கள் இந்த முகாம்களில் இருந்து வெளியேறி, வவுனியா நகருக்குள் வசிப்பதற்கும், வவுனியாவுக்கு தெற்கே வசிப்பதற்கும் பல ஆயிரம் ரூபாய்களை அளிக்க வேண்டியுள்ளது. ரூபாய்களை அளந்தால் சுற்று நிருபங்கள் அறிவுறுத்தல்கள் எதுவும் கிடையாது. முகாமை விட்டு வெளியேறி விடலாம்.

வவுனியா நகருக்குள் இடமாற்றம் கிடைத்த அரசாங்க அலுவலர்கள் 80 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் கூட இன்று இந்த முகாம்களை விட்டு வெளியேற முடியாமல் துடியாய்த் துடிக்கின்றனர்.

அன்றாடம் கூலி வேலை செய்து தமது குடும்பத்தை நடாத்துகின்ற பல குடும்பஸ்தர்கள், வெளியில் சென்று கூலி வேலை செய்து தமது குடும்பத்தை பராமரிக்க முடியாமல் பரிதவிக்கின்றனர். நான்கு மணித்தியாலத்துக்கு மட்டும் வழங்கப்படும் அனுமதியுடன் வெளியில் சென்று கூலி வேலை செய்ய முடியுமா? முன்னர் நாளொன்றுக்கு 12வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 50/=ம், 12வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ரூபா 30/=ம் அரசினால் வழங்கப்பட்டது. இதனைக் கொண்டு ஒருவாறு தமது குடும்பத்தை பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றினார்கள். ஆனால் தற்போது ஒரு வாரத்துக்கு ஒருவருக்கு ரூபா 84/= பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஐந்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1260/= பெறுமதியான உணவுப்பொருட்களையே வாங்க முடியும். இது அந்தக்குடும்பத்துக்கு ஒரு வாரத்துக்கு கூட போதுமானதல்ல. இதனால் பலர் முகாம்களில் இன்று ஒரு நாளைக்கு ஒரு நேரம் கூட சாப்பிட முடியாமல் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக உலர் உணவுப் பொருட்களை வழங்கியவர்கள் இன்று வரை சமையல் பாத்திரங்களை வழங்கவில்லை.

வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இன்று சகல அடிப்படை வசதிகளும் இன்றி சொல்லொண்ணாத்துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு சென்று குடியமர விடிவு காலம் எப்போது பிறக்கும் என ஏங்கித் தவிக்கின்றனர்.

வவுனியா நலன்புரிநிலையங்களுக்கு வெளிநாட்டு தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் விஜயமொன்றை மேற்கொண்டு, தமது விருப்பத்துக்கு அமைய குடியமர்த்துவதற்கு வழி ஏற்படுத்த வேண்டுமென முகாம்களில் வசிக்கின்ற மக்கள் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-அன்பு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே.. 31

## குழந்தைகள் ஏன் சஞ்சலப்படுகிறார்கள்?

### குற்ற உணர்வு காரணமான பரபரப்பு அல்லது மனச்சஞ்சலம்.

டொக்டர்.ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில்.அருண்

தெரிந்தோ தெரியாமலோ, பெற்றோர்கள் சிறுவர்களிடம் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறார்கள். குற்ற உணர்வு, உப்பைப்போல் வாழ்வை சுவையுள்ளதாக்கக்கூடிய ஒரு விடயம்தான். ஆனால், அதுவே வாழ்வின் பிரதானமான அம்சமாக இருக்கக்கூடாது. ஒரு குழந்தை ஒரு சமூக ஒழுங்கு விதியை அல்லது விழுமியங்களின் பிற்பட்ட நடத்தையை மீறி நடக்கும் போது அங்கு ஏற்றுக்கொள்ளாமைக்கும், குற்ற உணர்வுக்கும் ஒரு இடம் இருக்கவே செய்கிறது. ஆனால் ஒரு குழந்தை எதிர்மறையான உணர்வுகளை உணர்வதற்கு தடைசெய்யப்படும் வேளையில் அது தவிர்க்க முடியாத விதத்தில் அதிகளவான குற்ற உணர்வுக்கும் சஞ்சலத்திற்கும் உள்ளாகிறது.

இத்தகைய அதிகப்படியான குற்ற உணர்விற்கு ஒரு குழந்தை ஆட்படாமல் இருக்க வேண்டுமானால், அது தவறிழைக்கும் வேளையில் பெற்றோர் ஒரு பழுதடைந்த காரை திருத்தும் ஒருவருடைய மனோநிலையுடன், அதனை அணுக வேண்டும். திருத்துபவர் ஒரு போதும் காரின் சொந்தக்காரரில் தவறு காண்பதில்லை. மாறாக, அந்தக் காரில் திருத்தப்பட வேண்டிய விடயத்தை மட்டும் குறிப்பிடுகிறார். அவர் அந்தக் கார் சத்தம் போடுவதைப்பற்றியோ அல்லது அதன் ஆட்டம் பற்றியோ குறிப்பிட்டு அதைத்திட்டுவதில்லை. அவர் அவற்றை, காரின் குறைபாட்டை விளங்கிக்கொள்வதற்கான அறிகுறிகளாகவோ சமிக்ஞைகளாகவோ காண்கிறார். அவர் தனக்குள்ளேயே இப்படிக்கேட்டுக் கொள்கிறார். ''இப்படிச் சத்தம் போடுவதற்கும் ஆடுவதற்கும் என்ன காரணமாக இருக்கும்?''

தமது பெற்றோர்களது அன்பையோ, அனுமதியையோ இழந்துவிடாமல் தாம் விரும்பியபடி சுதந்திரமாக சிந்திப்பதற்கு தனக்கு சுதந்திரம் இருப்பதாக ஒரு குழந்தையால் உணரமுடியுமானால், அதைவிட அதற்கு சந்தோசமான விடயம் எதுவுமில்லை. பின்வரும் வாக்கியங்கள் பயனுள்ளவை.

''நீ ஒரு விதமாக உணர்கிறாய். நான் வேறு விதமாக உணர்கிறேன். இந்த விடயத்தில் நீ வேறு விதமாக உணர்கிறாய்''

''உன்னுடைய அபிப்பிராயம் உனக்கு சரி போல இருக்கிறது. எனது அபிப்பிராயம் வேறுபட்டது. நான் உனது அபிப்பிராயத்தை மதிக்கிறேன். ஆனால் எனக்கு வேறு அபிப்பிராயம் இருக்கிறது''

தமக்குத் தெரியாமலே, பெற்றோர்கள் பிள்ளைகட்கு அதிகளவு விளக்கங்களை வழங்குவதன் மூலமாகவும் அதிக வார்த்தைகளைப் பாவிப்பதன் மூலமாகவும் அவர்களிடத்தில் குற்ற உணர்வை ஏற்படுத்திவிடல் கூடும். இது பெரும்பாலும் 'நவீன' பெற்றோர்களிடம் காணப்படுகிறது. அவர்கள், சிக்கலானதும், பூரணமற்றதுமான விடயங்களில் கூட ஒத்த கருத்தைக்கொண்ட நிலையை உருவாக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

ஐந்து வயதான ஷச்சரி தனது பாலர் பாடசாலை ஆசிரியை மீது மிகுந்த கோபமாக இருந்தான். ஏனென்றால், இரண்டு வாரங்களாக அவர் சுகவீனமாக இருந்ததால் பாடசாலைக்கு வரவில்லை. சுகமுற்று அவர் பாடசாலைக்கு வந்த தினம் அவன் அவரது தொப்பியைப் பிடுங்கிக் கொண்டு பாடசாலை வளவுக்குள் ஓடி விட்டான். ஷச்சரியின் தாயும், ஆசிரியையுமாக அவனைத் தொடர்ந்து வெளியே போனார்கள். 'அது என்னுடைய தொப்பி.. அதை என்னிடம் கொடுத்துவிடு' என்றார் ஆசிரியை.

''ஷச்சரி.. உனக்கு நன்றாகத் தெரியும், அந்தத் தொப்பி உனதல்ல என்று. நீ அதை வைத்திருந்தால் மிஸ் மார்டாவுக்கு திரும்பவும் குளிரால் வருத்தம் பிடித்துவிடும். அவ ஏற்கெனவே இரண்டு வாரம் வருத்தமாயிருந்து இன்றைக்குத் தான் வருந்திருக்கிறா. இல்லையா மிஸ்..? ஷச்சரி உன்னுடைய மிஸ் திரும்பவும் வருத்தக்காரியா வாறது உனக்கு விருப்பமா?''



இப்படியான ஒரு விளக்கம் ஷச்சரிக்கு தனது ஆசிரியையின் சுகயீனம் குறித்த குற்ற உணர்வையும், அதற்கான காரணம் என்ன என்ற உணர்வையும் ஏற்படுத்தி விடுகிறது என்பதுதான் இதிலுள்ள ஆபத்து. இந்த நீண்ட விளக்கம் சம்பந்தமற்ற ஒன்று என்பது மட்டுமல்லாமல் தீங்கானதும் கூட. அந்தக்கணத்தில் தேவைப்பட்டதெல்லாம் அந்தத்தொப்பியை திரும்பப்பெற்றுக் கொள்வது மட்டுமே. பாடசாலை வளவுக்குள் நின்று கொண்டு இருவருமாக நீண்ட விளக்கம் அளிப்பதை விட தொப்பியை கையில் எடுத்துக் கொள்வதே சிறந்த தாகும்.

சிலவேளை ஆசிரியை பிறகு தான் வராமையால் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் கோபத்தைப் பற்றி பேசி வேறு விதத்தில் அவனுடன் ஒத்துப்போயிருக்க முடியும்.

### சுயாதீனம் அல்லது தகுதியை மறுப்பதனால் ஏற்படும் சஞ்சலம்.

ஒரு குழந்தை தான் செய்யத் தயாராக இருக்கும் ஒரு வேலையில் ஈடுபடுவதை அல்லது ஏற்கத் தயாராக இருக்கும் ஒரு பொறுப்பை எடுப்பதை மறுப்பது அதற்கு அதிருப்தியையும் கோபத்தையும் ஊட்டுகிறது. கோபம், குற்ற உணர்வை அல்லது எதிர்விளைவு குறித்த பயத்தை ஏற்படுத்தக் கூடிய பழிவாங்கல் நடவடிக்கைகட்கு அதனை இட்டுச் செல்லக்கூடும். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் குழந்தைக்கு சஞ்சலமே ஏற்படுகிறது.



சின்னப்பிள்ளைகள் வேலைகளை திருத்தமாகச் செய்யப்பழகிவிடுவதில்லை. அவர்கள் தமது சப்பாத்து நாடாவை முடிவதற்கோ அல்லது தமது சட்டைத் தெறியைப் போடுவதற்கோ நீண்ட நேரம் எடுக்கிறார்கள். கதவுப்பிடியைத் திருக்கித் திறக்க நீண்ட நேரம் எடுக்கிறது. நாம் செய்யக்கூடிய உதவியெல்லாம் பொறுமையாக அவர்கள் செய்யும்வரை பார்த்துக் கொண்டிருப்பது தான். ஏதாவது சொல்ல வேண்டுமாயின் ''அந்த மூடியைக் கழற்றுவது கொஞ்சம் கஷ்டமான வேலைதான்'' என்று சொல்லலாம்.

இத்தகைய அபிப்பிராயத்தைக் கூறுவது குழந்தை தனது முயற்சியில் வெற்றிபெற்றாலும் சரி, தோற்றாலும் சரி அதற்கு உதவியாக இருக்கிறது. அது வெற்றிபெற்றால் ஒரு கஷ்டமான வேலையைச் செய்த திருப்தி அதற்கு ஏற்படும். தோற்றாலும், அது உண்மையில் கஷ்டமான வேலைதான், தனது பெற்றோருக்கே அது தெரியும் என்று தன்னைச் சாந்தப்படுத்திக்கொள்ள முடியும். இரு சந்தர்ப்பங்களிலும் குழந்தை பரிவையும், ஆதரவையும் பெறுகிறது. இது அதற்குப் பெற்றோர்களிடம் அன்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துகிறது. தான் தோற்றுப்போனதாக, தன்னால் அதைச்செய்ய முடியாது என்று அது உணரப்போவதில்லை.

குழந்தைகளின் வாழ்வை வளர்ந்தோருடைய வினைத்திறனுக்கான அளவிடைகளினால் அளவிடக் கூடாது என்பது மிகவும் முக்கியமாகும்.

வினைத்திறன் என்பது குழந்தைப் பிள்ளைத்தனத்தின் எதிரி என்று சொல்லலாம். குழந்தைகளின் உணர்வு என்ற பொருளாதாரத்தில் அது மிக அதிகமான விலையுயர்ந்த விடயமாகும். இது குழந்தைகளின் எல்லா வளங்களையும் வழிந்தோட வைத்துவிடுகிறது; வளர்ச்சியைத் தடுக்கிறது; ஆர்வத்தைக் குறைக்கிறது; உணர்வு வறுமை நிலைக்கு குழந்தைகளை இட்டுச் செல்கிறது.

**(வரும்)**


# 1996இல் ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலில் வெளியான புத்தகங்கள்: ஒரு குறிப்பு.

எம்.பௌஸர்

நீண்ட காலமாகவே ஈழத்தில் தமிழ் புத்தக வெளியீடுகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றன; அதுவும் குறிப்பாக இலக்கியம் சார்ந்த புத்தகங்களின் வருகை நம்பிக்கைத்தரக்கூடியதாக இருக்கவில்லை. ஈழத்தை சேர்ந்த ஒரு தமிழ் எழுத்தாளன் புத்தகம் போடுவதென்றால், அது தற்கொலைக்கு ஒப்பானதாகவே இங்கு கருதப்படுகிறது. நவீன தொடர்பாடல் சாதனங்களின் ஆக்கிரமிப்புக்கு முன்னேயும் இதே நிலைதான் இங்கு இருந்தது. ஆகவே இன்றைய விரிந்த உலகின் நவீன தொடர்பாடல், பொழுது போக்குச் சாதனங்களின் வருகை புத்தக வாசிப்பையும், புத்தக வெளியீடுகளையும் பெருமளவு பாதித்திருக்கிறது என்ற கருத்து ஈழத்தின் தமிழ் இலக்கியப் பரப்பை பொறுத்தவரை ஒரு முதற்காரணமாக கொள்ள முடியாது! இந்த பின்னடைவிற்க..ன பிரதான காரணம் எமது ஈழத்து தமிழ் சூழலில் புத்தகங்களை ஆர்வத்துடன் பணம் கொடுத்து வாங்கி வாசிக்கும் பழக்கம் நம்மவர்களிடையே மிகவும் குறைந்த நிலையில் இருப்பதும் அதற்கான பங்களிப்பை எம்மவர்கள் செய்யத் தயாராக இல்லாது இருப்பதுமே முக்கியமாக பார்க்கப்பட வேண்டியதாகிறது.

இருந்தும் **இந்த அபாயகரமான ''தற்கொலைச் சூழலை'' எதிர்கொள்வதற்கு நமது எழுத்தாளர்கள் அவ்வப்போது முன்வருவது ஈழத்து தமிழ் இல்க்கியச் சூழலில் மிகவும் போற்றுதற்குரிய உழைப்பாகவும் தியாகமாகவுமே பார்க்கப்படல் வேண்டும்.** ஈழத்து தமிழ் அச்சுக்கலை சூழல் நவீன தொழில் நுட்பங்களை இப்போது உள்வாங்கி தமிழ் நாட்டு புத்தக அழகியல் தரத்திற்கு ஒப்பான புத்தகங்கள் இங்கு பதிப்பிக்கப் படுவது ஒரு முன்னேற்றமான போக்காகவே பார்க்கப்பட வேண்டியதாகிறது.

1996ம் ஆண்டின் ஈழத்து தமிழ் இலக்கிய புத்தக வெளியீட்டுச் சூழலை ஒரு மதிப்பீட்டுக்கு உட்படுத்தினால், ஐம்பத்து எட்டு புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. (கிடைக்கப்பெற்ற தரவுகள்) இதில் ஐம்பத்தி நான்கு புத்தகங்கள் இங்கு பதிக்கப்பட்டும் நான்கு புத்தகங்கள் தமிழ் நாட்டிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. கடந்த கால எமது தமிழ் இலக்கிய புத்தக வெளியீடுகளை ஓரளவுக்கு ஆய்வுக்குட்படுத்தும் போது 1996ம் ஆண்டு தமிழ் இலக்கிய புத்தக வெளியீட்டுச்சூழல் வேகம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆனால், இது முற்று முழுதான திருப்தித்தரக்கூடிய தொகையாக இல்லாதது - எம்மைத் தொடரும் அவலமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மொழி இலக்கிய புத்தக வெளியீட்டு புள்ளிவிபரங்களுடன் எமது தமிழ்ச் சூழல் புத்தக வெளியீடுகளை ஒப்பிடும் போது தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரத்திற்கும் குறைவான வெளியீடுகளையே செய்ய முடிந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. இதில் தமிழ் புத்தகங்களை வெளியிடுவதில் அரசாங்கத்தின் புறக்கணிப்பும் தமிழ் புத்தகங்களை வெளியிடக்கூடிய நிறுவனங்கள் வெளியீட்டு மையங்கள் இல்லாதிருப்பதும் இந்த பின்னடைவிற்கான பிரதான காரணங்களாகும்.

1996ம் ஆண்டில் எமது தமிழ் இலக்கியச் சூழலில் வெளிவந்த புத்தகங்களை அரச இலக்கிய விழாவிற்கான தமிழ் நூல் பரிசுத் தேர்வு குழுவினரால் அடையாளப் படுத்தப்பட்ட வகைகளின்படி பார்க்கும் போது கீழ்வருவனவாக உள்ளன.

1. சிறுகதை
2. நாவல்
3. கவிதை
4. நாடகம்
5. மொழிபெயர்ப்பு இலக்கியம்
6. தமிழ் மொழி இலக்கியம் சார்ந்தவை
7. சிறுவர் இலக்கியம்

### 1. சிறுகதை

இன்றைய ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலில் ஆரோக்கியமான சிறுகதைகளின் வரவு மிகவும் குறைவாகவே இருக்கிறது என விமர்சகர்களால் சொல்லப்படுகிறது. இந்த சூழலில் கடந்த ஆண்டில் ஈழத்தில் பதின் மூன்று சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. இச் சிறுகதைத் தொகுதிகளில் 65களில் எழுதப்பட்ட சிறுகதைகள் தொடக்கம் 1996இல் எழுதப்பட்ட கதைகள் இடம்பெற்றிருக்கின்றன. மூத்த எழுத்தாளர்களான மு.பொன்னம்பலம், என்.கே ரகுநாதன், பெனடிக்ற்பாலன் தொடக்கம் இன்றைய இளம் தலைமுறை எழுத்தாளர்களான திருக்கோவில் கவியுவன் இரத்தினவேலோன் போன்றோர்களின் சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

மு. பொன்னம்பலத்தின் **கடலும் கரையும்**, என்.கே. ரகுநாதனின் **தசமங்கலம்**, மு. பஷீரின் **மீறல்கள்**, பத்மா சோமகாந்தனின் **புதிய வார்ப்புகள்**, திக்வல்லை கமாலின் **விடை பிழைத்த கணக்கு**, **விடுதலை**, கே. கோவிந்தராஜின் **பசியாவரம்**, கவியுவனின் **வாழ்தல் என்பது**, எம்.எல்.ராஜகபூரின் **வானொலிப்பெட்டியும் மற்றும் சில கதைகளும்**, புன்னியாமீனின் **யாரோ எவரோ எம்மை ஆள**, பெனடிக்ற்பாலனின் **தலைவிதியைப் பறிகொடுத்தோர்**, இரத்தின வேலோனின் **புதிய பயணம்**, க. தேவகாடட்சத்தின் **காலக்கீறல்கள்** என்பனவாகும். திக்வல்லை கமாலின் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் இந்த ஆண்டில் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நாவல்

நாவல் இலக்கியத் துறையில் ஈழத்து எழுத்தாளர்களின் பங்களிப்பு

→17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் ஊர்காவற்படை: -அபுநிதாலுக்கு ஒரு பதில்-

நெற்றிக்கண்ணன்

***இதழ் 117ல் அபுநிதால் எழுதிய 'வல்லூறுகளுக்கு இரை கொடுப்பதா' என்பது தொடர்பான ஒரு எதிர்வினை இங்கு பிரசுரமாகிறது. அபுநிதால் அவர்களின் கருத்துக்களை மறுத்து கட்டுரையாளர் ஊர்காவற் படையின் தோற்றம் குறித்த தனது கருத்துக்களை இங்கே எழுதியுள்ளார். தமிழ் முஸ்லிம் நல்லுறவை சீர்குலைக்கும் விதத்திலான விஷமத்தனமான நடவடிக்கைகளையும் அதில் அரசின் பங்கையும் சுட்டிக்காட்டும் இக்கட்டுரையாளரின் கருத்துக்களை விவாதத்திற்கு விடுகிறோம். இவை தொடர்பான மாற்று அபிப்பிராயங்களை வரவேற்கிறோம்***

***- ஆர்***

அரசானது தமிழ் மக்களுக்கு எதிராகப்பயன்படுத்துமெனத் தெரிந்தும், தமிழ் ஆயுதக்குழுக்களின் கொடுமையான அடக்குமுறை, அட்டூழியங்களிலிருந்து விடுபட எந்த வழிமுறையும் இல்லாது நிராயுதபாணிகளாய் இருந்த முஸ்லிம் சமூக மத்தியில், அவ்வடக்குமுறையை எதிர்கொள்ளவென உருவானதுதான் முஸ்லிம் 'ஊர்காவற்படை' என்று ஆணித்தரமாக தோற்றம் தொடர்பான தவறானதொரு வரலாற்றுப் பார்வைக்கு வித்திட முனைந்தது வியப்புக்குரியதே!

ஐக்கியத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் காரணிகளுள் முஸ்லிம் ஊர்காவற் படையும் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை எனவும்; ஒன்றுபட்ட ஐக்கியத்தில் தான் தமிழ் முஸ்லிம் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது எனவும் கூறும் கட்டுரையாளர் எந்தக் காரணத்தின் நிமித்தமோ முன்னுக்குப் பின் முரணாகவும் எதை நோக்கியோ இழுபட்டும், குழம்பியும் போயுள்ளதையே அவரது கட்டுரை காட்டுகிறது.

அதாவது, இக்கட்டுரை முஸ்லிம் ஊர்காவற் படையின் தோற்றம் என்பதை தமிழ் சமூகத்திலிருந்து உருவான ஆயுதக்குழுக்களுக்கு ஒப்பிட்டு; அடக்கியொடுக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காய் சுயமாக உதயமானதொரு ''எழுச்சிப் படையாய்'' சித்தரித்துக்காட்ட பிரயத்தனப்பட்டுள்ளது.

முஸ்லிம் ஊர்காவற் படையின் தோற்றத்தின் அவசிய காரணிகள் தொடர்பாகவும் முஸ்லிம் மக்களின் நியாயங்களைப் பரிசீலனைக்கு கூட உட்படுத்தத் தயாருற்ற நிலை இருப்பதாகவும் ஆதங்கப்படும் கட்டுரையாளர், முஸ்லிம் ஊர்காவற் படையின் தோற்றமும் அதன் தேவையும் ஏன் ஏற்பட்டது என்ற யதார்த்தமான வினாவுக்காக பதில் முக்கியமானது எனக்கூறுவதுடன், இத்தோற்றப்பாட்டுக்கு ''தமிழ் இனவாதம் ஆதிக்கம் பெற்ற வெகுசன சாதனங்களின் பிரச்சாரமும் துணை போகின்றன'' எனவும் சாடுகிறார். (அவ்வகையான வெகுசன ஊடகங்கள் எவையெனக் கூறாதவரை அதற்கான விமர்சனங்கள் அவசியமில்லை எனலாம்.)

ஒட்டுமொத்தமாக இக்கட்டுரையின் சாராம்சம், ஊர்காவற் படையின் உருவாக்கம் பின்புலம் என்னும் வரலாற்றுக் காரணிகள் திரிக்கப்பட்டு உண்மைக்கு புறம்பான சித்திரமே காட்டப்படுகிறது என்று கூறுவதுடன் பின்வருவனவற்றையும் தொனிப்பொருளாகக் கொண்டுள்ளது.

1. முஸ்லிம் ஊர்காவற் படை என்பது தற்போது முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கும் ஓர் படையணியாகும் என்பதுடன் அதன் இருப்பும் அவசியமானது.

2. முஸ்லிம் சமூகத்தை அல்லது முஸ்லிம் ஊர்காவற் படையினரை தாக்கக்கூடாது என்ற தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் உத்தரவாதத்திற்குரிய எதிர்பார்ப்பு.

3. உத்தரவாதம் வழங்கப்படாவிட்டால், முஸ்லிம் ஊர்காவற் படையினரின் தற்போதைய போக்கு நடவடிக்கை என்பன தவிர்க்க முடியாதவை என்பது.

''1985ம் ஆண்டுதான் ஊர்காவற் படையின் ஆரம்பம் என நினைக்கின்றேன்'' என்று தொடங்கும் அபுநிதால் ''அக்கால கட்டத்தில் தான் கிழக்கு மாகாணத்தில் தமிழ் இயக்கங்களுக்கும் முஸ்லிம்களுக்குமான முரண்பாடுகள் கூர்மையடைந்தன. தமிழ் முஸ்லிம் வ்ரலாற்றில் பாரிய இடைவெளியை ஏற்படுத்திய முதல் சூழலும் இதுதான்'' என்றும் கூறி ''இக்கால கட்டத்துடன் . சேர்த்துத்தான் முஸ்லிம் ஊர்காவற் படையினரின் தோற்றத்தையும் விடுதலைப்புலிகள் பார்க்க வேண்டும்'' என்று ஊக அடிப்படையிலான வரலாற்று முத்தாய்ப்பு வைக்கின்றார்.

உண்மையில் வட - கிழக்கு இளைஞர்களின் தீவிரவாத ஆயுத முனைப்பை நோக்கிய நகர்வுக்கான 1981 - 1983க்கான கால கட்டத்திலேயே பொதுவாக ஊர்காவற் படையின் தேவைக்கான அவசியம், அரசு மட்டத்தில் உருவாகியிருந்தது என்பதற்கு இந்தச் செய்தி ஒரு சான்றாகும்:

''சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் ஊர்காவற் படை அமைப்பதற்கான விசேட சேவை அலுவலர் மூலம் ஆட்கள் திரட்டப்பட்டார்கள்.''

*(வீரகேசரி 22.11.1983)*

அந்தக்காலத்திலேயே ஈழவிடுதலைப் போராட்டமானது ஆயுத ரீதியான யுத்தமாக வெடிக்க இருப்பதற்கான அறிகுறிகளைக் கண்டு கொண்ட அரசு தனது முப்படைகளின் சக்தியையும்



முப்படைகளுக்குத் தேவையான ஆட்பலத்தையும் உள்வாங்கும் ஓர் ஆரம்ப நடவடிக்கையாக ஊர்காவற் படை அமைப்பைத் திட்டமிட்டிருந்தது என்பதை இச்செய்திகள் காட்டுகின்றன.

''பொலிஸ், இராணுவம், விமானப் படை, கடற்படை போன்றவைகள் திரட்டுபோது இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்''

*(தினகரன் 18.11.1983)*

''பொலிஸ் முப்படைகளுக்கு உதவும் பொருட்டு கிராம பாதுகாப்பு சேவையை ஆரம்பித்துள்ளோம்'' - உள்நாட்டு பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுராபஸ்தியன் அவர்கள்

*(வீரகேசரி 05.12.1983)*

1983 ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து வட - கிழக்கு தமிழ் இளைஞர்களினால் ஆயுத ரீதியான தீவிரவாதம் கூர்மையடைந்தபோது ஊர்காவற் படையினரின் கட்டுமானமும் அரசுக்கு உடனடித்தேவையாக இருந்தது. பின்னர் சேர்ந்து கொள்ளாதபோதும் கணிசமான தமிழ் இளைஞர்களும் வடபகுதியில் கூட விண்ணப்பித்திருந்தனர்.

''யாழ் மாவட்டத்தில் ஊர்காவற் படையில் சேர்ந்து கொள்வதற்கு ஆரம்பித்தில் விண்ணப்பித்தவர்களில் பலரும் தற்போது நியமனங்களை ஏற்க முன் வரவில்லை.''

*(வீரகேசரி 26.11.1983)*

ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியில் கூர்மையடைந்த 1983 இறுதிக்கு பிற்பாடு இலங்கைக்கு ஆயுத ரீதியாகவும், ஆலோசனைகள் ரீதியாகவும் இஸ்ரவேல் நாடு உதவிகள் செய்வதாகவும்; குறிப்பாக அதிரடிப் பயிற்சிகளும், கெரில்லா நடவடிக்கைகளை முறியடிப்பதற்குரிய தந்திரோபாயங்களையும் இஸ்ரேலிய உளவுப் படையான ''மொசாட்'' செய்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட கால கட்டத்தில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைத்து சிண்டு முடித்து குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் தந்திரத்துக்காக முஸ்லிம் ஊர்காவற் படையை கணிசமான அளவு அரசு பின்னர் பயன்படுத்திய போதும்; ஊர்காவற் படை அல்லது முஸ்லிம் ஊர்காவற் படையின் தோற்றம் என்பது ஆயுத ரீதியான யுத்தமாக முனைப்படைந்த ஈழ விடுதலைப்போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கும் பல வழிகளிலும் பயன்படுத்தும் ஓர் நீண்டகால யுத்த தந்திரோபாயமாகவே அன்றைய ஐ.தே.க. அரசினால் உருவாக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் தமது பாராளுமன்ற உறுப்பினர்களூடாகவே கிராம ரீதியாக அரசு இந்நியமனங்களைச் செய்தது.

''அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 11 கிராம சேவை நிலதாரி பிரிவுகளிலுமிருந்து 60 இளைஞர்களை பொத்துவில் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.ஐ.உதுமாலெப்பை ஊர்காவற் படையினராகத் தெரிவு செய்துள்ளார்.''

*(தினகரன் 18.11.1983)*

அத்துடன், எதிர்காலத்தில் பல்வேறு பதவிகளைப்பெற்றுக்கொள்வதற்கு உதவியாகவும்; கிராம சேவை நிலதாரி, கிராம முன்னேற்ற உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர், கூட்டுறவுப் பரிசோதகர், ஆசிரியர் போன்ற நியமனங்கள் நடைபெறும்போதும் இந்தப் பதவியையும் ஒரு விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்''

*(தினகரன் 19.11.1993)*

எனவும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் வறுமையிலும் வாடிய இளைஞர்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டப்பட்டிருந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை.

வேறுவிதமான காரணிகள் இல்லாது போயிருந்தால் ''தமிழ் ஊர்காவற் படை'' என்பதும் உருவாகியிருக்கும் என்பதோடு; தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் முரண்பாடுகள் கூர்மையடைந்த 1985க்கு முந்தையதான கால கட்டமான 1983அளவில் சகல இளைஞர்களும் தமது சொந்த எதிர்காலம் தொழில் குறித்தே தம்மை ஊர்காவற் படையினர் தம்மை இணைத்துக் கொண்டார்கள். இதற்கு ஆட்சியாளர்கள் தமது அரசியல் ஊடகங்களுக்கூடாக ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தனர். மறைமுகமாக இன, மத, ரீதியான உணர்ச்சிகளும் ஊட்டப்பட்டிருந்தன.

ஆனால், இளைஞர்களுக்கு தொழில் ரீதியான தேவை இருந்த போதும், அரசு தொழில் வாய்ப்பு முன்னுரிமைக்கான ஆசைவார்த்தைகளைக் காட்டியபோதும்; பொதுவாக நீண்டகால யுத்தத்தந்திரோபாய அடிப்படையில் ஓர் ஆட்பலத்துக்கான சக்தியாகவே ''ஊர்காவற் படை'' திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும், கிழக்கு மாகாணத்தில் ''முஸ்லிம் ஊர்காவற் படை என்பது அமைக்கப்பட வேண்டிய தேவையும், அவசரமும், அரசுக்கு தென்னிலங்கையில் அமைக்கப்படுவதற்கான நோக்கத்திற்கு வித்தியாசமானதாக இருந்தது.

ஏனெனில், 1983 ஜூலை இனப்படுகொலை நிகழ்வுகளையடுத்து முனைப்பெடுத்த தமிழ் தீவிரவாத இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர்களும் தம்மை இணைத்துக் கொண்டனர்.

''ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பினால் கணிசமான முஸ்லிம் இளைஞர்களும் இணைந்திருந்தனர். இவர்களுக்கு இந்தியா ஆயுதமும், ஆயுதப்பயிற்சியும் அளித்தது''

***(மனித உரிமைகட்கான (யாழ்) பல்கலைக்கழக ஆசிரியர்களின் விசேட அறிக்கை இல -3 ஒக்டோபர் 1990)***

வட - கிழக்கைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கியதான ஒரு போராட்டமே தீர்க்கதரிசனமானது எனும் கருத்தை குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் கொள்கையளவில் கொண்டிருந்ததே முஸ்லிம் இளைஞர்கள் அவ்வியக்கத்தில் கூடுதலாக இணைந்து கொண்டமைக்கு மூல காரணமாக இருந்தது.

அக்காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பிரதேச அரசியல் பிரிவுக்கு மொகமட் அலியார், மொகமட் மவ்சூக் உம், இராணுவ பிரிவுக்கு யோகன் என்றழைக்கப்பட்ட ராபிக்கும் பொறுப்பாளர்களாக இருந்தனர், என்பதுடன் ஏனைய இயக்கங்களிலும் பல முஸ்லிம் இளைஞர்கள் பல பொறுப்புக்களையும் வகித்திருந்தனர். (இதில் ராபிக் இந்தியாவில் விசேட பயிற்சி பெற்றவர்)

நடைமுறையில் சில தவறுகள் இருந்த போதும், சுபீட்சமான ஐக்கியத்தை கட்டியமைக்கத்தவறிய போதும், கொள்கையளவில் கணிசமான முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இயக்கங்களுக்கும் உறவுகள் ஏற்பட்டிருந்தன.

இக்கால கட்டத்தில் சகல இயக்கங்களும் தமது இயக்க வளர்ச்சி கருதி தத்தம் பகுதிகளில் கொள்ளை, கடத்தல், கொலை போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர். அம்பாறை மாவட்டமும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயம், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி எனபன இவற்றுக்கு இலக்காயின. அது மட்டுமல்லாமல் சில முஸ்லிம் வர்த்தகர்களிடமிருந்தம் பணம் பறிக்கப்பட்டது.

கொள்ளையடிப்பது இயக்கங்களின் தாரகம(த)ந்திரம் ஆக இருப்பினும் திட்டமிடுதல் அவ்வப்பகுதி அரசியல் இராணுவ பொறுப்பாளர்களையே சார்ந்திருந்தது.

''இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசு 1984ம் ஆண்டு தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன மத உணர்வுகளைத் தூண்டியதுடன் அரசால் 'ஜிகாத்' என்ற ஆயுதக் குழுவும் தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு அஷ்ரஃப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் அனுசரணையாக இருந்தது. அநேக முஸ்லிம் இளைஞர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். இலிருந்து விலகி ''ஜிகாத்'' அமைப்பில் இணைந்தனர்''

***(ம.உரிமை யாழ் ப. ஆசிரியர்கள் விசேட அறிக்கை -3)***

சில முஸ்லிம் பகுதிகள் கூட இயக்கங்களின் கோட்டையாக (உ+ம்: ஈ.பி.ஆர்.எல்.எப் மருதமுனை) இருந்தன.

*வரும்..*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நரகமும், அதுவும் பயணங்களும்

— திசேரா —

முன்னைய மாதிரியில்லை இப்போது.

வெயிலின் கொடூரத்துக்கு தாக்குப்பிடிக்க முடிவதில்லை. எங்கும் வெட்ட வெளிதான். இந்நீண்ட வெளிக்குள் தடையின்றி நீண்டு இழுபட்டு நடுநடுங்கிப் போகின்றது பார்வை. கொதித்து பொங்கி வழிதல் கூட கண் ஓரங்களில் தெரியும். இந்த வெளிக்குள் பச்சையான மரம், செடி, கொடி, முதல் புல் பச்சை நிறமானதென்பதெல்லாம் ஞாபகமில்லாமல் போனது, கண்டு கொள்ளவே முடிவதில்லை. வளியென்பது அசையாமல் காற்றில்லாமல் போனது. தள்ளித் துரத்த மரங்களில்லாததால் அங்கேயே கிடக்கின்றது கட்டுப்பட்டது மாதிரி. இப்படியான வழியில்தான் பஸ்செல்லாம் மூச்சு வாங்கிப் போக வேண்டியுள்ளது. பல இடங்களில் பஸ் நின்று ஆக்களை இறக்கி அனுப்பும் கடவைகளும் இல்லாவிட்டால் பாதையை முறித்து கிறவல் றோட்டில் விழுந்து விழுந்து போக வேண்டிய சுற்றுக்களையும் தாண்டித்தான் இப்போதைய பிரயாணமெல்லாம்.

ஆனாலும் இதுவும் தொடர்ந்து நிகழ்வதில்லை, எப்போதாகிலும் ஸ்தம்பித்துக்கொள்ளும். இந்த நிறுத்தமும் வாரம், மாதமென நீண்டோ மிகக் குறைவான நாட்கணக்கில் குறுகியோ இருக்கக்கூடிய நிட்சயப்படுத்தப்பட முடியாத பயணங்கள் தொடர்ந்தாலும் பாதுகாப்பு எல்லை திறக்கப்படும் நேரங்களுக்கமைவாகவே நடக்கின்றது. இவ் எல்லை திறக்கப்படும் நேரத்துக்கு முந்தி வந்தாலும் அடைக்கப்பட்ட கடவையில் நிழலே தென்படாத வெட்டைக்குள் குந்தி, அடுக்கடுக்காய் காத்துக்கிடந்து இழவு காத்து திரும்பவேண்டிய முன்னை மாதிரியமையாத அலுத்த பயணங்களாகத்தானிருக்கின்றது. அவசரத் தேவைக்காய் மட்டும் பஸ் ஏற வேண்டிய காலம், எதிர்பார்க்க முடியாத பஸ் போக்குள்ள பொழுதுகள். வரும் பஸ்ஸும் ஆயுதங்களைச் சுமந்து கொண்டு சென்று விடும். நேரத்துக்கு வரக்கூடிய ரெயிலும் இல்லை (தண்டவாளங்களே இல்லாத போது ரயில் எப்படி வரும்). இருக்கைக்குமட்டும் ஆட்களேத்தும் இன்டர்சிடி பஸ்களில் போவதென்றால் ஒரு கிழமைக்கு முன் பதிவு பண்ண வேண்டும், காசும் இரண்டு மடங்கு. நிட்சயிக்கப்படாமல் நிர்ப்பந்திக்கப்பட்ட பயணங்களுக்கு இது ஒத்து வராது.

''சாமானுகள் விக்கிற விலைக்குள்ள, போய்த்திரும்புற காசில போய்ச் சேர்ந்திட்டா சரியா, திரும்பி வாரதுக்கு ஏது காசி'' ஊருக்குள் கிழடு கட்டைகளுக்கும், ஏழைக்கும்தான் இந்தக் கவலை. ஆனால் இளசுகளுக்கும் குடும்பக்காரனுக்கும் இதுதான் விருப்பம். ''ஆக்கள் குறைவெண்டதால செக்கிங்கில நேரத்தோட போயிடலாம் வெயிலில காயத்தேவல்ல'' என்றும் ''கதவு யன்னல் பூட்டித்தா புழுதி உள்ளுக்கு வராது இல்லாட்டி மூக்குக்குள் புத்து கட்டின மாதிரித்தான் இருக்கும்'' இப்படித்தான் நிறையப்பேர் காசெல்லாத்தையும் விட வதையிலிருந்து விடுபடுவதையே பெரிய காரியமாக நினைக்கிறார்கள். இது உண்மையாகப் பட்டுத் தொலைப்பதாலேயே, பல பஸ் சொந்தக் காரர்களுக்கு தொந்தி விழ ஆரம்பித்துவிட்டது.

எப்படித்தான் பூமாலையாய்ப் போனாலும் குரங்கு கையில் மாட்டுப்பட்டுத்தானாக வேண்டும். சிடுசிடு மூஞ்சியில் எப்பொழுதாகிலும் பிறையைக் கண்ட கரடிபோல இளவயதுப்புள்ளயையோ, தோல் சுருங்காத வெள்ளையான பெண் முகத்தையோ காணும் போது, சின்னப் பிள்ளைகளுக்கு கன்வுல நரி வெருட்டுறத்தப்போல சிரிச்சி சிரிச்சி நிற்பானுகள். குமரிகளக்கண்டா இன்னும் நிறையவே ''அசடு'' வழியும். ''சந்திரமண்டலத்தில் குண்டு வைத்து விட்டு இருவர் தப்பியோட்டம்'' செய்தி (வதந்தி) வந்தால் அன்று அனைத்து பஸ் பயணிகளும் சம்பல்தான். எல்லோரையும் விழுங்கி ஏவற விடுற மாதிரித்தான் பாப்பானுகள். அன்று தான், அடையாள அட்டை

ஒவ்வொருவருக்கும் இருப்பது பற்றியும், அதில் இலக்கங்களும், முகவரிகள், தந்தைபெயர் இருப்பது பற்றியும் நினைவுக்கு வந்தவர்களாய் கேட்பார்கள். பேக்கிலுள்ள காலுறையிலிருந்து தொப்பிவரைக்குமான காரணம் சொல்ல வேண்டும். இக்காரணங்களெல்லாம் கூடுதலாக வினவப்படுவது பெண்களிடம். அதுவும் அவர்களுடைய உள்ளாடை பற்றி அறிய, இப்படியான காரணங்கள் சொல்ல வேண்டிய பயணங்கள்தான். இப்பொழுதுகளில் தொடர்ந்து இருந்து வர பின்புறவருத்தமும் எரிச்சலும் இருக்காது. அடிக்கடி இறங்க வேண்டியதும், செக்கிற்கு துடிக்கும் நெஞ்சமும் கொண்ட மனக்கிலேசம் பிடித்த பயணங்கள். இறங்கிப்போவதும் பயந்து சாவதும் ஊருக்குள் இருக்கும் போதும் நடமாடித்திரியும் போதும், இசைவாக்கப்பட்ட நிகழ்வுகளாக இருப்பினும் பயணமென்பது நரகத்திற்கானது மாதிரியே இருக்கும்.

நாளை பயணிப்பது என்ற முடிவெடுத்ததிலிருந்த நரக வேதனையே கனவாகவும், நடைமுறையாகவும் தெரியும். அழிபட்ட வரண்ட காட்டுப்பகுதியில் இறங்கி நடக்கும் போதும், வெயில் சூட்டில் பஸ்சுக்குள் கிடந்து அவியும் போதும், இராவண பரம்பரை உச்சந்தலையிலிருந்து பாதம் வரை தட்டிப்பார்க்கும் போதும், சைவக்கடைகளில் தொங்கக்கண்ட நரக வேதனைப்படங்களே, இமைக்குட்புறம் ஒட்டுப்பட்டிருக்கும், நெருப்புத்தணலில் இழுபட்டுப் போவது போலவும், வெந்நீர் அண்டாக்குள் கிடந்து அவிவதாயும், யானைப்பாகன் வைத்திருக்கும் ஈட்டியாலோ அல்லது சூலாயுதத்தாலோ குத்தி எடுப்பது போல இருப்பதாய் மனது நரக வேதனைப்பற்றி நடைமுறையை சுட்டிக்காட்டும். இவ்வேளைகளில் மயிர்கள் குத்திட்டு ஈட்டியாய் நிற்கும். இதுதான் ஏனென்று புரிவதில்லை. மயிர்கள் சிலிர்ப்பதென்பது குளிராகவோ, சந்தோசமாகவோ இருக்க வேண்டும். எதனால் என்பதுதான் பிடிபடாமல் நழுவுகின்றது. சந்தோசத்தாலாக இருக்காது.

பாசிபடிந்த உடுப்பை பார்க்க சந்தோசமென்பது எள்ளளவும் கிடைக்காது. அப்போது எப்படி மயிர்குத்திடும். தமிழனாய் பிறக்கும் போதே நிர்ணயிக்கப்பட்ட விதிகளாக இவையெல்லாம் மாறிப்போன போது, தமிழனெல்லாம் புலியாகி வாலை சுருட்டி வைத்திருப்பது போல தட்டிப்பார்ப்பதும், நகங்கள் முளைத்து மடக்கி கிடப்பதை பார்க்க நிமிட்டுவதும், பெண்புலிக்கு முலையை தொட வயிற்றைத் தடவுவதும் நினைக்க சிரிப்பாய் வரும். நல்லவனாய் நடித்து முகமூடி போட்டு ஏமாற்றித் திரியும் மனிதர்கள் போலவும் எனது சிரிப்பை பார்த்து கேலி என்பதை மறந்து சந்தோசமாயிருக்குமென மயிர் நினைத் திருக்கலாம். விலாங்கு வாலைப் பார்த்து மீன் என ஏமாந்திருக்கலாம்.

சில வேளைகளில் இப்படியா இருந்திருக்கலாம். நெருப்புப்பொறி கக்கும் ஆயுதமும், தோட்டா நிரம்பிய மகசின் பெட்டியையோ அல்லது நீண்ட பட்டியலில் திணிக்கப்பட்ட சன்னங்களையும், இடுப்பில் கிடக்கும் கிரனைற்றுக்களையும் பார்க்கும் போது குளிர்ச்சி என்பது நெருக்கிக்கூட இருக்காது.

இவைகளெல்லாம் என்ன நொண்டிக்கார ஹனிபா காக்கா பீப்பி அடிச்சி விக்கிற ஐஸ்பழமாக இருந்திருந்தால் எதிர்பார்த் திருக்கலாம். உயிர் போக்கிகளான குண்டுகளையும், AKக்களையும் காணும்போதெல்லாம் ஆத்திரத்தாலோ, பயத்தாலோ உடல் வெப்பமேறித்தான் போகும். யூரியா கையில் பட்டு குளிர்வது போல உள்ளம் வெப்பத்தில் குமுற அகவெப்பத்தாக்கமாக வெயில் குளிர்ந்து மயிர்கள் சிலிர்த்திருக்கலாம். இப்படித்தான் வெளியில் இருப்பவைதான் எல்லோர்க்கும் தேவை. வெளியே குளிர்ச்சியும் உள்ளே குமுறலும் தானே இயற்கையின் நியதியாய்ப் போனது. இப்போதைய பயணங்களில் இது மாதிரியே அர்த்தப்படுத்த முடியாமலேயே மயிர்கள் குத்திடுகின்றது. தரைமட்டமாகவோ மலைவழியாகவோ எல்லாப் பாதைகளிலும் இப்படித்தானிருக்கிறது.

பிரயாணமென்பது நர்கவதையானாலும் தலைநகருக்கு வருவதும் இருப்பதும் என்பது உண்மையில் தலைநகருகின்ற மாநகரமாகவே உணரமுடிகின்றது. தடைப்பட்டது மொழி மட்டுமல்லாமல் பொட்டு, பூ என்று மீசை வரை தொடர்கிறது. அதோடு கறுப்பென்பதே அசம்பாவிதம்தான். தமிழனெல்லாம் கறுப்பாகவும், கறுப்பான தமிழனெல்லாம் புலியாகவும், புலிகளெல்லாம் கறுப்பாகவும் அடையாளப்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது.

இதனாலேயே பல பேர் அமெரிக்காவையோ, கனடாவையோ நினைத்து தலைக்கு கலரடிப் பதும் முடியாவிட்டால் மொட்டையடிப்பதும் நிகழ வேண்டியுள்ளது. தலையும் தோலும் வெள்ளையாக, கலராக ஆனால் கறுப்பாக



இல்லாமல் போனாலும் பயணமும், எங்கோ தொலைவிலிருந்து வரப்போகும் எதிர்காலமும் இருட்டி கறுப்பாக தெரிகிறது. வாக்குகளுக்கு வாங்கி வந்த விளக்கும் ஒளி இல்லத்துப் போய் கறுப்பைத்தான் பீச்சியடிக்கிறது. அதுவும் சில கணங்களுக்கு வெள்ளையாய்த் தெரிந்தாலும் மறுகணம் கடும்பச்சை, காக்கி, கறுப்பு என பூதாகரமாக தெரிகிறது. கழுத்தை திருகுகிறது கால் கை உதறியடித்துக்கொண்டாலும் முழி பிதுங்குகின்றது. நாக்கு தள்ளுகின்றது. இன்னமும் இன்னமும் கழுத்து நெரிபட்டே குரல்வளை உடைகிறது. இப்படியே பயணங்களும், நரகங்களும் தொடர்கிறது...

www.tamilarangam.net



# தற்போது அனுபவிக்கும் சுதந்திரங்கள் ஜனாதிபதியினாலேயே கிடைத்தன!

-அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க -

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பீ. திசாநாயக்க 01.06.1997ம் திகதிய ''யுக்திய'' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகளின் தமிழாக்கமே இது

தமிழில்: ரத்னா

**வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை குறைப்பது, நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியம் என ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். நீங்கள் அதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

ஜனாதிபதி அவ்வாறு குறிப்பிட்டார் என்பது உண்மை தான். வரவு செலவு பற்றாக்குறையை குறைப்பது நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் என்பது, பொருளியல் பற்றி ஆரம்ப கல்வி கற்பவர்கள் கூட அறிந்திருப்பர். அதற்காக எமது அரசு, வருமானத்தை உயர்த்த வேண்டிய நடவடிக்கைகள், உற்பத்தியை உயர்த்த வேண்டிய நடவடிக்கைகள் என்பன அனைத்தையும் எடுத்துள்ளது. அது தொடர்பாக கடந்த 17 வருடங்களாக அரச சேவையில் இடம் பெற்ற செலவுகளை குறைப்பது, யுத்தத்தை அரசியல் ரீதியாகவும், யுத்த ரீதியாகவும் முடிவுக்கு கொண்டு வருவது என்பனவும் இதில் உள்ளடங்கும்.

**வரவு செலவு பற்றாக்குறையை குறைக்க இவ்வரசுக்கு மாற்று வழி இல்லையென வாசுதேவ அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி உங்கள் கருத்து?**

வாசுதேவ அவர்களுக்கு வாசிக்கும் பழக்கம் இல்லை. அதுதான் இங்கிருக்கும் நோய்.

**அபிவிருத்தி அடைந்த அனைத்து நாடுகளும் சர்வாதிகார நடைமுறையின் கீழேயே அபிவிருத்தி அடைந்தன என ஜனாதிபதி கூறியது தொடர்பாக உங்களது அபிப்பிராயம் யாது?**

இது நியாயம் அல்லாத விடயம். சிலருக்கு சில உண்மைகளைப் பேசும் பொழுது விருப்பம் இருக்காது. நாடுகள் சிலவற்றை உதாரணத்துக்கு எடுத்தால் அது சர்வாதிகாரப் பேச்சாகுமா? இன்று இந்நாட்டில் இருக்கும் அனைத்து சுதந்திரங்களும் ஜனாதிபதியினாலேயே கிடைத்தன. கடந்த காலங்களில் வாசுதேவ அவர்கள் இவ்வாறு எழுதியிருந்தால் என்ன நடக்கும்?

**அவ்வாறான நாடுகளில் 'ஒரு பத்திரிகையே' இருந்தன என ஜனாதிபதி குறிப்பிட்டது பத்திரிகை தடையை மறைமுகமாக சுட்டிக் காட்டவா?**

இன்று பத்திரிகைகளுக்கு சுதந்திரமாக தமது கருத்துக்களை இடம்பெறச் செய்ய ஜனாதிபதியே உதவியுள்ளார். ஐ.தே.க. காலத்தில் 'யுக்திய', 'ராவய' போன்ற பத்திரிகைகள் சவால்களுக்கு மத்தியில் உண்மைகளை வெளியிட்டாலும், மற்ற பத்திரிகைகளின் சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. தொடர்பூடக அடக்கு முறை எவ்வாறோ நிலவி வந்தது. அன்று லஞ்சம் வழங்கப்பட்டது. அவ்வாறில்லையெனின், கொலை. பாருங்கள், ஐ.தே.க வுடன் சேர்ந்து பிரசுரிக்கும் பத்திரிகைகளில் இருக்கும் தூஷனங்களை மோசமான சொற்களை. இவற்றுக்கு பதில் சொன்னால் அது குற்றமா? ஜனாதிபதி தமக்கு எதிரான விடயங்களுக்கு பதில் கூறத்தான் வேண்டும்.

**உங்களது அரசின் கீழும் பத்திரிகைகளுக்கு பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டனதானே?**



அவமானம் இழைக்கப்படும் பொழுதும், தவறாகக் கூறப்படும் பொழுதும், மக்களை கோபம் கொள்ள வைக்கும் பொழுதும், இவற்றுக்கெதிராக வழக்கு தொடுப்பது தவறா? அரசாங்கம் எவரையும் கொன்றுள்ளதா? பயமுறுத்தல்கள் உள்ளன எனக் கூறுவது ஐ.தே.க. அல்லவா?

**கடந்த காலங்களில் பொலிஸ், இராணுவ சேவைகளில் துஷ்பிரயோகங்கள், ஊழல்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் போதுமானது என எண்ணுகின்றீர்களா?**

பல கொலைகளை செய்து விட்டு சொத்தி உபாலி இப்பொழுது வெளியே இருக்கின்றார். நம் நாட்டில் இருக்கும் சட்ட திட்டங்கள் காரணமாக அவர் சுதந்திரமாக உலாவுகின்றார். சிறிசேன குரே தன்னைக் கைது செய்யாதது ஏன் எனக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

நாட்டின் ஜனநாயக சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு செய்ய முடியாது. குற்றமிழைத்தவர்களை சுட்டுத்தள்ளுவது எனக்கு உடன்பாடான விடயமே. எனினும் நாட்டில் சட்டம் என்று ஒரு விடயம் உள்ளது. அதன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனக்கு அவ்வாறான ஜனநாயகத்தில் விருப்பமில்லை. எனினும், ஜனாதிபதி ஜனநாயக ரீதியிலேயே செயற்படுகின்றார். புஞ்சி நிலமே நாலந்தாவைக் கொன்றார் என்ற காரணத்துக்காக அவரை சுட முடியுமா? நாட்டின் சட்ட அமைப்பின் பிரகாரம் அவரும் வெளியே சுதந்திரமாக உலவுகின்றார்.

**ஆட்சிக்கு வருமுன் அவ்வாறானவர்களை தூக்கிலிட வேண்டும் என நீங்கள் குறிப்பிட்டீர்கள் தானே?**

இந்தச் சட்டம் அவ்வாறானவற்றுக்கு எதிராக அல்லவா உள்ளது. குற்றமிழைத்தவர்களுக்கும் இழைப்பவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும். யதார்த்த நிலைமையின் கீழ் தான் நாம் செயற்பட முடியும்.

**இவ்வாறு குற்றமிழைத்தவர்களுக்கு பதவி உயர்வுகளும், மற்றும் சில சலுகைகளும் வழங்கப்படுவது தொடர்பாக...?**

சலுகைகள் பற்றி எனக்குத் தெரியாது? எனினும் நிலவும் நடைமுறையின் கீழ் அவர்களது குற்றம் நிரூபிக்கப்படும் வரை பதவி உயர்வுகள் அவர்களுக்கு உரித்தானதே. அவ்வாறில்லையாயின். மனித உரிமை மீறப்பட்டது என நீதிமன்றம் செல்ல வேண்டி வரும்.

**உற்பத்தியாளர்களை இடைத் தரகர்களிடமிருந்து காப்பாற்ற அரசு முயற்சி செய்யவில்லையென வாசுதேவ அவர்கள் குறிப்பிடுகின்றாரே?**

இது சிறுபிள்ளைத்தனமான வாதம். சந்தை நிலை தொடர்பான விளக்கமில்லாதவர்கள் இவ்வாறான தர்க்கத்தையே முன்வைப்பார்கள். உலகத்தில் இடைத்தரகு சேவையை அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந் நிறுவனம் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளது. அதற்குச் சிறந்த உதாரணம். நெல் சந்தைப்படுத்தும் சபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம். இவை திருட்டின் உச்சத்தை அடைந்து விட்டன. இடைத்தரகு சேவையில் அரசு ஈடுபடுமாயின் திருட்டு அதிகரிக்கும். தரகு சேவை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்கிடையில் போட்டியை ஏற்படுத்த வேண்டும். அதற்காகத்தான் நமது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**தெரிந்தவர்களுக்கும், உறவினர்களுக்கும், தொழில் வாய்ப்பு வழங்குவதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

எமக்காகத் தியாகம் செய்தவர்களுக்கு நாம் வாய்ப்பு வழங்கவே வேண்டும். இக்குற்றச் சாட்டை முன்வைக்கும் வாசுதேவ அவர்கள் கூட, அவர்களது நண்பர்களுக்கு ஆதரவாளர்களுக்கு வேலை பெற்றுக்கொடுக்க என்னிடம் 200 நியமனங்களை பெற்றுக்கொண்டார். இவை தேர்தலுக்காக செய்யப்பட்ட வேலைகள்.

**நாட்டின் இளைய சமுதாயம் ஜனநாயக நீரோட்டத்திலிருந்து விலகி மீண்டும் கிளர்ச்சியை மேற்கொண்டால்?**

எதுவித பிரச்சினையுமேயில்லை... அடக்கியே தீருவோம்.. வாசுதேவ அவர்களும் அதைத்தான் செய்வார் என நினைக்கிறேன்.

**போக்குவரத்துப் பிரச்சினை இந்நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கின்றது. இந்த பிரச்சினையைத் தீர்க்க உங்களது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைதானே?**

எனது அபிப்பிராயத்தையின் படி ஸ்ரீமணி அத்துலத் முதலி அவர்களைநீக்கவேண்டும். அவர் அரசியல் ரீதியாகவும் எங்களுக்குப் பிரச்சினைத் தருகின்றார். போக்குவரத்துக்கும் பிரச்சினைத் தருகின்றார். அவரை நீக்கினால் அப்பிரச்சினை நீங்கி விடும்.

**தொழிலாளர் சாசனம் பற்றி வாசுதேவ அவர்கள் தனது விசனத்தை தெரிவிக்கின்றார்?**

உழைப்பின்றி ஊதியம் பெறுபவர்களே அதைக் கேட்கின்றனர். தொழிலாளர்களை நீதியாகவும் உரிமைகளை பெற்றுக்கொடுத்தும் பாதுகாக்க வேண்டும். அவற்றுக்கு சாசனங்கள் தேவையில்லை. அதைவிட எமது சந்ததிகளைப் பற்றி யோசிக்க வேண்டும். தமது குழந்தைகளுக்கு அன்பு செலுத்துபவர்கள் அது பற்றி கதைக்க மாட்டார். அவற்றை வைத்துக்கொண்டு எவ்வாறு நாட்டை அபிவிருத்தியடையச் செய்வது.

**வாசுதேவ அவர்களின் குற்றச்சாட்டுக்கள் ஒன்றையேனும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?**

எவ்விதத்திலும் இல்லை. அவை அழகிய தேவதை (கனவுலக) கதைகள் மட்டுமே.

## யாழ் மக்கள்...

இப்படிப்பட்ட யுத்த நிலைமையிலும் கூட அடிப்படை உரிமைகளை பாதுகாக்கவே செய்கிறோம்.

**வடக்கிலும் அதற்கு வெளியிலும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு காரணமான இந்த அவசரகால சட்டத்தை எதிர்ப்பது பற்றி இடதுசாரி கட்சிகளுக்கிடையில் ஒரு உடன்பாடு இருந்ததாக கூறப்படுகிறதே?**

இடதுசாரிக்கட்சிகளுக்கிடையில் அவ்வாறான உடன்பாடு எதுவும் இருந்ததில்லை. ல.ச.ச.க. ஆரம்பத்தில் இச்சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் போது இடதுசாரிக்கட்சிகளுடன் மட்டுமல்ல அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சிகளுடனும் பேசாமலேயே தன்னிச்சையாக நடந்து கொண்டது.

ஏனைய பிரதேசங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது பற்றி கூறும் தமிழ் தலைவர்களால் வடகிழக்குக்கு வெளியிலும் யாழ் குடாநாட்டிலும் தமிழ் மக்கள் முதற்தடவையாக உரிமைகளை, அனுபவிப்பது பற்றி ஏன் கதைப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரம் பற்றி தமிழ் தலைவர்கள் ஏன் கதைப்பதில்லை. அவர்கள் இன்று புலிகளுக்கு எதிராக சுதந்திரமாக கருத்து தெரிவிக்க முடிந்துள்ளது அல்லவா? நாங்கள் புலிகளை அடக்கியபடியாலல்லவா அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்க கிடைத்திருக்கிறது.

**யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டுக்கு வந்ததன் பின் கைதுகள், ஆட்கடத்தல், காணாமல் போவது பாலியல் வல்லுறவு என்பன போன்ற சம்பவங்கள் நடந்துகொண்டல்லவா இருக்கின்றன?**

புலிகளின் ஆட்சியிலிருந்ததை விடவா?

**அப்படியென்றால் அதைவிட கூடவில்லை என்பதா உங்கள் பதில்?**

இல்லை, நான் கேட்கிறேன் குறைந்துள்ளதா, கூடியுள்ளதா? புலிகளின் காலத்தில் காணாமல் போவது நடந்தது. இன்று காணாமல்போவது கிடையாது. சில வேளை ஒன்று இரண்டு இருக்கக்கூடும்.

**இல்லை, 300க்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

300 அல்ல அதற்கு மேலும் சும்மா போலி தகவல்கள் எதனையும் காட்டிவிடலாம். புலிகளின் கீழ் எவ்வளவு நடந்தது. அன்று புலிகளுக்கு எதிராக கருத்து கூறுபவர்கள் காணாமல் போனார்கள். இன்று படையினருக்கு எதிராக கருத்து தெரிவித்தால் காணாமல் போவதில்லை. இன்று நீங்கள் கூறும் தரவுகளை உங்களுக்கு அனுப்புபவர்களும் காணாமல் போவதில்லை. சில சந்தேக நபர்கள் கைதோ, அல்லது காணாமல்போகவோ கூடும். இன்று அரக்கு எதிராக கருத்துக்களை தாங்கிய பத்திரிகைகள் அங்கு வெளியாகின்றன. அந்த தமிழ் பத்திரிகைகள் அரசாங்கத்தையும், படையினரையும் விமர்சிக்க முடிகிறது. நீங்களே ஏதோ நாங்கள் மிலேச்சத்தனமாக, வெறிபிடித்த ஆட்சியை யாழ்ப்பாணத்தில் செலுத்திவருவதாகவே நினைக்கிறீர்கள். புலிகள் செய்தால் ஒன்றும் சொல்லமாட்டீர்கள். எங்களால் சிறு பிழை நேர்ந்தாலும் அதனை பூதாகரப்படுத்தி விடுகிறீர்கள்.

**10 வருடங்களுக்கு முன் தமது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்த தமிழ் இயக்கங்கள் தம்மால் இந்த வழிமுறைக் கூடாக எதையும் சாதிக்க முடியவில்லை என ஆதங்கப்படுவது குறித்து என்ன கூறுகிறீர்கள்?**

94 தேர்தலிலிருந்து பாடம் படிக்க வேண்டும். ஐ.தே.க.வை அமைதி வழிமுறைக்கூடாக தோற்கடிக்கலாமென ஆரம்பத்தில் நம்பவில்லை. ஆனால் பொ.ஐ.மு. தேர்தலின் மூலம் ஐ.தே.கவை தோற்கடித்தது. புலிகளை அப்படியொரு அமைதியான வழிமுறையில் தோற்கடிக்க முடியாது. ஆயுத வழிமுறையே அதற்கு பொருந்தும். தமிழ் கட்சிகள் சில வேலை, சமாதானமாக இதனை தீர்க்க முடியுமா என எண்ணக்கூடும். ஆனால் முடியும். அதற்கு தமிழ் மக்கள் புலிகளை நிராகரிக்க வேண்டும். புலிகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும். அப்போதுதான் சர்வதேச ரீதியில் அவர்களின் ஆதரவை இல்லாமல் செய்ய முடியும்.

**அண்மையில் பறையனாலங்குளம் எனும் பிரதேசம் 'சப்புமல்புர' என மாற்றப்பட்டமை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

சரித்திரத்தில் சிங்களபெயர் தமிழாகவும் தமிழ்பெயர் சிங்களமாகவும் மாற்றப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு. இவை சில அதிகாரிகளாலோ, செயலாளர்களாலே, அமைச்சர்கள் போன்ற தனிநபர்களாலோ செய்யப்பட்டிருக்கக்கூடும். அவை வரலாற்றில் திருத்தப்படும். பறையனாலங்குளம் பெயரை பொறுத்தவரை நாங்கள் தீர்மானமாக ஏற்றுக்கொண்டு வர்த்தமானியில் அறிவித்து செய்த ஒன்றல்ல யாராவது இதனை செய்திருக்கலாம். பெரிதுபடுத்த ஒன்றுமில்லை.

**இந்த முயற்சிக்கு எதிராக நீங்கள் எதுவும் செய்ததுண்டா?**

இதனை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளவில்லை. எவராவது ஒரு போர்டை கொண்டுபோய் போட்டதற்கு நாங்கள் பலியில்லை. சில அதிகாரிகள் எவராவது செய்திருக்கக்கூடும். அதை கவனத்திற் கொள்ளத்தேவையில்லை.

**உத்தியோகபூர்வமற்ற ரீதியில் ஒரு அதிகாரி அப்படி செய்தால் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லையா?**

அவர்கள் தமது அதிகாரத்தை பாவித்து அதை செய்திருக்கமாட்டார்கள்

**நான் அதை கேட்கவில்லை. பறையனாலங்குளம் எனும் பிரதேசம் படையினரால் கைப்பற்றப்பட்டு அந்த பிரதேசத்தில் பொலிஸ் நிலையமும் அமைத்து அது பிரதி பாதுகாப்பு அமைச்சரால் திறக்கப்பட்டுமுள்ளது அதற்கு என்ன கூறுகிறீர்கள்?**

அதனை அரசு ஏற்றுக்கொள்ளவில்லையே இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொண்ட பெயரல்ல அது.

**அங்கு வாழும் மக்களை, இந்த பெயர் மாற்றம் பீதி கொள்ள செய்திருக்கிறதே.**

பயப்பட எதுவுமில்லை. நீங்கள் தான் தமிழ் மக்களை பயங்காட்டுகிறீர்கள். அதைவிட தமிழ் மக்கள் பயப்பட்ட காலமும் இருந்தது. அதனை இல்லாமல் செய்துள்ளோம்.

**திருகோணமலை மாவட்டத்தில் இரவு நேர மீன்பிடி தடை விதிக்கப்பட்டிருப்பது பெருமளவு மீனவர்களின் ஜீவனோபாயத்தை பாதித்துள்ளது. இதற்கென்ன வழி?**

திருகோணமலை மட்டுமல்ல கொழும்பு துறைமுகத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இவை செய்யப்பட்டுள்ளது. மீனவர்களையும் ஏனையவர்களையும் பாதிக்கச் செய்துள்ளது. தான் ஆனால் நாங்கள் அவர்களை கடற்புலிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது.

**பாதிக்கப்படும் மீனவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு செய்துள்ளீர்கள்?**

நட்டஈடுகள், நிவாரணங்கள் என்பன பல இடங்களில் கொடுத்துள்ளோம்.

**நிவாரணம் தற்காலிகமானதா...?**

யுத்தம் நடைபெறும்வரை அது தற்காலிகம் தான்.

**அது வரை அந்த நிவாரணம் கிடைக்குமா?**

முடிந்தளவு வழங்க முயற்சிப்போம்.

**தென்கிழக்கு முஸ்லிம் மக்களுக்கான தனி நிர்வாக அலகு கோரிக்கை குறித்து...**

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் வாழ்கிறார்கள். அவர்கள் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தவர்களாக உள்ளனர். முஸ்லிம்கள் அவர்களது தனித்துவத்தை பாதுகாக்கக்கூடிய தனியான போக்கு உள்ளது. தமிழ் அலகுக்குள் முஸ்லிம்களையும் இணைக்கக் கூடிய உறுதிப்படும் ஒரு அலகே எதிர்காலத்தில் தேவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சித்த ஆயுள்வேதம்: வெறும் சுண்டைக்காய் மருத்துவம் அல்ல!

மருத்துவ வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானால், ஆரம்பத்தில் சகல மருத்துவ முறைகளும் சமயங்களுடனும், சமயசடங்குகளுடனும் பின்னிப்பிணைந்தே வந்துள்ளன. கால ஓட்டத்தில் அவை ப்டிப் படியாக சமயங்களில் இருந்து விடுபட்டு வளரலாயின. இதற்கு சித்த - ஆயுர்வேத மருத்துவம் மாத்திரம் விதிவிலக்கல்ல. ஆரம்ப வேத இலக்கியங்களைப் பார்க்கும் போது இது தெளிவாகப் புரியும். சித்த - ஆயுர்வேதமும்படிப்படியாக வளர்ந்து வந்து பின் ஆயுர்வேதம் தனி ஒரு வேதமாக வளர்ந்து விட்டதை காணமுடியும்.

சித்த - ஆயுர்வேதம் பற்றி வரும் போது சமயத்தத்துவங்களுடன் பின்னிப்பிணைந்ததாகவும், குருகுல மரபுக்கூடாக வளர்ந்து வந்ததாகவும் உள்ளது எனக்கூறி அதனை ஒரு கற்கை நெறியாக வளர்ப்பது கடினம். என்ற கேள்வியும் பதிலும் முரண்பாடாக உள்ளது. இது நேர்காணலின் விடயம் - விளக்கம் - பற்றிய வறுமையையும், இன்றைய வளர்ந்து வரும் சித்த - ஆயுர்வேதம் பற்றிய தெளிவின்மையையும் காட்டுகின்றது என்பதைக் குறிப்பிட வேண்டும். இதற்கு எமது வருத்ததைத் தெரிவிக்க வேண்டியதுடன், சில விடயங்கள் பற்றிய உண்மையை தெளிவுபடுத்தவும் வேண்டியுள்ளது.

ஆயுர்வேதம் எனும் போது அது எட்டு உட்பிரிவுகளை உடையது. முழுமையான ஆயுர்வேதம் மூன்று பிரிவுகளை உடையது. இதில் மூன்றாவது சிகிச்சை முறை இருவகைப் படும். ஒன்று உடற்சிகிச்சை முறை. இது பரத்துவாஜ சம்பிரதாயம். அல்லது ஆத்திரேய சம்பிரதாயம் எனப்படும். இரண்டாவது அறுவைச்சிகிச்சை முறையாகும். இது தனவந்திரி சம்பிரதாயம் அல்லது சுச்ருத சம்பிரதாயம் என அழைக்கப்படும்.

எனவே ஆயுர்வேத மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சை முறையென்பது புதியது அல்ல; அது முன்பே வளர்த்து எடுக்கப்பட்டுள்ளது. தொல்லியலில் அதற்கான ஆயுதங்கள் இன்னும் உள்ளன. அறுவைச் சிகிச்சைக்கு இன்றும் சுச்ருதசம்ஹிதை சாட்சியாக உள்ளது. காலப்போக்கில் வெட்டுதல், அறுத்தல், தைத்தல் என்பன ஒரு பாப காரியமாகவும், ஒரு வித தீட்டுவிடயமாகவும் பார்ப்பனரால் வளர்க்கப்பட்டுவிட்டது. இன்னுமொரு காரணம் புத்தரின் உயிர் வதைத்தலுக்கு எதிரான போதனையும் ஆகும். இப்படியான போக்குகளால் அறுவை மருத்துவம் ஒரு கௌரவக்குறைவானதாக கருதப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அன்று சமூகத்தின் பின் தங்கியவர்களிடம் தஞ்சம் புகுந்து விட்டது. அதாவது நேர்காணலில் கூறிய படி ஆரம்பத்தில் நாவிதர்களே செய்தார்கள் என்று இல்லாமல், இடையில் தான் நாவிதர்களின் கைகளுக்கு மாற்றப் பட்டது. இந்த விபத்து சித்த - ஆயுர்வேதத்துக்கு மாத்திரம் ஏற்ப _வில்லை! அலோபதி என்ற ஆங்கில வைத்தியத்திலும் ஆரம்பத்தில் அறுவை சிகிச்சை முறை இறைச்சிக்கடைக்காரனுக்குரியது என்று கௌரவக்குறைவாக மதிக்கப்பட்டுள்ளது என்பதை வரலாறு கூறும். பின் மருத்துவ மறுமலர்ச்சியுடன் ஐரோப்பாவில் அறுவைச்சிகிச்சை முறை மறுபிறவி எடுத்து இன்று ஒரு முன்னேற்றம் அடைந்த மருத்துவ முறையாக விளங்குகின்றது. அந்த மறுமலர்ச்சி சித்த - ஆயுர்வேதத்துக்கு ஏற்பட வில்லையே ஒழிய ஆயுர்வேதத்தில் அறுவைச்சிகிச்சை முறை இல்லாமல் இருக்கவில்லை. இனறைய பிளாஸ்ரிக் அறுவைச்சிகிச்சைக்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் திகழ்ந்தவர் சுச்ருதர் என்றால் அதில் வியப்படையத் தேவையில்லை. எதையும் ஐரோப்பியர் சொன்னால் தான் நம்பவேணும் என்ற பிடிவாதம் நல்லதல்ல.

இன்னுமொரு விடயம் சித்த - ஆயுர்வேதம்; பரம்பரை ரீதியான மரபுக்கூடாக அல்லது குருகுல மரபுக்கூடாக வளர்ந்து வந்தது என்பது ஆகும். இது ஒரு பிழையான வாதம் ஆகும். குருகுலம் எனும் போது, அன்றைய குருகுலக் கல்விக்கும் இன்றைய குருகுலக் கல்விக்கும் வித்தியாசம் உள்ளது. இன்னுமொரு முக்கிய விடயம், சித்த - ஆயுர்வேதம் என்பது குறுகிய நோக்கம் கொண்ட மருத்துவமாக உருவாக்கப்படவில்லை.

இன்றளவும் இனியும் அது நின்று பிடிக்கின்றது என்றால், அது முழு மனித குல நன்மைக்காக உருவாக்கப்பட்ட வாழ்முறையாகும். இது பரம்பரையையும் மீறினது ஆகும். புராதன இந்தியாவின் பல்கலைக் கழகங்கள் ஆன தக்ஷசீலா, நாளந்தா, காசி போன்ற உன்னத இடங்களில் ஆயுர்வேதம் ஒரு கற்கை நெறியாக கற்பிக்கப்பட்டு, வளர்த்து எடுக்கப்பட்ட உலகின் பழமையான மருத்துவமாகும். இதனை கற்பதற்காக பல பாகங்களில் இருந்தும் பல்வேறு பட்ட மாணவர்களும் அன்றைய இந்தியாவின் உன்னத பல்கலைக்கழகங்களுக்கு வந்து போய் உள்ளனர். அவர்கள் கற்பதற்கான ஒரு ஒழுங்கு வாய்ந்த கற்கை நெறியாக அன்றே ஆயுர்வேதம் திகழ்ந்து உள்ளது.

இடையில் ஏற்பட்ட அந்நிய ஆதிக்கம் மற்றும் காலதேச மாற்றங்களுக்கு ஒப்ப ஆயுர்வேதம் தேக்கமடைந்து விட்டது அவ்வளவு தான். இதனை நாம் சீன மருத்துவத்தின் தேக்கம் மற்றும் வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் விளங்க முடியும். உண்மையில் சீன மருத்துவத்துக்கும் சித்த - ஆயுர் வேதத்திற்கும் ஒற்றுமை உண்டு. சீன மருத்துவத்தை வளர்த்தெடுப்பதற்கு அங்கு ஒரு அரசியல் மறுமலர்ச்சியும் தேசப்பற்றுமிக்க தலைமைத்துவமும் ஏற்பட்டது முக்கிய காரணமாகும். எமக்கோ மேலைத் தேய கொள்கைகளை பிரதிபண்ணும் மேலைத்தேய அடிமை மனப் பான்மையோர் வந்து மாண்டதின் பலன் நமது தேசமோ, நமது கலாசார பண்பாட்டு விஞ்ஞான நெறிமுறைகளோ வளர்ச்சியடைய முடியவில்லை. இதனை ஒரு கவிஞன் அழகாக கூறியுள்ளான். ''இரவில் வாங்கினோம். இன்னும் விடியவில்லை'' என்று. இன்னுமொரு கேவலம் என்னவென்றால், இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி சித்த - ஆயுர்வேதம் தேசிய மருத்துவக்கொள்கைகளாக அங்கீகரிக்கப்படவில்லை என்ற வேதனை ஆகும்!

என்றாலும், ''நெல்லுக்கிறைத்த நீர்வாய்க்கால் வழிஓடி அங்கே புல்லுக்கும் பொசிந்ததாம்'' என்பது போல் ஏதோ சித்த - ஆயுர்வேதமும் உயிர்பெற்று வாடி நிற்கின்றது. இந்தியாவில் சில தனிப்பட்ட நிறுவனங்களாலும், தனி முயற்சிகளாலும் சித்த - ஆயுர்வேதம் வளர்த்து எடுக்கப்படுகிது. பல்கலைக்கழகங்களில் சித்த ஆயுர்வேதம் ஒழுங்கு திரட்டிய ஒரு கற்கை நெறியாக வளர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவின் காசி இந்து பல்கலைக்கழகம், ஜம்னாகர் ஆயுர்வேத பல்கலைக் கழகம் மற்றும் தமிழ் நாட்டின் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்துடன் இணைந்த பாளையம் கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி என்பன திறம் பட சித்த - ஆயுர் வேதத்தை வளர்த்து வருவதை குறிப்பிட வேண்டும். மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு இலங்கை பட்டதாரி சித்த - ஆயுர்வேத மருத்துவர்கள் பட்டப்பின் படிப்புக்காக சென்று வருகின்றனர் என்பதும் முக்கியமாகும்.

இலங்கையிலும் சித்த - ஆயுர்வேத வைத்தியர்களின் இடையிறாத போராட்டத்தினாலும், ஊக்கத்தினாலும் அரசு வேண்டாவெறுப்பாக 1977ம் ஆண்டு சித்த - ஆயுர்வேத - யூனானி மருத்துவங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் ராஜகிரியா சுதேச மருத்துவ நிறுவனத்தின் கற்கை நெறிகளாக தொடக்கி வைத்தது. இப்போராட்டத்தில் நானும் ஒரு அங்கமாக செயற்பட்டதினால் பல விடயங்களை அறிய முடிந்தது. இதற்கு அன்றைய கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களும் பெரிதும் முன்னின்று உழைத்தது மறக்க முடியாதது ஆகும். பிற்பாடு 1983ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் பிற்பாடு சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது - என்பதையும் குறிப்பிடவேண்டும். இந்த வரலாறுகளை சித்த - ஆயுர்வேத - யூனானி மருத்துவர்கள் தெரிந்திருக்க வேண்டும். மற்றது மேற்படி பல்கலைக்கழகங்களில் சித்த - யூனானி - ஆயுர்வேத மருத்துவங்கள் கற்பிக்கப்படுவதுடன் மருத்துவத்தின்நவீன வளர்ச்சிகளை அறிய வேண்டும் என்பதற்காக அலோபதி எனும் ஆங்கில மருத்துவத்தின் கூறுகள் கற்பிக்கப்படுவது குறைபாடு அல்ல, அது நவீன அறிவின் நிறைவுக்கே என்பதை உணர வேண்டும். இன்றைய அறிவியல் வளர்ச்சிகளையும், தொழில் நுட்பங்களையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. என்றும் நாம் கிணற்றுத் தவளைகாளகவும் இருக்க முடியாது. வெளி உலகின் வெளிச்சங்களை உள்வாங்கி பிரகாசமாக வெளிப்படுத்த வேண்டியது எமது கடன் ஆகும்!

மருத்துவர்கள் மருந்துகளை சிபாரிசு செய்யும் போது ஏற்படும் சிக்கல்களில் ஒன்றுதான் ஆயுர்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளையும் பரிந்துரை செய்வது ஆகும். இது ஒரு விவாதத்துக்கும், ஆய்வுக்கும் உரிய விடயமாகும். மற்றும் பணிப்பாளர் கூறியது போல் பட்டம் பெற்ற சித்த - ஆயுர்வேத வைத்தியர்கள் மட்டும் இதனை செய்வதில்லை. பரம்பரை வைத்தியர்களும் இதனை செய்கின்றனர். அதுவும் மோசடியாக ஆங்கில மருந்து என தெரியாதவாறு இருக்க குளிசைகளை மாவாக்கி மற்றும் சரக்குகளுடன் கலந்து ஆஸ்துமா மருந்து, நீரிழிவு மருந்து என கொடுத்து விடுகின்றனர்!

நான் நேரிடையாக கண்ட ஒரு உண்மைச் சம்பவம் புகழ் பெற்ற சில்லாலை வழிவந்த பரம்பரை வைத்தியர் ஒருவரே இப்படிச் செய்துள்ளதுதான் வேதனை தரும் சம்பவமாகும்! ஆகவே, இது ஒரு வழியல்ல. இருவழியிலும் நடக்கின்றது. இன்னுமொரு விடயம் இந்தியாவில் சில அலோபதி ஆங்கில மருத்துவர்களே ஆயுர் வேத, ஹோமியோபதி மருந்துகளை சிபாரிசு செய்கின்றனர்!

இதற்கு என்ன கூறலாம்? ஆகவே இதில் இரு விதமான கருத்துக்கள் உண்டு. இதில் விட்டுக்கொடுத்து எடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்பது உடன் ஆராய்வுக்குமுடையது ஆகும்.

முடிவாக நாம் தொகுத்து நோக்கின், சித்த - ஆயுர்வேதம் எனும் போது அது மிகப்பெரிய உலகின் பழமையான மருத்துவ முறை என்பதுடன் வாழ்வியல் நெறிமுறையும் ஆகும். சிலர் நினைப்பது போல் அது விஞ்ஞான பூர்வமற்ற ஒரு நெறிமுறை அல்ல. இப்படித்தான் அன்று சீனாவில் சீன மருத்துவத்தை விஞ்ஞான பூர்வமற்றது என அந்நிய சக்திகள் தடைசெய்த ர்கள். ஆனால், இன்று சீன மருத்துவம் தலைநிமிர்ந்து நிற்கின்றது. அவர்கள் போல் எமக்கும் எமது கலாசார பண்பாட்டு விஞ்ஞான் அம்சங்களில் பற்று வேண்டும். மேலைத்தேய கொள்கைகளில் கண்மூடி பற்றுக்கொண்டு, மூளைச் சலவை செய்யப்பட்டவர்களால் இங்கு வந்து வாந்தி எடுப்பதால் பயன் ஒன்றும் விளையப்போவது இல்லை. நாம் எமது சொந்தக் காலில் நின்று எமது கலாசார பண்பாட்டு விஞ்ஞான நெறி முறைகளை நோக்க வேண்டும். அப்போது எதிலும் நாம் வளர்ச்சி பெறலாம்.

இ. தர்மராஜா

## சாதிப்பெயர்!

"காட்டு மரங்களிலே கள்ளர் மரம் ஐயர் மரம் தோட்டி மரம் உண்டோ தோழா என்று ஒரு முறை கவிஞர் காசி ஆனந்தன் எழுதினாரே ஞாபகம் இருக்கிறதா" என்று கேட்டார் ஒருவர்.

"வேரோடு பலாக்கனிகள் பழுத்துத் தூங்கும்; வெள்ளாடு வந்தங்கே முதுகுரோஞ்சும் என்று இந்தியாவில் இருக்கும் போது தமிழீழம் பற்றி கனவு கண்டு எழுதினாரே அதைச் சொல்லுகிறாயா" என்று கேட்டார் மற்றவர்.

"அதே தான்.... அதே தான் பரவாயில்லையே உனக்கும் கூட ஞாபகம் இருக்கிறது" என்று சிலாகித்தார் மற்றவர்.

"எனது ஞாபக சக்தி பற்றிய உனது சிலாகிப்பு இருக்கட்டும்... இப்போது திடீரென காசி ஆனந்தனின் நினைவு உனக்கு ஏன் வந்தது" என்று கேட்டார் மற்றவர்.

"எல்லாம் காரணத்தோடு தான் காட்டு மரங்களுக்கு சாதி; சமயம் எல்லாம் கிடையாது என்ற அர்த்தத்தில் தான் அன்று அவர் பாடியிருந்தார். ஆனால் இப்போது நிலைமையைப் பார்க்கும் போது அதெல்லாம் உண்மையில்லை. அவற்றுக்கும் கூட சாதி இருக்கும் போல தோன்றுகிறது" என்றார் முதலாமவர்.

உரையாடல் சுவாரசியமாகப் போகவே நான் காது கொடுத்து கேட்டுக்கொண்டிருந்தேன். உரையாடல் தொடர்ந்தது.

"என்ன அப்படிச் சொல்லுகிறாய். மரங்களுக்காவது சாதி இருப்பதாவது?"

"இல்லாமல் என்ன... பாரேன்; பறையனாலங்குளம் பற்றி எவ்வளவு பெரிதாக அடிபடுகிறது. ஆலமரத்தில் கூட பறையன்மரம்; பள்ளன் மரம் என்று இருக்கும் போலும் நீ கேள்விப்படவில்லையா?"

"ஓ. அதுவா..."- சலித்துக்கொண்டார் மற்றவர்.

"சும்மா சலிக்காதை... உண்மையில் பறையனாலங்குளம் என்ற பெயர் மாற்றப்பட்டதை பரவலாக எதிர்க்கிற எங்கடை ஆக்கள் இந்தமாதிரி சாதிப் பெயர்களுடன் ஊர்ப் பெயர்கள் இருப்பதைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. இத்தனைக்கும் இப்பெயர்மாற்றத்தை எதிர்ப்பவர்களுள் பலர் சாதி எதிர்ப்பு பற்றி நிறைய பேசுபவர்கள்..."

மற்றவரிடம் மௌனம் நிலவியது. அவர் எதையோ சொல்ல நினைத்துவிட்டு மௌனமாகிவிட்டார்.

தற்செயலாக காதில் விழுந்த ஒரு உரையாடல் என்றாலும் கூட இந்த உரையாடலின் மூலம் ஒரு முக்கியமான செய்தி எனக்கு சொல்லப்பட்டதாக உணர்ந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் தோறும்; பண்டாரிகுளம்; வண்ணார் பண்ணை; வண்ணாங்குளம்; வண்ணாத்தி மடம்; வண்ணாத்தி பாலம்; மறவன்புலவு; தச்சன் காடு; தச்சன் தோப்பு; கன்னாதிட்டி; கன்னாரத்தெரு; ஐயங்காடு; இடைக்காடு; நாவிதன் தாழ்வு; கொல்லன்கலட்டி என்று சாதிகளோடு சம்பந்தப்பட்ட பல ஊர்ப் பெயர்களும் தெருப்பெயர்களும் நிரம்பிக் கிடக்கின்றன என்பது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

பறையனாலங்குளம் என்ற பெயர் மாற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அது ஒரு ஆக்கிரமிப்பாளர்களின்நடவடிக்கை என்பதனாலேயே அதை எதிர்த்தனர். அதில் நியாயம் இருப்பது உண்மைதான். ஆனால் இப்பெயர் தொடர்ந்து நிலைப்பதில் என்னநியாயம் இருக்கிறது? தமிழ் மக்களின் போராட்டம் இவ்வளவு தூரத்துக்கு வளர்ந்த பின்னும் இப்பெயர்கள் நிலைப்பது நியாயமா?


பறையனாலங்குளம் பெயர் மாற்றம் சிங்கள ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்றால் இவ்வாறான சாதிப்பெயர்கள் நிலைப்பதை எப்படிச் சொல்வது?

-அ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# நல்ல திரைப்படத்துக்கு உதாரணம்: "தேஸாதனம்"

வணிகப்பட நெறியாள்கையிலிருந்து, கலைமெருகுப்படங்களை உருவாக்குவதில் வளர்ச்சி பெற்றவர் மலையாள நெறியாளர் ஜெயராஜ். இவருடைய புதிய படமான தேஸாதனம் (மெய்ஞ்ஞானத்தை நோக்கி) திருவனந்தபுரம், அனைத்துலகத் திரைப்படவிழாவிலே கடந்த ஜனவரியில் காண்பிக்கப்பட்டது.

இவர் தொழிலால் ஒரு மின்மப் பொறியியலாளர். பரதன் என்ற மலையாளத் திரைப்பட நெறியாளரிடம் பயிற்சி பெற்றவர். இவருடைய முதலாவது படம் 'குடும்ப சமேதம்' கர்நாடக இசையின் மகத்துவத்தை விளக்கும் 'சொப்பனம்' மற்றும் ''பைத்ருகம்'' ஆகியன இவருக்குப் பாராட்டைக் கொடுத்த படங்கள் என்கின்றனர் மலையாளத் திரைப்பட விமர்சகர்கள்.

நெறியாளரின் பார்வையில் தேஸாதனம் என்ன கூறுகிறது?

''மெய்ப்பொருள் அல்லது மெய்ஞ்ஞானத்தைத் தேடும் ஒரு யாத்திரையைத் தான் தேஸாதனம் என்ற சொல் குறிக்கிறது. இது ஓர் இந்திய மரபு. பல சமய நாயன்மார்களும், மதபோதகர்களும் இந்த மரபைப் பின்பற்றி வந்துள்ளனர். ஆயினும், இறைவனுக்கு அல்லது மனுக்குலத்திற்குப் பணி செய்யும் பொருட்டு, குடும்ப பாசத்தைத் துறந்து வெளியேறும் பாங்கு, அக்குடும்பத்தினருக்கே பெருந்துயரும், வதையும் ஏற்படுத்தும் ஒரு கிரியை மார்க்கமாகும்.

மரபுரீதியான நம்பிக்கைகளில் ஊறித்திளைத்த குடும்பத்தினரின் திரிசங்கு சொர்க்க நிலையை எனது படம் பகுப்பாய்வு செய்கிறது. காலங்காலமாய் ஓடிச்செல்லும் ஓர் நதி நிலை. பொங்கிப்பெருகும் அந்த நதியை அண்மித்தே எனது படம் பிடிக்கப்பட்டது. ஆயினும் ஓடும்நதியை அண்டியுள்ள குக்கிராமத்தின் வாழ் நிலை உறைந்துவிட்டதைப் படம் காட்டுகிறது.''

இப்படத்தின் கதைப்போக்கு எப்படிச் செல்கிறது?

கதகளி நடன விற்பன்னர் குடும்பம். சங்கரன் வீட்டுத் தலைவன். அவன் மகன் பெயர் பச்சு. கோயில் பூசாரி. கிருஷ்ணன் சங்கரனின் நண்பர். கிருஷ்ணன் மகள் தேத்தியும், பச்சுவும் இளம்பாலகர்கள். நட்புறவு கொண்டவர்கள். பச்சு அதீத திறமை வாய்ந்த ஒரு சிறுவன். அவன் பெற்றோருக்கு அவன் இன்னமும் ஒரு 'உன்னி' (பிள்ளை) தான்.

கிராமத்திலுள்ள கடவுள்ளூர் ஆலயத்தில் ஒரு சமயப்பரீட்சை நடத்தப்படுகிறது. இளம் வயதிலேயே வேதங்களைக் கற்றுணர்ந்தவன் இந்தப் பாலகன். சமயக்குரவர்கள் பச்சுவின் அறிவுத் தீட்சண்யத்தைக் கண்டு கேட்டு வியந்து பாராட்டுகின்றனர். அவன் பெற்றோரும் பாட்டனாரும் இறும்பூதெய்துகின்றனர். இறைவனின் அனுக்கிரகமே இந்தக்கொடை எனப் பாரம்பரியத்தில் ஊறித்திளைத்த பாட்டனார் கருதுகிறார்.

கிராமத்தில் ஓர் ஆச்சிரமம். அதன் தலைவர் 'ஸ்வாமி மூப்பில்ஸ்' அவருக்கு நிறைய வயதாகிவிட்டது. ஆச்சிரமத்தின் தலைமைப் பீடத்திற்கு ஒருவரை அவர் தேடுகிறார்.

பச்சுவின் சாதகத்தைப் பார்த்தபோது அவனே தன்னைத் தொடர்ந்து பீடாதிபதியாக வேண்டுமெனச் சங்கல்பம் கொள்கிறார். பச்சுவின் பாட்டனார் ஸ்வாமியின் விருப்பை ஏற்றுக் கொண்டபோதிலும், தந்தையான சங்கரனுக்கு எந்தவித முடிவும் எடுக்க முடியவில்லை. தாய்க்கு முற்றாகவே விருப்பமில்லை. ஏனைய உறவினருக்கும் அவ்வாறே. குடும்பத்தினர் மத்தியில் பெருந்துயர்.

பாரம்பரிய பயன்மதிப்புகள் நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கும் குடும்பப் பற்றுக்காரணமாக எழும் உணர்வலைகளுக்குமிடையில் போராட்டம். இந்தத்துன்பீற்று நாடகத்தில் சம்பந்தப்படும் அனைவருமே செய்வதறியாது தத்தளிக்கின்றனர்.

இதற்கிடையில் செய்தி கேட்டு பக்தியும் மரியாதையும் காரணமாக பச்சுவின் பால்ய நண்பர்களும், ஊராரும் அவனைத் தூர நின்று தரிசிக்கத் தொடங்குகின்றனர்.

ஈற்றில் பந்த பாசத்தைவிட பக்தி சம்பந்தமான நம்பிக்கைகள் மேலெழுகின்றன. பெற்றதாயே பச்சுவை ஆஷ்ரமத்திற்கு அனுப்ப முன்வருகிறாள்.

வேண்டாவெறுப்பாக பச்சு ஆச்சிரமத்திற்குச் செல்கிறான். சமயக் கிரியைகள் தொடர்கின்றன. தம் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போதே இறந்து விட்டனர் என்று நினைக்கும்படி பச்சுவிடம் கேட்கப்படுகிறது. கிரியைகளில் ஒன்று மடிப்பிச்சைக்கேட்டல். பச்சுவும் தன் தாய் தந்தையிடம் பிச்சை கேட்கும் பொழுது, ஆச்சிரமத் தலைவர் என்ற முறையில் அவர்கள் பாத பூசைசெய்து அவன் ஆசியைப் பெறுகின்றனர்.

ஆச்சிரமத்தில் அவனுக்குக் கடும் சோதனை. சில நாட்களில் அவனுக்குப் பொறுக்க இயலாது இருக்கிறது. பச்சு தன் வீடு நோக்கி ஓடுகிறான். ஆயினும் அவன் பெற்றோர் அவனை ஏற்க மறுக்கின்றனர். சுவாமிக்கு வீடு ஏதும் இல்லை என்கிறார்கள். பச்சுவுக்கு மனக்குழப்பம். இதுவே படத்தின் கதைப் போக்கு.

இன்றைய உலோகாயத உலகில், இக்கதை நீட்டும் பரிமாணங்கள் நம்மில் பலருக்கு எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது சுவாரஸ்யமாக ஆராயவேண்டிய ஒரு கேள்வி. ஆயினும், திரைப்படம் என்ற முறையில் தேஸாதனம் என்னைப்பெரிதும் ஆட் கொண்டது.

''ஸ்ரீகுமார் அருக்குட்டி'' என்பவர் எழுதிய கதைக்குத் திரைநாடகம் எழுதியவர் மாதம்பு குஞ்சுக்குட்டன் என்பவர். இப்படத்தின் வியத்தகு அம்சங்கள்: கலைத்துவமான, அலட்டிக்கொள்ளாத அசையும் படிமங்களை உள்ளடக்கும் ஒளியமைப்பும், படப்பிடிப்பும், நாதன் கன்னூரின் கலை நிர்மாணம், மொஹன் சித்தாராவின் மயக்கும் மெல்லிசை, எல்லாவற்றிற்கும் மேலாக, இரட்டையர் பி.லெனின் வி.டி.விஜயன் ஆகியோரின் படத்தொகுப்பு வண்ணம். இத்துணை நிறைவுகளுடன் நெறியாளர் ஜெயராஜின் பங்களிப்பு, அமைதியான நதியின் நீரோட்டம் போல செல்கிறது.

விஜயராகவன், மாஸ்டர் குமார், மினி நாயர், உன்னி கிருஷ்ணன் நம்பூத்திரி ஆகியோர் நடிப்பு அடக்கமாய் வெளிப்படுத்தப்படுகிறது.

குறிப்பாக பாட்டனராக வரும் உன்னிகிருஷ்ணன் நம்பூத்திரி ஒரு யாழ்ப்பாண முதியவர் போன்றே தோற்றமும் இயக்கமும் கொண்ட ஒருவராகத் தோன்றி எம்மனதைக் கவருகிறார்.

நல்ல 'திரைப்படம்' என்பதற்கு தேஸாதனம் என்ற இந்த மலையாளப்படத்தையும் நாம் உதாரணங் காட்டலாம்.

''குறைந்த முதலீட்டின், பெரும்பாலும் இயற்கை ஒளியைப் பயன்படுத்தி, முன்பின் அறிந்திராத நடிக/நடிகையிரைக் கொண்டு நான் எடுத்த இந்தப் படம் ஜனரஞ்சக ரீதியிலும் வெற்றி பெற்றுள்ளது'' என்று ஜெயராஜ் கூறினார். ●

# 1996 இல் ஈழத்து...

12-ம

விரல்விட்டு குறிப்பிடக்கூடிய அளவே இருந்து வருகிறது. தமிழில் உலகத் தரத்திற்கு ஒப்பான நாவல்கள் வெளிவரவில்லை என பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் உரத்துச் சொல்லும் இன்றைய தமிழ் நாவல் இலக்கியச் சூழலில் 1996ம் ஆண்டு 5 நாவல்கள் வந்திருக்கின்றன - ஆனால் மூன்று எழுத்தாளர்களே நாவல் எழுதியுள்ளனர். சோ. ராமேஸ்வரன் அவர்கள் மூன்று நாவல்களை 1996இல் வெளியிட்டிருக்கிறார். மூத்த எழுத்தாளரான வ.அ. இராசரெத்தினம் கடந்த ஆண்டில் நாவல் இலக்கிய முயற்சியில் இறங்கி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தானம் சத்தியானந்தனின் **மூடுபனி**, வ.அ. இராசரத்தினத்தின் **மண்ணிற் சமைந்த மனிதர்கள்**, சோ. ராமேஸ்வரனின் **வடக்கும், தெற்கும்**, **சத்தியங்கள் சமாதியாவதில்லை**, **இன்றல்ல நாளை கல்யாணம்**, திமிலை மகாலிங்கத்தின் **அவனுக்குத் தெரியும்** என்பன அந்த ஐந்து நாவல்களாகும்.

### 3. கவிதை

ஈழத்துக் கவிதைச் சூழலில் புதியவர்களின் வரவு அதிகரித்து இருப்பது அனைவரும் அறிந்ததே. நமது கவிதை உலகுக்கு ஏலவே அறிமுகமான சோலைக்கிளி, அகளங்கன், ஜின்னாஹ், **ஜபார்,** அறபாத் தவிர்த்து இன்னும் பல புதிய முகங்கள் வெளிப்பட்டிருப்பது தெரிகிறது. 1996ம் ஆண்டில் ஒன்பது கவிதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

சோலைக்கிளியின் **பனியில் மொழி எழுதி**, அகளங்கனின் **அகளங்கன் கவிதைகள்**, எம்.எஸ்.எம் ஹமீதின் **சங்கமம்**, எம். ராமச்சந்திரனின் **தேயிலைத்தோட்ட மக்கள் பாடல்கள்**, அறபாத்தின் **எரிநெருப்பிலிருந்து** ஜின்னா ஷெரிபுத்தீனின் **புனித பூமியிலே**, இக்பால் அலியின் **முற்றத்திற்கு வாருங்கள்**, ஷாஜஹானின் **மக்கத்து மலரே**, அப்துல் கஹ்ஹாரின் **கஹ்கார் கவிதைகள்** ஜபாரின் **தரப்பட்டுள்ள அவகாசம்** என்பனவாகும்.

### 4. நாடகம்

ஈழத்து தமிழ் நாடகச் சூழலை பொறுத்தவரை ஆறு புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பாலசுகுமார் நாடகம் தொடர்பாய் கடந்த ஆண்டு இரண்டு புத்தகங்கள் வெளியிட்டிருந்தாலும் அவரது - உலக நாடக அரங்கு என்ற புத்தகம் நாடகம் என்ற பிரிவில் சேர்க்கப்படாமல் தமிழ் மொழி இலக்கியம் சார்ந்த பிற நூல்களுக்குள் அடங்குகிறது.

அருணா செல்லத்துரையின் **நந்தி உடையார்**, செல்வவேலின் **ஈரமுள்ள காவோலைகள்**, பாலசுகுமாரின் **சூர்ப்பணகை**, **இடது கை வாங்கிய இராவண தனுசு**, மொஹிடீன் ராஜாவின் **யாழூர் ராகம்**, க. செல்லத்தம்பியின் **நீறுபூத்த நெருப்பு**, ந. சுந்தரம் பிள்ளையின் **நாடகம் எழுதுவது எப்படி** என்ற ஆறு புத்தகங்களுமாகும்.

### மொழி பெயர்ப்பு இலக்கியம்

பிறமொழி இலக்கியங்களை தமிழுக்கு கொண்டு வரும் முயற்சி ஈழத்தில் மிக அரிதாகவே காணப்படுகிறது. இம்முயற்சியில் ஈழத்தைச் சேர்ந்த கே. கணேஷ், கலாநிதி எம்.ஏ.நுஃமான், ஏ ஜே. கனகரட்ன சி.வி. வேலுப்பிள்ளை இன்னும் பலர் கடந்த காலங்களில் பங்களிப்பாற்றியுள்ளனர்.

கடந்த ஆண்டில் மூன்று மொழி பெயர்ப்பு முயற்சிகள் மட்டுமே தமிழ் இலக்கியத்தில் நடந்திருக்கின்றன. பண்ணாமத்து கவிராயரால் மொழி பெயர்க்கப்பட்ட பிறமொழிக் கவிதைகள் அடங்கிய **காற்றின் மௌனம்**, கவிதைத் தொகுதி, த. கனகரத்தினத்தால் மொழி பெயர்க்கப்பட்ட **தாய்லாந்து நாட்டார் கதைகள்**, த. தர்ம குலசிங்கத்தால் மொழி பெயர்க்கப்பட்ட **தாய்** என்பனவாகும்.

### 6. தமிழ் மொழி இலக்கியம் சார்ந்த நூல்கள்

ஈழத்து தமிழ் இலக்கியப்பரப்பு இன்று விரிந்து தேடலும் ஆய்வும் நிறைந்த ஒரு அகலித்த பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எம்மவர்கள் எதைப்பற்றியும் அதிகம் ஆராய்வதில்லை, பேசுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இன்று எழுப்பப்படுவதை காண்கிறோம். எழுத்தாளர்கள் என்றபலர் தங்களை சிறுகதை, கவிதை, என்ற குறுகிய வட்டத்தினுள் மட்டும் உட்படுத்திக்கொண்டிருப்பதானது - ஒரு ஆரோக்கியமான பார்வை வழியில்லை என்பது தெளிவானது- இந்த வகையில் கடந்த ஆண்டு தேடல், ஆய்வுகளின் வழிவந்த பதினான்கு நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

பெ. முத்துலிங்கத்தின் **எழுதாத வரலாறு**, கே.எஸ் சிவகுமாரனின் **திறனாய்வுப் பார்வைகள்**, அ.ஸ. அப்துஸ் ஸமதுவின் **இஸ்லாமிய இலக்கிய நோக்கு**, கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் **நடிக மணி** வி.வி. வைரமுத்துவின் **வாழ்வும் அரங்கும்**, சி..எம்.ஏ. அமீனின் **முஸ்லிம்கள் வளர்த்த அழகியற் கலைகள்**, பரமநாதனின் **நவநாத சித்தர்**, ஷர்புன்னியாவின் **கிராமிய மணம்**, சி. சிவஞான சுந்தரத்தின் **தம்பி தங்கைக்கு**, ஏ. இக்பாலின் **இலக்கிய ஊற்று**, கு. சோமசுந்தரத்தின் **நல்வாழ்விற்குறிய நடைமுறை சிந்தனைகள்**, புலவர் த. கனகரத்தினத்தின் **தமிழ் - சிங்கள இலக்கிய உறவு**, யோகபாலாவின் **மகிழ்ச்சியின் இரகசியம்**, பாலசுகுமாரின் **உலக நாடக அரங்கு** என்பனவாகும்.

### 7. சிறுவர் இலக்கியம்


மூ.சி. சீனித்தம்பியின் சிறுவர்களுக்கான **பிறநாட்டுக் கதைகள்**, வ. செல்லையாவின் **செயா உலகத்துக் கதைகள்**, ந. தர்மலிங்கத்தின் **பிள்ளைப்பாபூக்கள்** ரூபராணி ஜோசப்பின் **ஏணியும் தோணியும்**, ச. அருளானந்தத்தின் **காகமும் தம்பியும்**, ஒ.கே. குணநாதனின் **மாயக்கிழவி**, செ. யோகநாதனின் **மந்திரமா தந்திரமா** என்ற எழு புத்தகங்கள் சிறுவர் இலக்கிய பிரிவினுள் கடந்த ஆண்டு வெளிவந்திருக்கின்றன. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உறவு



"கிழக்கும் மேற்கும்"
வெளியீடு:-
தமிழர் நலன் புரிச் சங்கம்,
33A Station Road,
Manor Park,
London E12 5 Bp,
United Kingdom.

ஈழத்தமிழர்களின் புலம்பெயர் வாழ்வு ஆக்க இலக்கியத் துறையில் புதிய வளத்தை கொடுக்க முனைந்திருப்பதை இன்றைய காலம் நமக்கு நிரூபிக்கின்றது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் வாழ்வு கொள்ளும் நம்மவர்களின் பங்களிப்புக்கள் இவற்றில் கணிசமானவை. இதற்கு சான்று பகர்வது போல் வெளிவந்துள்ளது "கிழக்கும் மேற்கும்" எனும் லண்டன் தமிழர் நலன் புரிச் சங்கத்தின் ஆண்டு மலர். இது ஓர் கூட்டு முயற்சி எனினும் தொகுப்பாளர் பத்ம நாப ஐயரின் கடின உழைப்பே இவ்விதழில் சிறப்பு காரணம் என நினைக்கின்றேன். படைப்பாளர் பட்டியல் நீண்டது. ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்களுக்கு அப்பால் இம்மலர் தொடர்பாக வேறு சில கருத்துக்களும் கூற வேண்டியுள்ளது.


1984ம் ஆண்டு மார்க்சியத்தின் செல்வாக்கும், முற்போக்கு இலக்கிய வாதிகளின்பார்வையும்ஈழவிடுதலை இயக்கங்களைச் சூழ்ந்திருந்த காலகட்டம் அக்கால கட்டத்தில் பல்வேறு இலக்கிய வெளியீடுகள் உருவாக ஏதுவாயிற்று. இந்நேரத்தில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதியுதவியோடு பாரிய முதலீட்டோடு "புதுயுகம்" எனும் பெயரில் தமிழகத்தில் ஒரு சஞ்சிகை வெளிக்கொணரப்பட்டது. இரண்டு இதழ்களோடு இச்சஞ்சிகை வெளிவருவது நின்று விட்டாலும் அக்காலகட்டத்தில் தமிழ்ச் சஞ்சிகை வெளியீட்டுத்துறையில் பெரிய தாக்கத்தைக்கொடுத்தது இப்புதுயுகம். காரணம் ஆக்க உள்ளடக்கம் அல்ல. அதன் உயர்ரக அச்சுப் பதிப்பும், அதன் கவர்ச்சி மிகு கலர் வடிவங்களும்தான்.

புதுயுகம் புலிகளின் சித்தாந்த கருத்துக்களுக்கு ஊறுவிளைவிக்காத வண்ணம் வெளிவந்தது இதன் விசேடத்தன்மை. இதனால் பல முற்போக்கு இலக்கியவாதிகளும், அதன் சிந்தனையாளர்களும் புறக்கணிக்கப்பட்டனர். லண்டன் நலன்புரிச் சங்கத்தினரின் இவ் வெளியீடும் 'புதுயுகம்' வெளியீட்டாளர்களின் சிந்தனைகளை 'கரம்பற்றி'க்கொண்டுள்ளதோ என ஐயம் கொள்ள வைக்கின்றது. இச்சங்கத்தின் கடந்த வருட, இவ்வருட இரண்டு இதழ்களும் புலம்பெயர் சூழலில் வாழும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பல முக்கிய படைப்பாளிகளை தவிர்த்துள்ளது.

"கிழக்கும் மேற்கும்" ஆண்டு மலர் முன்னுரையில் தொகுப்பாளர் இங்ஙனம் கூறுகின்றார். "பல்வேறு சமூக, கலாசார, அரசியல் நம்பிக்கையுடையவர்களிடமிருந்து படைப்புக்களைக் கோரினோம்" இக்கோரிக்கை, எத்தனை நிஜம் வாய்ந்தது என்பது தொகுப்பாளருக்கே வெளிச்சம். புறம் தள்ளப்பட்ட இப்படைப்பாளர்கள் மாற்று அரசியல் கலாசார சிந்தனைகளை கொண்டவர்கள். புகலிடத்தில் உருவாகி வரும் பல மனித உரிமை மீறல்களையும், அராஜகங்களையும் அதிகார ஆக்கிரமிப்புக்களையும் ஆக்ரோசமாக எதிர்ப்பவர்கள். அத்தோடு சிறு சஞ்சிகை உலகோடும் ஐரோப்பிய இலக்கிய சந்திப்பு மையங்களோடும் உறவு பூண்டவர்கள். முற்போக்கு சிந்தனை கொண்ட நவீன இலக்கிய தேடல்களின் ஆர்வலர்கள் குறிப்பாக தேவா ஹெரட், சேரன், சுசீந்திரன், நிருபா, கலாமோகன், உமா, வ.ஐ.ச ஜெயபாலன், தேவிகா, ரஞ்சனி, ரயாகரன், பாரதி, லக்ஷ்மி, நிர்மலா, வாணிதாசன், கலைச்செல்வன், தயாநிதி, பரா, புஸ்பராஜா, சுகன், மல்லிகா, நித்தியானந்தம், சந்தோஷ், முரளி வாசுதேவன் மற்றும் "தாயகம்" சஞ்சிகைப் படைப்பாளிகள் இன்னும் பலர் இவர்களின் புறக்கணிப்பு 'கிழக்கு மேற்கின்' குறிக்கோளின் மீது ஐயத்தை எழுப்புகின்றது.

புலம்பெயர் சூழலில் தமிழ் மொழிக் கல்வி, தகவல், தொழில் நுட்பம், புலம்பெயர் சர்வதேச இலக்கியம், பெண்நிலைவாதம், பின் நவீனத்துவம் என பல்வகைப்பட்ட பார்வைகள் புத்தகத்தினுள் இருப்பதாக சொல்லும் தொகுப்பாளர் புலம்பெயர் சூழலில் தமிழ் எதிர்கொள்ளும் எழுத்துச் சுதந்திர மறுப்பு, ஜனநாயகக் கடமைகளுக்கு தடைவிதித்தல், துப்பாக்கிக் கலாசாரம், சண்டித்தனம், சிறு சஞ்சிகையர்ளர்கள் படைப்பாளிகள் மீது செலுத்தப்படும் அதிகார ஆண்வத்துவம் போன்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஒரு வரியேனும் இருப்பதாகக் குறிப்பிடக்காணோம். மனித விழுமியங்களை காலில் போட்டு மிதிக்கும் புகலிட அனைத்து அராஜகங்களுக்கு எதிராக ஒரு குரலைக் கூட இத்தொகுப்பில் ஒலிக்க வைக்க தொகுப்பாளரால் முடியாமல் போய் விட்டது. இதுதான் பரிதாபமும் வேதனையும்.


***துடைப்பான்.***



**பசியாவரம்**
(சிறுகதைத் தொகுதி)
கே.கோவிந்தராஜ்
வெளியீடு:-
மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்,
95, ரஜமல்வத்த,
கொழும்பு -15
விலை ரூபா. 90/=

வாழ்நாள் முழுவதும் துயரங்களில் வாழ்கின்ற மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அவலங்களை தொட்டுக் காட்டுகின்ற பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பே கே. கோவிந்தராஜின் பசியாவரம். 1975 இலிருந்து - 1986 வரையிலான காலப்பகுதியில் இச்சிறுகதைகள் வெளிவந்துள்ளன. மலையக மக்களின் வாழ்வியலின் துன்பங்களையும், துயரங்களையும் ஒவ்வொரு சிறுகதைகளிலும் தெளிவாகப் படைத்துள்ளார். இந்ததேசத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்புகளான இந்த மக்களின் வாழ்வும் வயிறும் இன்னமும் சுருண்டே கிடக்கிறது. அவர்கள் பற்றிய துயரங்களை தன்னுடைய படைப்புகளில் மிகத்தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறார். கே. கோவிந்தராஜ் மலையகத்தின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய படைப்பாளிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***பாரதி***



**'ஈழத்தவர் வரலாறு'ம் கலாநிதி க. குணராசாவும்**

ஈழத்தமிழரின் சரியானதும், முழுமையானதுமான வரலாற்று நூலொன்றின் தேவை இலங்கையில் இனமுரண்பாடுகள் கூர்மையடைந்த காலந்தொட்டே உணரப்பட்ட ஒன்று.

கலாநிதி க. குணராசாவினால் எழுதப்பட்ட 'ஈழத்தவர் வரலாறு' என்ற நூலினை "இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் தமிழ் மன்னர்களதும், அவர்கள் சார்ந்த மக்களதும் முதன்மை சரிவரக் கணிப்பீடு செய்யப்படவில்லை. இனச்சார்பான சிந்தனைகள் உண்மையான வரலாற்றை திரிபுபடுத்தியுள்ளன. நடுநிலை நின்று நமது வரலாற்றைக் கூறவேண்டுமென்ற அவாவின் ஆய்வே 'ஈழத்தவர் வரலாறு' என்ற இந்நூலாகும்". என்னும் அவரின் முன்னுரையின் நம்பிக்கையுடன் வாசிப்பவர்களுக்கு இந்நூல் பெருத்த ஏமாற்றத்தையே கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்குறிப்பிட்ட முன்னுரையில் வருகின்ற பதங்களுக்கான பொருளினை உணர்ந்து அதற்கேற்ப எழுதப்பட்ட ஒரு நூலல்ல இது. தான் விரும்பியவற்றை எழுதிவிட்டு அதற்கு கால தேவைக்கு ஏற்ப 'ஈழத்தவர் வரலாறு' என்ற தலைப்பினையும் இட்டு வியாபார நோக்கங்கருதி இவ்வாறு ஒரு முன்னுரையையும் எழுதியுள்ளார் அவ்வளவுதான்.

இந்நூலில் ஒரு பக்க வரலாறு கூறப்படுகின்றமையை வாசகர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். ஒரு பக்க வரலாறு எனும் போது அதற்குள் இருவித சிந்தனைப் போக்குகள் ஓடுகின்றன. அதாவது ஒன்று கிழக்கு மாகாணத்தைப் புறந்தள்ளிவிட்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றமை.

இரண்டு எழுதப்பட்ட வரலாற்றில் சாதாரண மக்களின் வரலாறு இடம்பெறாமல் வடமாகாணத்தில் அரசோச்சிய அரசர்களின் வரலாறே இடம்பெற்றுள்ளது.

இந்த இரு போக்குகளும் சேர்ந்து ஈழத்தவர் என்ற எண்ணக்கரு சுட்டி நிற்கின்ற பொருளினை மாற்றியமைத்து விட்டது. இது நூலாசிரியரின் யாழ்ப்பாணத்து உயர் குழாத்து மனப்பான்மையால் ஏற்பட்ட விளைவாகும். இதனால் நூலாசிரியரின் அர்த்தத்தில் ஈழத்தவர் எனக் கருதப்படுபவர்கள் யாழ்ப்பாண உயர் குழாத்தினரேயாகும்.

"இனச்சார்பான சிந்தனைகள் உண்மையான வரலாற்றை திரிபுபடுத்தியுள்ளன" எனக்கூறுகின்ற நூலாசிரியர் "இலங்கையின் வரலாறு என்பது இரண்டு இனங்களுக்கிடையிலான ஓயாத போராட்ட விளைவு என்பது என் ஆய்வின் முடிவாகும்" எனக் கூறுகின்ற இவரின் முடிவு முன்னையதில் இருந்து எவ்வளவுக்கு வேறுபாடானது என்பதை அவரின் ஆய்வில் இருந்து கண்டு கொள்ள முடியாமல் இருக்கின்றது.


"போராசிரியர் லெஸ்லி குணவர்த்தன' (In Ethnicity and Social change in Sri Lanka Social Scientists Association 1979) புராதன கால வரலாற்றுப் பதிவேடான மகாவம்சத்தில் சிங்கள என்ற சொல் அந்தக் காலத்தில் புத்தகுருமாராய் ஆதரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட அரசவம்சத்தையே உண்மையில் குறிப்பிட்டது" எனக் குறிப்பிடுகின்றார். (மே.கோ. முறிந்த பனை. பக். 155)

எனவே தமிழ் சிங்கள அரசர்களுக்கிடையில் நடந்த அதிகாரப் போட்டியினை இரு இனங்களுக்கு இடையில் நடந்த போராட்டமாக காட்ட முனைவது வரலாற்றின் மற்றுமொரு புரட்டலாகும். இவ்வாறான கண்டுபிடிப்புக்களைச் செய்கின்ற கலாநிதி க. குணராசா தென்னிந்தியாவில் நடந்த தமிழ் அரசர்களுக்கிடையிலான யுத்தங்களை எந்த இரு இனங்களின் போராட்ட வரலாறாக கண்டுபிடிப்புச் செய்யப் போகின்றாரோ தெரியவில்லை.

கிழக்கு மாகாண் அரசர்களைப் பற்றி எழுதினால் அவர்கள் சிங்கள அரசர்களுடன் கொண்டிருந்த உறவு புலப்படும். அவ்வாறு புலப்பட்டால் தனது கண்டுபிடிப்பை நிகழ்த்த முடியாது என்பதற்காகவும், யாழ்ப்பாண அதிகார பேணுகை மனோபாவத்திற்கு சவாலாகவும் அமைந்து விடும் என்பதற்காகவும் அதனை மிக சாதுர்யமாக தவிர்த்து 'ஈழத்தவர் வரலாறு' படைத்து விட்டார்.

உண்மையில் இந்நூல் இன்று கேள்விக்குட்பட்டு வரும் யாழ்ப்பாண மேலாதிக்கவாதத்தை மீண்டும் அங்கீகரிப்பதற்கான அல்லது அடையாளப்படுத்துவதான ஒரு வரலாற்று நூல் என்றே கொள்ளப்பட வேண்டும்.

***சு. யோகன்***



## அடிச்சுவடுகள்

ஆங்கில மூலம் : துஷாந்தி செல்வராசா
தமிழில் : எம்.கே.எம். ஷகீப்

*ஒரு பெருந்துவக்கோசை...*
*சற்றேக, முடிவற்றுத் தொடர்ந்தன.*
*பின்னும் பின்னும் பல பெருவெடிப்பாய்*
*அது ஓய, பெருங்கூச்சல்..*
*பின்னர்*
*நெருப்புப் பிரளயத்தினூடு*
*கலைந்து போன நீண்ட*
*மிக நீண்ட மௌனம்!*

*மௌனங் கிளறி*
*தன்னுடைய மனிதருக்காய்ப் போரிட்டுக்கொண்டு,*
*உயிரை மட்டுமே மிச்சமாய் வைத்திருக்கிற*
*ஒருவனது மெலிதான காலடி ஓசைகள் கேட்கின்றன.*

*நண்பர்களாய், எதிரிகளாய்*
*மனிதர்களாய் நிரம்பியிருக்கிற*
*வாழ் நரகிலிருந்து தப்பித்தோடுவதாய்*
*அவ்வோசை எங்கும் மௌனத்தில் நிறைகிறது.*

*செத்துப்போன அவனது அவர்களின்*
*நெஞ்சழுத்தும், அழிக்கவொண்ணா நினைவுகளோடு*
*அவன் ஓடுகிறான்*

*தூரத்தே; காற்று வெளி மௌனங்கிழித்து*
*இன்னுமொரு உயிரைப் பறித்தெடுக்கிற*
*மற்றொரு துவக்கோசை கேட்கிறது.*

*உடல் நோவு தரவில்லை.*
*கோபம், விரக்தி, குற்றவுணர்வு*
*அழுத்திச் சாக்கொல்கிறது அவனை நிதமும்.*
*தலை கவிழ்த்துக் குந்தியிருக்கிறான்.*

*அவனது மனிதர்களும் அவனைப் போன்ற மனிதர்களும்*
*செத்தழிந்து போன உலகில்*
*இன்னுமே துடித்துக் கொண்டிருக்கிற*
*இதயத்தோடும்,*
*சிந்திக்கிற மூளையோடும்*
*கவலையுணரா ஆத்மாவுடனும்*
*வாழ்தல் தகுமா?*

*எது எது போயிருப்பினும் அல்லது*
*எல்லாமே போயிருப்பினும்*
*அவனது உயிர்ப்பான வாழ்விருந்த*
*அந்த யதார்த்த உலகுக்கு*
*போதல் முடியுமா?*

www.tamilarangam.net



## வாசகர் செ(ர)ல்வழி



## தனிமனிதனா? சூழலா?

மு.பொ., ''கவிதைப்போக்கு தனிமனிதர்களாலன்றி அவர்களூடு செயற்படும் சமுதாயச் சூழலாலேயே தீர்மானிக்கப்படுகிறது'' என்று நான் கூறியதன் காரணமாக 'இன்னும் சில தசாப்தங்களில் இந்தப் புதிய பரிமாணங்களும் சாதனைகளும் யாரும் கவனிப்பாரற்றுப்போகவே கூடும் என்னுங் கருத்தை நாம் நினைவிலிருத்துவது பயனுள்ளது'' என்ற கருத்தை முன்வைக்க உரிமையற்றவராகின்றேன் என்று கூறியுள்ளார். (சரிநிகர் 119) இது மட்டுமன்றி மாக்ஸிய சித்தாந்தமே கூட எனது முன்னைய கூற்றின் படி உருவானதற்கு இடமிராது போயிருக்கவேண்டும் என்பது அவரது வாதம்.

மாக்ஸியம் மாக்ஸ் என்ற தனிமனிதரது ஆக்கம் மட்டுமே என்ற பார்வையை நாம் ஏற்றால், மு.பொ. கூற்று நியாயமானதாகலாம். இயேசு, புத்தர், முகம்மது நபி போன்றோர் கூட அவர்களது வரலாற்றுச்சூழலின் விளைவாகவே அவரவர்கட்குரிய சிந்தனைப் போக்குகளை முன்வைக்க இயலுமாயிற்று. தனிமனிதர்களது சிறப்பான பங்களிப்பின் முக்கியத்துவத்தை நான் மறுக்கவில்லை. ஆயினும் எப் பங்களிப்பும் ஒரு வரலாற்றுப் போக்காகவோ இலக்கியப் போக்காகவோ பரிணமிக்கத் தனிமனித 'சாதனையை' விட முக்கியமானது அது நிகழும் வரலாற்றுச் சூழல்.

யாஓ, 1960களில், இன்னும் சில தசாப்தங்களில் மாக்ஸ் உட்பட நாமெல்லாம் சொன்ன விஷயங்கள் மிக அற்பமானவையாகத் தோன்றலாம் என்ற கருத்துப்படக் கூறியிருந்தது நினைவிலிருத்தத்தக்கது.

தனிமனிதர்களின் அமானுஷ்ய ஆற்றல் சார்ந்தே உலகம் முன்னேறுகிறது என்று கருதுகிற ஒரு போக்கு இன்னமும் உள்ளது. இனியும் இருக்கும். இது மனித இருப்பையும் சமூக இருப்பையும் இணைத்துக் கருத இயலாமையின் விளைவென்றே தோன்றுகிறது.

*சிவசேகரம்*
*லண்டன்*

## எனது கவிதை!

'சரிநிகர்' இதழ் 120ல் வடிவேல் இன்பமோகன் எழுதிய ''மட்டக்களப்பு பெண்கள் இலக்கை நோக்கி...'' என்ற கண்ணோட்டத்தில் இடம்பெற்ற ஒரு தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பெண்கள் அமைப்புகள் 1997இற்குரிய உலகப் பெண்கள் தின நிகழ்ச்சிகளை மட்டுநகர் கலாசாலையில் நடத்தி முடித்தன. இந்நிகழ்வில், கவிதா எனும் அம்சமும் புகுத்தப்பட்டிருந்தது.

இக் கவிதா நிகழ்வில், அகிலேஸ்வரி என்பவரால் வாசிக்கப்பட்ட கவிதை எனது கவிதையாகும்.

அன்றைய நிகழ்வில் கூட, அகிலேஸ்வரி, 'இது கல்முனை றிஸ்வியூ முஹம்மத் நபீல் எழுதிய கவிதை' என சிலாகித்து விட்டுத் தான் இக்கவிதையை வாசித்தார்.

ஆனால், மேலுள்ள கண்ணோட்டத்தை எழுதியவர் 'அகிலேஸ்வரி தனது கவிதையின் மூலம்

*''எந்தப் பறவை பெண் விடுதலை*
*பற்றி புத்தகம் வெளியிட்டது.*
*எந்தப் புல்*
*பாலியல் வல்லுறவால்*
*கோட்டுக்குப் போனது''*

என்று மனித சமூகத்திற்கே சொந்தமான இவ்வர்க்கப் பாகுபாட்டை கேள்விக்குட்படுத்தினார்' என எழுதிச் செல்கின்றார்.

மேலுள்ள கவிதை எனது கவிதை என்பதற்கு ஆதாரமாக, பின்வரும் விடயத்தைக் கூற விரும்புகின்றேன். அண்மையில், 'பாதுக்கை' எனும் இடத்தில் 'பால்நிலை அபிவிருத்தி' கருத்தரங்கில் என்னால் எழுதி வாசிக்கப்பட்ட கவிதை அதுவாகும். இக்கவிதையை நான் அன்றே எழுதி வாசித்ததை இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய சுல்பிகா இஸ்மாயில் அவர்களும் அறிவார்கள்.

*-றிஸ்வியூ முஹம்மத் நபீல்*
*கல்முனை -6*

## இனவாத ஒடுக்கலா?

மூதூர் பிரதேச செயலாளர் ஏ. நடராசா அவர்கள் முகாமைத்துவ பயிற்சி ஒன்றுக்காக மூன்று மாத கால விடுமுறையில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு (SLIDA) கடந்த மே மாதம் 07ம் திகதி சென்றுள்ளார். ஆனால் மூதூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றும் எம்.ஏ.எம்.நியாஸ் அவர்களுக்கு பதில் பிரதேச செயலாளர் நியமனத்தை வழங்காமல், மூதூரிலிருந்து 18 மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஈச்சிலம்பத்தை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றும் சிங்கராயர் அவர்களுக்கு பதில் பிரதேச செயலாளர் நியமனத்தை அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் வழங்கியுள்ளார். சிங்கராயரும், நியாஸும் ஒரே திகதியில் இலங்கை நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களாவர். மேலும் ஈச்சிலம்பத்தை இன்னும் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படவுமில்லை.

திணைக்களத் தலைவர் விடுமுறையில் செல்லும் போது பதில் கடமை பொறுப்புக்களை கொடுத்து விட்டுச் செல்வதே பொதுவான நடைமுறையாகும். ஆனால், அதே காரியாலயத்தில் ஒருவர் இருக்கும் போது வேறு ஒரு பிரிவில் கடமையாற்றும் ஒருவருக்கு பதில் கடமைபார்ப்பதற்கு நியமனம் செய்திருப்பது அரசாங்கத்திற்கு மேலதிக செலவை ஏற்படுத்துவதுடன், பொது மக்களுக்கு நிர்வாக ரீதியில் சிரமத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையுமாகும். இந்த பொருத்தமற்ற நியமனம் இன ரீதியான வேறுபடுத்தலா என இப்பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

*எம்.லாஹிர்*
*மூதூர்*

## புத்தகம் போடலியோ புத்தகம்!

நமது நாட்டில் இலக்கியத்தை மூலதனமாக வைத்து பிழைப்பு நடத்தக் கூடியவர்கள் தான் அதிகம். இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன் தினகரன் பத்திரிகையில் ஒரு விளம்பரம். 'இளம் எழுத்தாளர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம். ஆயிரம் ரூபாய் இருந்தால் போதும், நீங்களும் தொகுதி போடலாம்', என்ற ஆர்ப்பாட்டமான விளம்பரத்தை படித்து விட்டு, ஆக்கங்களையும், ஆயிரங்களையும் அனுப்பியவர்கள் அதிகமுண்டு.

'பலப்பிட்டிய' என்னுமிடத்தில் வசிக்கும் அரூஸ் என்பவரால் அந்த விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தது. கவர்ச்சிகரமான விளம்பரத்தை படித்து விட்டு, நமது கவிதைகளையும் தொகுப்பில் கொணர்ந்தால் என்ன என்ற உதிப்பும் எனக்கு. ஆக்கங்களுடன் ஒரு ''மயிலு''ம் மணியோடர் மூலம் அனுப்பிவைத்தேன்.

நான் கொழும்புக்கு அண்மையில் இருப்பதால் என்னை நேரடியாக சந்திக்க ஆவல் கொண்டுள்ளதாக அரூஸ் எழுதினார். சென்றேன். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் தியாக செம்மலை சந்திக்க யாருக்குத்தான் ஆவல் எழாது. என்னைப் போல், நிறைய இளம் எழுத்தாளர்கள் முண்டியடித்துக் கொண்டு, ஆக்கங்களையும், ஆயிரங்களையம் அனுப்பியிருந்தனர். பேருவளை ஜாமி ஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட மாணவர்களும், கல்வியியல் தொடர்பான நூலொன்றுக்கு அரூஸிடம் அச்சாரம் கொடுத்துள்ளதையும், பின்பு அறிந்து, எதிர்பாராத விதமாக பலப்பிட்டியில் அவர்களை சந்திக்க நேர்ந்தபோது 6000 ரூபாய்க்கள் வரை அரூஸிடம் கொடுத்துள்ளதாகவும், இன்னும் வேலைகள் முடியவில்லை என்றும் கூறி அலுத்துக்கொண்டனர். அண்மையில் கடித மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது ''எங்கள் முயற்சிகளையும், பணத்தையும் அரூஸ் வீணாக்கி விட்டார். புத்தகக்கதை, ஒரு 'பேய்க்காட்டலே'' என்றனர்.

அதுபோல, என்னுடன் நெருங்கிய எழுத்தாள நண்பர்களிடம் இதுபற்றி கதைத்த ஒரு சமயம், அவர்களும் அரூஸின் விளம்பரத்தில் மயங்கி அள்ளிக்கொடுத்து விட்டு, வெளியே சொல்ல வெட்கப்படுவதை உணர்ந்தேன்; ஆயிரங்களையும், ஆக்கங்களையும் பெற்று ஏப்பமிட்ட அரூஸ், தற்போது இன்னுமொரு புரட்டலில் ஈடுபட்டுள்ளதாக தகவல்.

அதாவது, அவர் ஆரம்பித்த நின்று போன்ற, 'ஜும்ஆ' என்ற இஸ்லாமிய பத்திரிகை வளர்ச்சிக்கு, ஆண்டு, ஆயுள், சந்தாசேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக, அறியக்கிடைத்தது. எனவே, தமிழ் பேசும் நெஞ்சங்களே, இந்த அரூஸின் நிதி திரட்டல் பற்றி மிக விழிப்பாக இருப்பதுடன், இவர் பற்றிய திருகு தாளங்களை பிறருக்கும் அம்பலப்படுத்தி காப்பதும் நமது கடமையே!

குறிப்பாக வளர்ந்து வரும் எழுத்தாளர்களை இவர் வளைத்துப்போட்டு, பணம் கறப்பதை தொழிலாகக் கொண்டவர், என்பதற்கு நிறைய சான்றுகள் உள. எனவே நான் உட்பட இதர எழுத்தாள சகோதரர்களின் பணத்துக்கு அரூஸ் என்ன சாட்டுக்களை கூறப்போகிறார் என்பதையாவது தெரியப்படுத்துவாரா?

*எஸ்.எச். அறபாத்*
*ஓட்டமாவடி*

## லிங்கநகர் — தொடரும் நெருக்கடிகள்!

திருகோணமலை லிங்கநகர் பற்றி செய்திக் கட்டுரைகளும் முந்நாள் யாழ்பல்கலைக்கழக மனித உரிமைகள் குழுவின் அறிக்கைகளும், உண்ணா விரதப்போராட்டம் பற்றிய செய்திகளும் சரிநிகரில் தொடர்ந்து வெளிவந்தமை வாசகர்கள் அறிந்ததே.

லிங்கநகரில் கடந்த 96. ஒக் 16ஆம் திகதி தொடக்கம் இராணுவ தடையரண் நிறுவப்பட்டதில் இருந்து இராணுவத்தினரால் மின்சார வினியோகம், நீர்வினியோகம் வாகனப்போக்குவரத்து, கடைகளுக்குரிய அத்தியவசியப்பொருட்கள், திருமண விழா, பிறந்த நாள் விழா, பூப்புனித நீராட்டு விழா, நாகபூசணி அம்மன் கோயில் வழிபாடு, உறவினர்கள் நண்பர்கள் வந்து போவது தங்கிநிற்பது, பார்ப்பது இவைகள் அனைத்துமே தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இறந்த வீட்டுக்கூரை வேய்தல், தகரம், சிமென்ற், மண், கல், வீட்டுத்தளபாடங்கள் கொண்டு செல்லல் வீடு திருத்தம், காணி துப்பரவாக்கல், வேலியமைத்தல் அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர், மின்சார சபையினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர், அரசியல் கட்சிப்பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிடுவது கூட தடைசெய்யப்பட்டுள்ளது. ஆக, இம்மக்கள் உண்ணுவதும் உறங்குவதும் மட்டும் தடை செய்யப்படவில்லை. ஏற்கெனவே 40 குடும்பங்களை இராணுவத்தினர் பலாத்காரமாக வெளியேற்றி அக்குடியிருப்புப் பகுதியையும் நாகபூசணி அம்மன் கோயிலையும் சேர்த்து யாரும் உட்புக முடியாத படி வேலியமைத்துள்ளனர்.

அவ்வேலியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் முன்னாக ராஜன் கடை என்ற இடத்தில் இராணுவத்தினர் தடையரண் போட்டுள்ளனர். இப்பகுதியில் இன்னும் 250க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்கள் தங்களுடைய மோட்டார் சைக்கிள்களைக்கூட வீட்டுக்குக் கொண்டு செல்ல முடியாது தடை போட்டுள்ளனர்.

இம்மக்களின் வீட்டுக் கூரைகள் எல்லாம் இறந்து வானம் தெரிகின்றது. வெய்யில் கூட வீட்டுக்குள் விழுகிறது மழையில் நனைவதும் வெய்யிலில் காய்வதும் தவிர வேறு வழியில்லை. இதனால் தொற்று நோய்கள் பரவுகின்றன.

இம்மக்களின் நிலைமையை மனித உரிமை அமைப்புக்காளாவது கவனத்தில் எடுத்து அடிப்படை மனித உரிமைகளையாவது பெற்றுக்கொடுக்க முடியாதா?

இம் மக்கள் மீது உளவியல், உடலியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தி விரக்திநிலைக்குத் தள்ளி அம்மக்களை அங்கிருந்து மெல்ல மெல்ல வெளியேற்றுவதே இராணுவத்தின் நோக்கமாகும்.

திருகோணமலை நகரின் முதுகெலும்பாக விளங்கும் லிங்கநகர் தமிழர் குடியிருப்பு நிலம் இராணுவ உடைமையாகுவதை தமிழர் பாராளுமன்ற உறுப்பினர்களால் தடுக்க முடியாதா?

அன்று கந்தளாய், சேருவில (அல்லை) பதவியா (பாரதிபுரம்), மொறவேவா (பன்குளம்), வெலிஓயா (மணலாறு) அம்பாறை, இன்று யாப்பாப்பட்டுன, சப்புமல்புர, லிங்கநகர். அன்று அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் தமிழர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. இன்று இராணுவத்தினர் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து, விகாரை கட்டி பிக்குவை இருத்தி சூழவர சிங்கள மக்களை குடியேற்றுகிறார்கள்.

உண்மையில் லிங்கநகரில் இராணுவ முகாம் அமைப்பதற்கான நியாயபூர்வமான எந்தக்காரணங்களும் இல்லை. பிளான்ரன் பொயின்ட் பாதுகாப்பு என்பதும், சுடுவீச்சு எல்லை என்பதும் இனவாதக் குறியின் ஆக்கிரமிப்பேயாகும்.

*''ஞானம்''*
*திருமலை*

## புதிய களத்தில்

இதுவரை சரிநிகர் இதழ்கள் அரசியல், சமூக, கலாசார இலக்கிய விமர்சன கருத்துக்களையும், விடயங்களையும் தாங்கி வெளிவந்து கொண்டு இருந்தது. இதழ் 121ல் சித்த - ஆயுர்வேத மருத்துவம் பற்றிய நேர்காணலை வெளியிட்டதன் மூலம் புதியதொரு கருத்துப் பரிமாறலுக்கு வித்திட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. இது ஆக்கபூர்வமாகத் தொடரவேண்டும்.

*இ. தர்மராஜா*
*திருமலை*

## அன்பான வாசகர்கட்கு!

**வாசகர்களிடமிருந்து நிறையவே கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்ற போதும் அவற்றில் பெரும்பான்மையானவை நீண்டவையாகவும் எழுத்துத் தெளிவற்றவையாகவும் அமைந்து விடுகின்றன. கடிதம் எழுதும் வாசகர்களின் ஆர்வத்தையும் அக்கறையையும் வரவேற்கும், அதே நேரம் கடிதங்களை முந்தளவு சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

ஆ-ர்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka



# வன்னி: ஜயசிகுறுவின் சுத்தப்படுத்தல்கள்!

-தர்ஷன்

ஜயசிக்குரு இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவத்தினர் கைப்பற்றிய பிரதேசங்களில் பொலிசாரும், கடற்படையினரும் நிலைகொண்டு பலப்படுத்தி வருகின்றனர்.

நீண்ட மண்மேட்டுடன் கூடிய அரண் அமைக்கப்பட்டு, அவற்றுக்கிடையே பாதுகாப்புக்கென பதுங்கு அறைகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறான பங்கர்களுக்கு அருகில் காணப்படுகின்ற பனை மரங்கள் தறிக்கப்பட்டு துண்டுகளாக்கி மறைப்புச் சுவர்களாக அரண் அமைப்பதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

பனைமரங்கள் கிடைக்காத இடங்களில் அருகில் உள்ள வாளிப்பான காட்டு மரங்களும், காட்டு மரங்கள் இல்லாதவிடத்து அழகிய நேரான தேக்கு மரக் குற்றிகளே அரண் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்கென வவுனியா - ஹொரவப் பொத்தானை வீதியில் உள்ள தேக்கு மரத்தோப்பில் (அரசினால் பயிரிடப்பட்டது) இருந்து ட்ரக்குகளிலும், லொறிகளிலும்வெட்டித்தறிக்கப்பட்ட தேக்கு மரக் குற்றிகள் பெருமளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

இது ''ஜயசிக்குரு'' நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள படையினரின்வேலையாக உள்ளது.

இதே வேளையில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் உள்ள கிராமப்பகுதிகள் காட்டுப்பகுதிகள் ஒதுக்குப்புறங்களில் புலிகள் மறைந்திருக்கின்றனரா என தேடுவதிலும் மறைவிடங்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் பணிகளிலும் படையினர் கடந்த பல தினங்களாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகமும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

''சுத்தப்படுத்துதல்'' (clearing) என்ற பொருள் கொண்டு இந்த இராணுவ சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது பற்றி தகவல்கள்கசிந்து வெளியாகியுள்ளன.

இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்படுகின்ற இடங்கள் நகரங்கள் கிராமங்கள் கடைவீதிகள் என்பன எவ்வாறு சுத்தப்படுத்தப்பட்டன என்பன குறித்து தொடர்ச்சியாகத் தகவல்கள் வெளிவந்தமை எல்லோருக்கும் தெரிந்ததே.

வீடுகள் கடைகள் என்பன துரும்பு கூட மிச்சமில்லாது சுத்தம் செய்யப்பட்டுப் பொதுமக்களின் உடைமைகளும் சொத்துக்களும் வாரிச்சுருட்டிக் கொண்டு செல்லப்பட்டதைப் பொதுமக்கள் பலர் நேரடியாகவும் கண்டுள்ளனர்.

இதேபோன்றதொரு சுத்திகரிப்பு நடவடிக்கைதான் ஓமந்தை பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விவசாய கிராமிய பிரதேசமாகிய ஓமந்தை பகுதியில் உள்ள வீடுகள் கடைகளில் இருந்து மரத்தளபாடங்கள், உழவு இயந்திரங்களின் விவசாய உதிரிப்பாகங்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், அல்கத்தின் குழாய்கள், கூரைத்தகடுகள், வெண்கலப்பாத்திரங்கள், சமையலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற கிடாரங்கள் மற்றும் பெரிய அளவிலான பாத்திரங்கள் என்பன இங்கிருந்து சுத்தமாக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் விவசாயிகள் தமது வீடுகளில் விட்டுச் சென்ற பெருமளவு செத்தல் மிளகாய், நெல் மூடைகள் என்பனவற்றுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தெரியவில்லை.

சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட ஓமந்தை பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்ட பல பொருட்கள் தொலைக்காட்சிப்பெட்டிகள், டெக்குகள், ஜெனரேற்றர் என்பவை உட்பட வவுனியா நகரப்பகுதிக்குள் கொண்டுவரப்பட்டு கிழக்குப் பக்கமாக உள்ள இடங்களில் பொது மக்களின் வீடுகளில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் அடிபடுகின்றன.

இதுகுறித்து பொலிஸ், இராணுவ உயரதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். பொருட்கள் பத்திரப்படுத்தப்பட்டுள்ள கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனமக்கள் (பொலிசாரின்) படையினரின் இந்த நடவடிக்கைகள் குறித்து கோபமடைந்துள்ளார்கள்.

இது விடயம் குறித்து வெளியில் தகவல் தெரிவித்ததும் அவர்களே. ''ஓமந்தை கிராமவாசிகளின் உடைமைகள் எமது கிராமத்திற்குக்கொண்டுவரப்பட்டுள்ளன'' என்று கூறுகின்ற அவர்கள் இதற்காக புலிகளிடமிருந்து எவ்வாறான பிரதிபலிப்புகள் ஏற்படும் என்பது குறித்து கலக்கம் அடைந்துள்ளார்கள்.

உயிர்தப்புவதற்காக ஓடிய அப்பாவி தமிழ் மக்களின் உடைமைகளைத் தமிழ் மக்களோடு எல்லைப்புறத்தில் இணைந்து வாழ்கின்ற எமது கிராமத்து மக்கள் கொள்ளையடித்துக் கொண்டு வந்து விட்டார்கள் என்ற பழிச்சொல் அல்லவா ஏற்படும்? என அவர்கள் வினவுகின்றார்கள்.

இதுவிடயம் குறித்து வன்னிப்பகுதியின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையிடப்பட்டுள்ளது.

படையினர் கைப்பற்றிய பகுதிக்குள் ஓமந்தை பகுதிக்குள் படையினர் காவலரண்கள் அமைக்கும் இடங்களில் உரிமை கோருவார் அற்ற நிலையில் சில பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அவற்றை எடுத்துள்ள பொலிசார் நீதிமன்றத்தில் ஒப்படைத்து உரியவர்களிடம் கையளிப்பதற்கு வசதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

புலிகளின் பிடியிலிருந்து அப்பாவி தமிழ் மக்களை விடுதலை செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகளின்பின்னால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான சுத்திகரிப்பு செயற்பாடுகள் நிச்சயமாகப் பொதுமக்களின் நன்மதிப்பைச்சம்பாதிக்க உதவப்போவது இல்லை.

## சனங்களுக்கும் தங்கத்துரைக்கும் "டென்ஷன்"

கடந்த சனிக்கிழமை தமிழர் பணிக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமொன்று சரஸ்வதி மண்டபத்தில் நடந்தேறியது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அக்கூட்டத்தில் உரையாற்ற வந்திருந்தார் தங்கத்துரை எம்.பி. அவர்கள். ஆனால் இரத்தப்பொட்டு வைத்து தங்கத்துரை அண்ணனை வரவேற்கவோ உணர்ச்சிவசப்பட்டு கூட்டணிக்கு ''ஜே'' போடவோ அந்த அரங்கில் ஒருத்தர் தானும் இருக்கவில்லை.

தங்கத்துரை அண்ணர் பேச்சை ஆரம்பித்தார்.

''அனைவரும் ஒருமித்து இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஒருமித்த குரலை முன்வைப்பதற்காகவே இக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது என நான் நம்புகிறேன்'' என்றார். மேடையில் இருந்த குமார் பொன்னம்பலம் அதற்காக இல்லையென மறுத்தார்.

முதலே முற்றும்கோணம் - தங்கத்துரை சமாளித்துக்கொண்டு - சந்திரிகாவின் தீர்வுத்திட்டம் என்றார்- கூட்டத்தில் இருந்த சனங்கள் உஷாரடைந்து விட்டனர். கூட்டத்தில் இருந்தவர்கள் தங்கத்துரையிடம் உரக்கக் கேட்டனர். ''இதற்கு முதல் பதில் சொல்லுங்கள், கூட்டணி யுத்தத்திற்கு ஆதரவா எதிர்ப்பா?

தங்கத்துரை:- மௌனம்.

சனங்கள்:- எங்கே ஆனந்த சங்கரி? எங்கே நீலன் திருச்செல்வம்.

தங்கத்துரை:- கேட்கவில்லை, கேட்கவில்லை.

சனங்கள்:- எங்கே ஆனந்தசங்கரி - யுத்தத்தை ஆதரிப்பதாக ஆனந்த சங்கரி - யுத்தத்தை எதிர்ப்பதாக நீங்கள் - சிங்கள ஆட்சியாளர்களிடம் ஒன்று . மக்களிடம் ஒன்று.

தங்கத்துரை:- (உணர்ச்சி வசப்பட்டு) கூட்டணி தங்கத்துரையின் கட்சியல்ல. தங்கத்துரையும் கூட்டணியில் இருக்கிறார். (Logic)

சனங்கள்:- அரசாங்கம் யுத்தத்தை நிறுத்த கூட்டணி என்ன செய்தது?

தங்கத்துரை:- சனாதிபதியை சந்தித்து இருக்கிறோம்.

சனங்கள்:- சனாதிபதியை சந்தித்த பின்னும் யுத்தம் நடக்கிறதே.

தங்கத்துரை:- இது என்னிடம் மட்டும் கேட்க முடியாது! நான் மட்டும் கூட்டணி இல்லை. உணர்ச்சி வசப்பட்டு தம்பி குமார் போல் என்னால் பேச முடியாது. ஒன்றுமே எனக்குத் தெரியாது. எதற்காக இக்கூட்டம் நடக்கிறது என்பதையும் நான் தெளிவாக அறியவில்லை. நானும் உங்களைப் போல் கஷ்டப்பட்ட பிரதேசத்தில் இருந்து வந்தவன் தான். டெலிபோனில் இப்படியொரு கூட்டம் நடக்கிறது. கூட்டணி சார்பில் வந்து பேசுகிறீர்களா என இன்று காலையில் கேட்டார்கள். அதற்காகத்தான் நான் வந்தேன்.. இனி என்ன பேசப்போகிறோம்- என எமது கட்சிக்கு நீங்கள் உரியமுறையில் அழைப்பு விடுத்தால் நாங்கள் கலந்துரையாடிவிட்டு வந்து பேசுவோம்.

சனங்கள்:- ஏமாத்தாதே- ஏமாத்தாதே.

கூட்டத்தலைவர்:- தங்கத்துரை எம். பி. அவர்கள் சொன்னார், ஒழுங்காக அழைக்கப்படவில்லையென. அது தவறு. அவர்களுடைய கட்சிக் காரியாலயத்திற்கு சென்று கலந்துரையாடி, ஒழுங்கான முறையிலேயே அழைப்பிதல் கையளிக்கப்பட்டு, கூட்டணி வந்து பேசுவதாக கூறப்பட்டது. தங்கத்துரை கூற்று தவறானது.

தங்கத்துரை:- (Tensionஇல் இருந்தார்.)

அம்ரிதா.

## ஈ.பி.டி.பி: மலையக ஊடுருவல்!

கிழக்கு, ஒலுவில் பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞர்கள் ஐவரைக் கடத்திச் சென்று, தடுத்து வைத்திருப்பதாகக் கூறப்படும் சம்பவம் காரணமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் கடும் கருத்து வேற்றுமை எழுந்துள்ளது.

இவ்விளைஞர்கள் சுய விருப்பத்தின் பேரிலேயே தமது இயக்கத்தில் சேர்ந்துள்ளதாக ஈ.பி.டி.பி தெரிவிப்பதை ஸ்ரீ.ல.மு.கா. அடியோடு மறுக்கிறது. அம் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஈ.பி.டி.பி. ஆயுதப் பயிற்சி அளிப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாக ஸ்ரீ ல.மு.கா குற்றஞ் சுமத்துகிறது.

இதே சமயம் ஈ.பி.டி.பியின் இந் நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஸ்ரீ.ல.மு.கா. முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் ஈ.பி.டி.பியினர் மலையக இளைஞர்களையும் விட்டுவைக்கிறார்கள் இல்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. கொழும்பில் தங்கள் அலுவலகத்தில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி மலையக இளைஞர்களை அழைத்துச் சென்று வடக்கிற்கு ஆயுத பயிற்சிக்காக அழைத்துச் செல்வதாகக் கூறப்படுகிறது. இளைஞர்களிடம் கையொப்பம் பெற்று அவர்களை ஆயுதம் தூக்க வைத்து பலிக்கடாவாக்கப் போவதாக மலையக மக்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். இது தொடர்பான கண்டன அறிக்கையொன்று அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் 'மலையகத்தில் ஊடுருவும் இயக்கம்' என்ற தலைப்பில் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

'பச்சைப் புலிகள்' சம்பந்தப்பட்ட செய்தியிலும் ஈ.பி.டி.பியின் பெயர் நன்றாக அடிபட்டுக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, அண்மைய சில நிகழ்வுகள் ஈ.பி.டி.பியை 'மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தாற் போல்' ஆக்கியிருக்கிறது.

## புதிய தேர்தல் முறை!

தேர்தல் தொகுதி மட்டத்தில் தேர்தல்களை நடத்தும் விகிதாசாரத் தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

புதிய தேர்தல் முறையின்படி, இதுவரை நிலவிய விருப்பு வாக்கு முறை இல்லாது செய்யப்படவுள்ளது.

அறிமுகப்படுத்தப்படும் தேர்தல் முறையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆசனங்களின் தொகை 225இலிருந்து 200வரை குறைக்கப்படும். அதில் 100 ஆசனங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி மட்டத்திலும், எஞ்சிய 100 ஆசனங்களுக்கு உறுப்பினர்கள் விகிதாசாரத் தேர்தலினூடாகவும் தெரிவு நடைபெறவுள்ளது.

விகிதாசாரத் தேர்தல் முறையினால், மாகாண மட்டத்திலேயே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இதுவரை அம்முறையின் கீழ் மாவட்ட மட்டத்திலேயே தெரிவு செய்யப்பட்டனர்.

தேர்தல் முறையை மாற்ற அரசு எடுத்துள்ள இம்முடிவு எதிர்வரும் 05.06.1997 அன்று நீதி, அரசியலமைப்பு அமைச்சர் ஜீ.எல் பீரிசினால் அரசியலமைப்புத் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசின் மேற்படி முடிவுக்குப் பல அரசியல் கட்சிகளும் இதுவரை உத்தியோகப்பற்றற்ற மட்டத்தில் ஆதரவைத் தெரிவித்துள்ளன.

05.06.1997 அன்று நடைபெறும் கலந்துரையாடலின் போது புதிய தேர்தல் முறைக்கிணங்க வாக்குச் சீட்டு தயாரிப்பது உட்பட உத்தேச தேர்தல் முறையுடன், திருத்தம் சேர்த்துக் கொள்ளப்படுவதும் செய்யப்படவுள்ளது.

இந் நாட்டுத் தேர்தல் முறை, ஜேர்மன் நாட்டுத் தேர்தல் முறைக்குச் சமனானதல்ல என அரச பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

விரைவில் வெளிவருகிறது:

ஈஸ்டன் டைம்ஸ்

பொத்துவில் தொடக்கம் திருகோணமலை வரை வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல், கலை, இலக்கியக் குரல்களைப் பிரதிபலிக்கும் பிராந்திய மாற்றுப் பத்திரிகை.

செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் ஜூன் 15க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**Managing Director**
Eastern Times News Paper (PVT) Ltd
231, Main Street,
Akkaraipattu - 02 (32400)

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை. கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 334. காலி வீதி. இரத்மலானை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்